REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்

ஜூலை 10 – 16, 2005 July 10 - 16, 2005 28 பக்கங்கள் 16.00

## புலிகளின் காலக்கெடுவும் பிந்திய நிலைமைகளும்

## தயாராகும் படையணிகள்

## சேது சமுத்திரத்திட்டம் இந்தியாவின் நகர்வுகள்



# காங்கிரஸ் - இடதுசாரிகள் முறுகல் மன்மோகன் அரசை கவிழ்க்குமா?

கடந்த காலங்களில் அதாவது 1980 களிலும், 1990 களிலும் எதிரும் புதிருமாக இருந்து வந்த இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சிகளும் காங்கிரஸும் பாரதீய ஜனதா என்ற பொது எதிரியை வீழ்த்த 2000 ஆம் ஆண்டுக்குப் பின் ஒன்று சேர்ந்தன.

1970, 1980களில் ரஷ்ய சார்பு இந்திய அரசுகளுக்குத் தலைமை தாங்கிய காங்கிரஸ் கட்சி ஓரளவு சோஷலிசம் சார்பாக தன்னை காட்டிக் கொண்ட போதும் கம்யூனிஸ்ட் கட்சிகள் காங்கிரஸை முதலாளித்துவக் கட்சியாகவே கணித்து எதிர்த்துவந்தன. காங்கிரஸ் கட்சி இந்த சோஷலிச சார்பிலிருந்து மாறி, 1991 இல் நரசிம்மராவ் தலைமையில் தாராளமய திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியது. அந்த அறிமுகப்படுத்தலை செய்தவரே அப்போதைய நிதி அமைச்சரும் இன்றைய பிரதமருமான மன்மோகன் சிங்தான்.

இந்த தாராளமய பொருளாதாரம் அப்போது கம்யூனிஸ்ட்களின் வெறுப்பை சம்பாதித்தது. எனினும் இதே காலப்பகுதியில் பாரதீய ஜனதா என்ற மதவாதக் கட்சி வெகுவேகமாக வளர்ந்து மத்தியில் ஆட்சியைப் பிடிக்குமளவுக்குச் சென்றது. கம்யூனிஸ்ட்கள் பொருளாதார விடயத்தில் காங்கிரஸுடன் முரண்பட்டாலும் பி.ஜே.பியின் மதவெறியை வெல்வதற்கு காங்கிரஸை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டனர். உலகின் மற்ற பல நாடுகளில் - உதாரணமாக இலங்கையில் கூட கம்யூனிஸ்ட் கட்சிகள் அடக்குமுறை, இனவாதம், மதவாதம் ஆகியவற்றை ஆதரிக்காது ஓரளவு நடுநிலையாக இருக்கத் தெரிந்து கொண்ட கட்சிகளாகும். நியாயம், தர்மம் என்பவற்றை ஓரளவாவது அரசியலில் கடைப்பிடிக்க முயற்சிப்பது கம்யூனிசவாதிகளின் இரத்தத்தில் ஊறிய ஒன்று.

அத்தகைய கம்யூனிச தர்மத்தில் ஊறிய இந்திய கம்யூனிஸ்ட்களும் மதவெறி பிடித்த பி.ஜே.பியை ஒழிப்பதே முக்கியம் என்று கருதியதில் வியப்பில்லை. பொருளாதார முரண்பாடுகளைப் பிறகு தீர்ப்போம். முதலில் காங்கிரஸுடன் சேர்ந்து



ஹர்கிஷன் சிங் சுர்ஜித்

பி.ஜே.பியை ஆட்சியிலிருந்து அகற்றுவோம் என கம்யூனிஸ்ட்கள் கங்கணம் கட்டிச் செயற்பட்டனர்.

இதன் விளைவாகவே சென்ற ஆண்டு லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் வெல்லவும் அதன் பிறகு முதன்முறையாக ஒரு கூட்டணி அரசு அமைக்கவும் முடிந்தது. இந்தியாவின் நான்கு பிரதான கம்யூனிஸ்ட் கட்சிகளில் முக்கியமான மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான ஹர்கிஷன் சிங் சுர்ஜித் என்ற சீக்கியரே காங்கிரஸ் ஆட்சிபீடமேற சூத்திரதாரியாக இருந்து செயற்பட்டவர்.

சோனியா காந்தி எது சொன்னாலும் தலையாட்டும் இந்த சுர்ஜித் சில மாதங்களுக்கு முன்னர் முதிர்வயது காரணமாக ஓய்வு பெற்றுவிட்டார். அன்றிலிருந்து காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் உறவுகள் நன்றாகவே இல்லை. சமீபத்தில் பெற்றோல் விலையை உயர்த்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கம்யூனிஸ்ட்டுகள் தொலைத்தொடர்பு, விமானசேவை முதலியவற்றில் நேரடி அந்நிய முதலீட்டை மன்மோகன் அரசு அதிகரித்ததற்கும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. சுர்ஜித்துக்குப் பின் மாக்ஸிசக் கட்சியின் செயலராக பதவியேற்ற பிரகாஷ்காரத் என்பவர் சுர்ஜித் அளவுக்கு சோனியாவின் நெருக்கமான நண்பர் அல்லர்.

இது மட்டுமன்றி அடுத்த ஆண்டு கேரளா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் சட்டசபை தேர்தல்கள் வர உள்ளன. இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகள் மூன்று மாநிலங்களில் தான் ஆளும் கட்சியாக வருமளவுக்கு செல்வாக்கு உள்ளவர்கள். அவை கேரளா, வங்கம், திரிபுரா ஆகிய மாநிலங்கள். தற்போது கேரளாவில் காங்கிரஸும், வங்கத்தில் கம்யூனிஸ்ட்களும் ஆட்சியிலுள்ளனர். இந்த இரு மாநிலங்களிலும் பி.ஜே.பிக்கு எந்த செல்வாக்கும் கிடையாது. காங்கிரஸ் - கம்யூனிஸ்ட்டு இடையேதான் பிரதான போட்டி. மத்தியில் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவளித்துக் கொண்டு இந்த இரு மாநிலங்களிலும் அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் கம்யூனிஸ்ட்டுகளுக்கு.

ஆனால், காங்கிரஸ் அரசை கவிழ்த்தால் பி.ஜே.பி. ஆட்சிக்கு வர வாய்ப்புண்டாகும் என்ற ஒரே அச்சத்தினால் தொடர்ந்து காங்கிரஸ் அரசை ஆதரிக்க வேண்டிய கட்டாயமும் கம்யூனிஸ்ட்களுக்கு இருக்கிறது. இதனால் இப்போதைக்கு மன்மோகன் அரசைக் கவிழ்க்க கம்யூனிஸ்ட்டுகள் முயற்சிக்க மாட்டார்கள்.

ஆனால், மன்மோகன் சிங் போன்ற ஒரு படிப்பாளி கம்யூனிஸ்ட் நிபந்தங்களை எதுவரை சகிப்பார் என்பதே கேள்வி. மன்மோகன் சிங் கொண்டுவந்த தாராள பொருளாதாரம் பின்னர் பதவிக்கு வந்த பி.ஜே.பியால் இன்னும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இதனால் உலக சந்தையில் வெகுவேகமாக வளர்ந்து வரும் ஒரு நாடாக இந்தியா வந்துவிட்டது. கடந்த ஆண்டு இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் ஒரு போதும் இல்லாத எண்ணிக்கையைத் தொட்டுள்ளது.

இப்படி இருக்கும் போது தொடர்ந்து கம்யூனிஸ்ட்டுகள் முட்டுக்கட்டை போட்டால் மன்மோகன் தனது ராஜினாமாவை சோனியாவிடம் கொடுத்து, எனக்கு இந்த் தொல்லை வேண்டாம் என்று சொல்லிவிடக் கூடும். பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் சாதாரண இந்திய அரசியல் வாதியின் ரகமல்ல மன்மோகன் சிங். ஆனால், சோனியாவுக்கு அவரைவிட்டால் வேறு ஆளைத்தேடுவதும் கடினம்.

பாரதீய ஜனதாவோ எங்கே காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் உறவு முறிந்து தேர்தல் வருமென்று காத்துக் கிடக்கிறது. காங்கிரஸை போலன்றி பி.ஜே.பியின் கூட்டாளிகள் சுதந்திரமாக பொருளாதாரக் கொள்கையில் முடிவெடுக்க பி.ஜே.பியை அனுமதித்தது அக்கட்சிக்கு வாய்ப்பாக இருந்தது. காங்கிரஸுக்கு அவ்வாறின்றி 62 எம்பிக்களைக் கொண்ட இடது சாரிகளை அனுசரித்துச் செல்லவேண்டிய அதேநேரம் பொருளாதார வளர்ச்சியையும் பேண வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

-எஸ்.சுரேந்திரஜித்-



## அரசியல் அம்பலம்

### வி.ஐ.பி.லோஞ்கேட்டு அடம்பிடித்த அம்மையார்?

அண்மையில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஒரு சுவாரஸ்யமான சம்பவம் நடைபெற்றதாம். அதாவது இலங்கைத் தீவில் இருந்து இந்தியாவுக்கு சுற்றம் சூழ எடுபிடிகள சகிதம் முற்றிலும் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றிருந்தாராம் ஒரு தமிழ் நகல் அமைச்சரின் பாரியார்.

இவர் எப்போது சென்றாலும் கூட்டத்தோடுதான் செல்வாராம். ஏன் தெரியுமா? தான் இந்தியாவில் செலவிடும் பணம், பிரயாணச் செலவு, அடியாட்களுக்கு செலவழித்தது எல்லாவற்றையும் ஏதோ வழியில் கவர் பண்ணணிவிடலாம்.

இவர் நெற்றிக்கு வைக்கும் பொட்டு முதல் பட்டுப்புடவை என பல வகையான சரக்குகளையும் இந்தியாவில் வாங்கி மூட்டை கட்டி ஒவ்வொருவருடைய தலையிலும் சுமத்தி விடுவது வழமை.

விமானத்தில் வரும்வரைதான் பிரயாணப் பொதிகள் ஒவ்வொருவரின் வசம் இருக்குமாம். விமானநிலையத்தில் இருந்து வெளிவந்தவுடன் அத்தனை பொதிகளும் அம்மையாருக்காக காத்திருக்கும் வண்டியில் ஏற்றப்பட்டு விடுமாம். கூடப்போனவர்கள் வீசிய கை வெறுங்கையாகவே தமது வீட்டிற்குப் போகவேண்டுமாம்.

இப்படிக் கூட்டத்தோடு சென்று இந்த அரசியல்வாதியான அம்மையார் இம்முறை இந்திய அதிகாரிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டாராம்.

மூட்டை முடிச்சுகளுடன் விமானநிலையம் வந்த அம்மையார் தன்னை வி.ஐ.பி. காரர்களுக்கான நுழைவாயிலில் அனுமதிக்க வேண்டும் தனதுபொதிகள் பரிசோதனை செய்யப் படக் கூடாது. என்று அடம்பிடித்தாராம்.

இந்திய அதிகாரிகள் சும்மாவிடவில்லை அம்மா தாங்கள் என்ன இலங்கையின் ஜனாதிபதியா, இங்கு உத்தியோகப் பூர்வவிஜயம் மேற்கொண்டு வந்தீர்களா என குடைந்து விட்டனராம்.

அம்மாவும் அரசியல்வாதி அல்லவா சும்மா விடுவாரா?

''என்னை உங்களுக்குத் தெரியாதா? நான் ஒரு நகல் அமைச்சரின் மனைவி. அது மட்டுமல்ல தலை நகரை உள்ளடக்கிய ஒரு மாகாணத்தில் ஒரே ஒரு தமிழ் பெண்மணி. எனக்கு மரியாதை தரவேண்டும்'' என்று மரியாதைக்கு பேரம் பேசினாராம்.

''அம்மா நீங்கள் யாராக இருந்தாலும் எங்களுக்கு என்ன? நாங்கள் எங்களுடைய கடமையை செய்கின்றோம். யாருக்கு முக்கிய பிரமுகர்களுக்கான சலுகைகளையும் வசதிகளையும் வழங்க வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் மனைவிக்கும், வி.ஐ.பி லோஞ் கொடுக்க வேண்டும் என்று கூறப்படவில்லை. தயவு செய்து மூட்டை முடிச்சுகளை அவுத்துக்காட்டுங்கள்'' என எல்லா மூட்டைகளையும் பிச்சு உதறி விட்டார்களாம் இந்திய அதிகாரிகள்.

பாவம் ஒன்றும் செய்ய முடியாதவராக முகத்தை தொங்கப் போட்டுக்கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக சாதாரண பயணிகளுடன் வந்து சேர்ந்தாராம் நகல் அமைச்சரின் மனைவியான அரசியல்வாதி.

இதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த் கொழும்பு வர்த்தகர் ஒருவர் இங்கு வந்தவுடன் நண்பர்களின் காதுகளில் ஊதிவிட்டாராம். இது எப்படி இருக்கு?

### சாராய சாமியார்களின் காதல் சாம்ராஜ்யம்

ஊவா மாகாணத்தில் அரசியல்வாதிகளைக் கண்டாலே இளம்(மரியாதையான) பெண்கள் அலறி அடித்துக்கொண்டு ஓடுகின்றார்களாம். ஏன் தெரியுமா? சாராயச் சாமியார்களின் காதல் நாடகங்கள் அம்பலத்துக்கு வந்துவிட்டதே காரணமாம்.

காலைமுதல் மாலைவரை கஷ்டப்பட்டு உழைக்கும் தோட்டத் தொழிலாளர்கள் களைப்புத்தீர கள்ளுக்குடிக்க வேண்டும் என்று கள்ளுக்கடை திறக்கப்போய் மூக்குடைபட்ட லோக நாயகனின் அட்டகாசம் சகிக்க முடியவில்லையாம்.

இங்கே அண்மையில் ஒரு மாதர்மாநாடு நடத்தப்பட்டதாம். இந்த மாநாட்டுக்குமுன் தலைவரின்பெயரை விற்பனைசெய்ய ஆரம்பித்துவிட்டார். ''ஐயாவிடமும், தம்பியிடமும் எனக்கு அந்தநாள் முதலே நல்ல செல்வாக்கு உண்டு, உங்களுக்கு எல்லாம் என்னால் தொழில் வாய்ப்புகளை வாங்கிக் கொடுக்க முடியும். அதுமட்டும் அல்ல எங்களுடைய அமைப்பின்மூலம் பல சுயதொழில் திட்டங்களையும், கடனுதவிகளையும் பெற்றுத் தருவேன்'' என பல உறுதிகளை மங்கையர்களுக்கு வாரி வழங்குகின்றாராம்.

தனிப்பட்ட முறையில் பெயர், விலாசம் எல்லாவற்றையும் பெரிய லிஸ்ட் போட்டு வைத்திருக்கும் இந்த லோக நாயகன் நங்கையர்கள் நாடி, என்னை நாதனாக ஏற்றுக் கொள்ளுங்கள். லோக நாயகிகளுக்கு ஏன் நான் நாயகனாக இருக்கக் கூடாது என காதல் வசனம் பேசுகின்றாராம்.

பாவம்.ஏமாந்துபோன சில சிட்டுகளை சமயம் பார்த்து மடக்கி விடுகின்றாராம். இந்தக் கள்ளுக்கடை முதலாளி சில சமயங்களில் போதை தலைக்கேறிய நிலையில் தனது திருவிளையாடல்களை நண்பர்களிடம் கூறி பெருமை அடித்துக்கொள்கிறாராம்.

என்ன ஐயா இப்படிப் பேசுகின்றீர்கள். மேலிடத்துக்குப் புகார் போய்விட்டால் உங்கள் தலைக்கே ஆபத்தாகிவிடாதா? என நண்பர்கள் அறிவுரை கூறினால் போங்கடா தம்பி போங்க. எங்கள் சாம்ராஜ்யத்தில் இது எல்லாம் சகஜம் என்று ஜம்பம் பேசுகிறாராம் அந்த லோக நாயகர். நாதா இது உனக்குப் போதாதா என்று நல்ல பெண்கள் இவரைக் கண்டாலே தூர ஓடிவிடுகின்றனராம். இந்த அரசியல்வாதியின் செய்கைகள் அவ்வளவு நாற்றம் அடிக்கிறதாம். பாவம். ஊவாவுக்கு வந்த கேடு.

### இரண்டாவது பிரஜைக்கு இக்கட்டான நிலை

''வந்ததும் வந்தது சுனாமி, நாட்டை மட்டும் அல்ல அரசியல் வாதிகளையும் அல்லவா ஆட்டி வைத்து வேடிக்கை பார்க்கிறது'' என்று ஆதங்கப்பட்டார் மலையக அபிவிருத்திக்கும், தபாற்கந்தோர்களுக்கும் பொறுப்பான கம்பளை ரத்னத்தார்.

''என்ன அங்கிள். உங்களுக்கு ஏதும் பிரச்சினை ஏற்பட்டு விட்டதா?'' என்றோம்.

''இல்லை மாப்பிள்ளே. எல்லாம் இந்த இரண்டாவது மனிதனைத்தான் கூறினேன். இந்த ஆள் வாயைத்திறந்தாலும் பாவம். எதையும் கூறினாலும் பாவம் என்றாகிவிட்டது.''

''நீங்கள் சொல்லுவது புரியவில்லையே அங்கிள். கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களே''

''ஆமாம் மாப்பிள்ளைளே இந்தக் கதிர்காம மஹிந்தர்தானே நாட்டின் இரண்டாவது பிரஜை. ஆனால், இந்த மனிதன் பொதுக் கட்டமைப்பு தொடர்பாக வாயைத் திறக்காமல் வாயை மூடிக்கொண்டிருப்பது அவருக்கே ஆபத்தாக முடிந்துவிட்டது.

அந்தப் பக்கமும் இல்லாமல், இந்தப் பக்கமும் இல்லாமல் இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். பொதுக் கட்டமைப்புத் தொடர்பான நகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க மறுத்து விட்டதைத் தொடர்ந்து அதிகார அம்மணியின் நேரடி விரோதத்தை சம்பாதித்துக்கொண்டார். முன்பு நீங்கள்தான் எனக்கு அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்று நேரடியாகவே கூறிய ஜனாதிபதி இப்போது உடன் பிறப்பை நியமிக்க முயன்று வருகிறார்.

மறுபக்கம் என்னவென்றால் இந்த ஜே.வி.பி.காரவுங்க இரண்டாவது பிரஜையை தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப் போவதாக தம்பட்டம் அடிக்க ஆரம்பித்துவிட்டனர். ஆனால், ஜே.வி.பி கூடாரத்தில் வீரவன்சயா, சோமவன்சயா என்று முட்டி மோதிக்கொண்டிருக்கும்போது எமது இரண்டாவது பிரஜைகளுக்கு எப்படி இடம் கொடுப்பது என்று ஒரு கோஷ்டி முஷ்டியை முறுக்குகின்றதாம்.

இதனால் நீலமும் இல்லை, சிவப்பும் இல்லை என்று இரண்டும் கெட்டான் நிலையில் இரண்டாவது பிரஜை இருக்கிறார். அது தான் கவலை.'' என்றார் கம்பளை ரத்னத்தார்.

''அப்படியானால் அங்கிள் நீங்கள் முயற்சி பண்ணலாம் இல்லையா?''

''ஐயோ சாமி ஆளைவிட்டால் போதும். அந்த வம்பு எல்லாம் எமக்கு வேண்டாம். இப்ப உள்ள மரியாதை போதும்'' என்று கிளம்பிவிட்டார் கம்பளை ரத்னத்தார்.

# விம்பிள்டனில் மீண்டும் பெடரர் ஆதிக்கம்

# மகளிர் பிரிவில் வீனஸ் வில்லியம்ஸ் எழுச்சி

விம்பிள்டன் டெனிஸ் தொடரில் மீண்டும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினார் முதல்நிலை வீரரான சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர். மகளிர் பிரிவில் எவருமே எதிர்பார்க்காத வகையில் முன்னாள் சம்பியனான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் வெற்றிவாகை சூடினார்.



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற விம்பிள்டன் டெனிஸ் தொடர் லண்டனில் கடந்த வாரம் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் சுவிட்ஸர்லாந்தின் பெடரர், அமெரிக்காவின் ரோடிக்கை சந்தித்தார்.

புல்தரைக் களத்தில் மன்னனான பெடரர் எதிர்பார்த்தது போல இந்த ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தினார். முதல் செட்டை 6–2 என்ற கணக்கில் மிக எளிதாகக் கைப்பற்றினார்.

அடுத்த செட்டில் ரோடிக் போராடினார். இதையடுத்து இந்த செட் 'டை–பிரேக்கர்' வரை சென்றது. இதில் வென்ற பெடரர் மூன்றாவது செட்டிலும் முத்திரை பதித்தார். இறுதியில் இவர் 6–2, 7–6, 6–4 என்ற நேர் செட்களில் ரோடிக்கை வீழ்த்தி மீண்டும் மகுடம் சூடினார்.

இதன் மூலம் அமெரிக்காவின் பீட் சாம்ப்ராஸ், ஜோன் போர்க் ஆகியோரது வரிசையில் விம்பிள்டனில் தொடர்ந்து மூன்று முறை (2003,2004,2005) பட்டம் வென்று சாதனை படைத்தார் 23 வயதான பெடரர். தவிர 5ஆவது முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் என்ற பெயரையும் பெற்றார்.

இந்த வெற்றிகுறித்து அவர் கூறுகையில்—

''விம்பிள்டனில் 'ஹாட்ரிக்' பட்டம் வென்றதன் மூலம் சாம்பிராஸ், பிஜோர்ன் போன்ற ஜாம்பவான்கள் வரிசையில் இடம் பெற்றது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இம்முறை இறுதிஆட்டத்தில் ஆடிய ஆட்டமே எனது வாழ்க்கையின் மிகச் சிறந்த ஆட்டமாகக் கருதுகிறேன். இந்த வெற்றி நடை அடுத்த ஆண்டும் தொடரும். எனது தொடர் வெற்றிக்குக் காரணம் தவறுகள் செய்யாமல் விளையாடுவதுதான். என்னுடைய அடுத்த இலக்கு அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீரர் என்ற சாதனை படைக்க வேண்டும் என்பதே.''



— இவ்வாறு பெடரர் கூறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் டெனிஸ் உலகின் முதன்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன்போர்ட், முன்னாள் விம்பிள்டன் சம்பியனும், சக நாட்டு வீராங்கனையுமான வீனஸ் வில்லிம்ஸுடன் மோதினார்.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே சமபலத்துடன் இருவரும் மோதினர். முதல்செட்டை டேவன்போர்ட் 6–4 என்ற கணக்கில் கைப்பற்றினார். 2ஆவது செட்டை வீனஸ் வில்லியம்ஸ் சுதாரித்து 7–6 என்ற கணக்கில் கைப்பற்றினார்.


இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றி இருந்ததால் 3ஆவது செட்டில் ஆட்டம் பரபரப்புடன் நடைபெற்றது. கடுமையான போராட்டத்தின் மத்தியில் வீனஸ் வில்லியம்ஸ் 4–6, 7–6, 9–7 என்ற செட்கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

2மணி 45 நிமிட நேரம் இப்போட்டி நடைபெற்றது. டேவன்போர்ட் விளையாடிக் கொண்டிருக்கும்போது முதுகில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. வலியால் அவதிப்பட்டுக் கொண்டே ஆட்டத்தை தொடர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2000, 2001ஆம் ஆண்டுகளில் விம்பிள்டன் பட்டத்தை ஏற்கனவே வீனஸ் வென்றிருந்தார். 2000ஆம் ஆண்டிலும் டேவன்போர்டை வீழ்த்தியே வீனஸ் வில்லிம்ஸ் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது

இந்த வெற்றி குறித்து வீனஸ் கூறுகையில்:—

"எப்போதும்வெற்றி பெற வேண்டும் என்பதே எனது விருப்பம். தற்போது விம்பிள்டனில் கிண்ணம் வென்றதன் மூலம் மீண்டும் நம்பிக்கை பெற்றுள்ளேன். இனிவரும் தொடர்களிலும் என்னால் சாதிக்க முடியும் என நம்புகிறேன்.



எனது அடுத்த இலக்கு அமெரிக்கப் பகிரங்கத்திலும் சம்பியன் ஆவதுதான். 2000, 2001இல் விம்பிள்டன் பட்டம் வென்ற போது அடுத்து நடந்த அமெரிக்கப் பகிரங்கத் தொடர்களிலும் வெற்றிபெற்றேன். இதே போல் இம்முறையும் வெற்றிகிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்''— என்றார்.

விளையாட்டுச் செய்திகள்!

ஷெனிரியா

# மாடல் அழகி இவோன்

# இரவோடு இரவாகக் கொலை

# முன்னாள் காதலன் கைது

கடந்த 01.07.2005 வெள்ளிக்கிழமை அன்று 19 வயதுடைய அழகிய யுவதி ஒருவர் அவருடைய முன்னாள் காதலனால் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்ட செய்தி கொழும்பில் காட்டுத் தீபோல் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ராஜகிரிய என்ற இடத்தில் அமைந்துள்ள ஆடம்பர தொடர்மாடி வீட்டுக் கூட்டமைப்பில் இவரது விடு 23 ஆவது மாடியில் அமைந்துள்ளது.

இவரது தந்தை சுவிடன் நாட்டவர். தாய் இலங்கையர். தனது பெற்றோருடனும் இளைய சகோதரியுடனும் இந்த அழகிய வீட்டில் வசித்து வந்த இந்த நாகரீக அழகியின் பெயர் இவோன் ஜொஹான்சன். இளமை ஊஞ்சலாடும் வாளிப்பான தோற்றம் கொண்ட இவோன் ஒரு கவர்ச்சியான 'மாடல் அழகி.

இந்தக் கொலை பற்றி விசாரணை நடத்திவரும் பொலிஸார் இவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அத்துடன் இந்தக் கொலையைத் தானே செய்ததாகக் கூறிய இவரின் முன்னாள் காதலனும் தற்போது இவரது சகோதரியுடன் காதல் உறவு கொண்டுள்ளவருமான வாலிபர் ஒருவரை பொலிஸார் நீதிமன்ற உத்தரவின்பேரில் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இந்த வாலிபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதே நீதவான் அவரை பதின்நான்கு நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவோன் ஆடை தயாரிப்பு சம்பந்தமான கல்வியை அமெரிக்காவில் மேற்கொண்டு இருந்தார் என்றும் கொழும்புக்கு அவர் தனது விடுமுறையில் வந்தபோதுதான் இந்தக் கொலைச்சம்பவம் இடம் பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டுக்குத் திரும்பிய அவர் முதன் முறையாக பிரபல ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் பங்கு பற்றி விட்டுத் திரும்பிய போதே இந்தப் பரிதாபத்துக்குரிய சம்பவம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

கொரிய நாட்டைச் சேர்ந்தவரும் இவருடன் சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்றவருமான தோழி ஒருவருடன் இவர் அந்த நிகழ்வுக்குச் சென்று இருந்தார். இந்தத் தோழி உட்பட சுமார் இருபது பேரை பொலிஸார் விசாரணைக்குட்படுத்தி உள்ளனர்.

மாடிவீடுகளுக்கு ஏறிச்செல்லும் படிக்கட்டில் முகம் உருக்குலைந்த நிலையில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

அந்த மாடி வீட்டுத் தொகுதியை துப்புரவு செய்யும் பெண் ஒருவரே முதன் முதலாக இவோனின் சடலத்தைக் கண்டு அங்குள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தகவல் கொடுத்தார்.

பின்னர் அவர்கள் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து புலன் விசாரணைகள் ஆரம்பமாயின.



ஸ்ரீலங்கா பொலிஸ் துறையின் விசேட புலனாய்வுப் பிரிவினர் இந்தக் கொலை சம்பந்தமான விசாரணைகளைத் தொடர்ந்து நடத்தி வரும் அதேவேளை தற்போது பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தக் கொலையின் சூத்திரதாரியான இவோனின் முன்னாள் காதலன் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்து இருக்கிறார்.

''எனக்கும் இவோன் ஜொஹான்சனின் தங்கைக்கும் இடையில் காதல் உறவு இருந்து வந்தது. இதற்கு இவோன் தடையாக இருந்தார். அதனால்தான் அவரை நான் கொலை செய்தேன். எனது முதல் காதலி இவோன் ஜொஹான்சன்தான். அவர் அமெரிக்காவுக்கு சென்ற பின்னர் அவரது தங்கையும் நானும் காதலிக்கத் தொடங்கினோம்.

சம்பவதினம் நானும் எனது காதலியும் இரவு விடுதி ஒன்றுக்குச் சென்றோம். அங்கு இவோனை சந்தித்தோம். இரவு இரண்டுமணியளவில் நாங்கள் அங்கிருந்து திரும்பினோம். இவோன் எங்களுடன் வரவில்லை. 23 ஆவது மாடியில் உள்ள எனது காதலியின் வீட்டில் அவரை விட்டுவிட்டு நான் கீழே வந்தபோது அந்த தொடர்மாடிவீட்டு வாசலில் இவோன் நின்று கொண்டிருந்தார்.

அவர் தனது தங்கையுடனான எனது உறவை முறித்துக் கொள்ளுமாறு சத்தமிட்டார். எம் இருவருக்குமிடையில் வாக்குவாதம் முற்றியது. அவரது சட்டையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வர அவர் கீழேவிழுந்தார். நான் தொடர்ந்து அவரை இழுத்துக் கொண்டு 19 ஆம் மாடி வரை வந்தேன். அவரது தலையிலிருந்து இரத்தம் வழிந்தோடிக் கொண்டு இருந்தது.

நான் அவரது ஜீன்ஸை கிழித்துக் கழற்றி அவரது கழுத்தைச் சுற்றி இறுக்கினேன். அவர் மூச்சையுற்றார். நான் அவ்விடத்திலிருந்து வெளியேறிவிட்டேன்." இப்படி அவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இவோனின் தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக மயக்கமுற்றிருந்த அவர் துணியொன்றினால் கழுத்து நெரிக்கப்பட்டதால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று அவரது மரண விசாரணையில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சுடர் ஒளி
ஜூலை 10 – 16, 2005
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஸ்ரீலங்கா அரச தரப்பும் கையெழுத்திட்டு இரண்டு வாரங்கள் கழிந்துவிட்டன.

பொதுக்கட்டமைப்பை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பொதுக்கட்டமைப்பு தென்னிலங்கையில் ஏற்படுத்திய அரசியல் சூறாவளியும் இன்னும் அடங்கவில்லை. பொதுக்கட்டமைப்பை அமுல் செய்ய முடியாத நிலையிலேயே அரசு இருந்து வருவது தெரிகிறது.

பொதுக்கட்டமைப்பை அரசு அமுல் செய்யுமா என்பதில் புலிகளும் அவநம்பிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக சிங்களப் பேரினவாதிகள் கொதிப்படைந்துள்ளனர். பௌத்த மதபீடத் தலைவர்கள், பிக்குகள், பேரினவாதக் கட்சியினர் வீதிக்கு இறங்கி உள்ளனர். பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நீதிமன்றங்களிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஒன்று திரளுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சகல முஸ்லிம் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. கொழும்பில் ஆர்ப்பாட்டத்தையும் இது நடத்தி உள்ளது. கடந்த காலங்களில் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்துவந்த ஐக்கிய தேசியக்கட்சியும் தனது ராகத்தை மாற்றிக் கொண்டுள்ளது. பொதுக்கட்டமைப்பை அது குறைகூறி அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

பொதுக்கட்டமைப்பில் தளம்பல் போக்கை ஐ.தே.க. கடைப்பிடிப்பதால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் அரசும் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற அதன் நிலைப்பாடும் தற்போது சந்தேகத்துக்கிடமாகிவிட்டது.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கத் தயார் என்று அரசு அறிவித்து அதற்கான நடவடிக்கையில் இறங்கும் நிலைமை உருவாகும் போது தான் ஐ.தே.கவின் சுயரூபம் தெரியவரும். தென்னிலங்கை அரசியல் அந்த அளவுக்கு தரம் கெட்டுவிட்டது.

தென்னிலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் சம்பவங்களை நோக்கும் போது புலிகள் அவநம்பிக்கை அடைவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

தென்னிலங்கையில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் அதேவேளையில் புலிகளின் கவனத்தை பொதுக்கட்டமைப்பில் இருந்து திசைதிருப்பும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வைத்து புலிகளின் மீது தாக்குதல் நடத்துவது மூலம் அவர்களின் கவனத்தை திசை திருப்பவும் அவர்களைச் சீண்டி போருக்கு இழுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போதைய நிலையில் நிலைமையை அனுசரித்து நடக்கும் நிலையும் அரச மட்டத்தில் இல்லை.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சமீபத்தில் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்த கருத்து இதனை நன்கு புட்டுக்காட்டுகிறது.

ஒரு சமாதான காலத்தில் அதற்கான சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசியல் படுகொலைகளை புலிகள் புரிகிறார்கள் என்றும், யுத்த நிறுத்த உடன்பாடு அரசைக் கட்டுப்படுத்துவதால் இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் அரசு இருப்பதாகவும் இத்தகைய நிலையில் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் கோரி இருக்கிறார்.

ஆகவே இன்றைய நிலையில் சர்வதேச சமூகமே அரசு மீது அழுத்தத்தைப் பிரயோகித்து பொதுக்கட்டமைப்பை செயற்படுத்த முன்வரவேண்டும்.

# புலிகளின் காலக்கெடுவும் பிந்திய நிலைமைகளும்

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளினூடான தமது போக்குவரத்துத் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தொடர்ந்து, இந்த விடயம் தொடர்பில் தமக்கு உரிய பதிலளிக்க அரசுக்கு 14 நாட்கள் காலக்கெடுவை விடுதலைப்புலிகள் விதித்துள்ளனர்.


அண்மையில் வெலிக்கந்தைப் பகுதியில் 40 போராளிகள் பயணம் செய்த பஸ் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகியது. எனினும் சாரதியின் சாதுரியமான நடவடிக்கை காரணமாக இழப்பு எதுவும் இன்றி பஸ் தப்பித்துக்கொண்டது.

இந்த சம்பவத்தை அடுத்தே புலிகளின் தலைமை கடுஞ் சீற்றத்துக்குள்ளாகியது. இந்த நெருக்கடி நிலை குறித்துப் பேச நோர்வே தரப்பிடமும், கண்காணிப்புக் குழுவிடமும் அவசர சந்திப்பொன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தனர் புலிகள்.

கிளிநொச்சியில் நடந்த சந்திப்பை அடுத்து புலிகள் தமது போக்குவரத்துக்கு, உரிய உத்தரவாதமளிக்க அரசுக்கு 14 நாட் காலக்கெடுவை விதித்துள்ளனர். இந்த காலக்கெடு எதிர்வரும் 14ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

### புலிகளின் சீற்றம்

எனினும் புலிகள் விதித்த காலக்கெடுவுக்கு வேறுபல காரணிகளும் உள்ளன என்று நம்பப்படுகின்றது. அதாவது, கிழக்கில் விடுதலைப்புலிகளின் செயற்பாட்டை தந்திரோபாயமாக முடக்கி புலிகளின் ஆதிக்கத்தை முறியடிக்க இராணுவப் புலனாய்வுப்பிரிவு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் கிழக்கில் போராளிகளின் போக்குவரத்துச் செயற்பாட்டை முடக்கி ஒரு பலவீனமான நிலையை ஏற்படுத்தல், தொடர்ச்சியாக புலிகளின் அரசியல்துறை அலுவலகங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், புலிகளின் போராளிகள் மற்றும் ஆதரவாளர்கள் மீது நடைபெற்றுவரும் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவற்றின்மூலம் கிழக்கில் புலிகளின் முதுகெலும்பை முறிக்கும் கனகச்சிதமான திட்டத்தில் இராணுவப்புலனாய்வுத் துறை ஈடுபட்டுவருகின்றமை புலிகளை எரிச்சலடைய வைத்துள்ளது.



விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்த கண்காணிப்புக்குழுவினர்.

புலிகளுக்கெதிராக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவப்புலனாய்வுப்பிரிவு அதன் துணைப்படைகளையும் பயன்படுத்தி பாரிய வியூகங்களை வகுத்துவருகின்றமை குறித்து புலிகளின் புலனாய்வுப்பிரிவு அறிந்துள்ளது. இதுகுறித்து அது புலிகளின் தலைமைக்கு தெரிவித்ததையடுத்தே அது சீற்றத்துக்குள்ளாகி இருக்கிறது.

"சமாதான முயற்சிகள் என்னும் பெயரில் புலிகளின் ஆதிக்கத்தை உடைக்கும் நடவடிக்கைகளை இனிமேலும் சகிக்கமுடியாது, பொறுக்கமுடியாது" சமாதான முயற்சிகளைச் சற்றுத்தள்ளி வைத்துவிட்டு இந்தப்பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்ற நிலைக்கு புலிகள் வந்துள்ளனர்" என்று தெரிவித்த புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் "அந்த வகையிலேயே 14 நாட்காலக்கெடு விதித்துள்ளோம். அன்று வெலிக்கந்தைத் தாக்குதலில் போராளிகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்குமானால் அன்றே யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முன்னறிவிப்பை வழங்கி இருப்போம்" என்று ஆவேசத்துடன் கூறிமுடித்தார்.

இப்பேச்சுகள் நடந்து கொண்டிருந்த அதே சமயம் மட்டக்களப்பு வலையிறவுப் பகுதியில் பயணம் செய்துகொண்டிருந்த இராணுவப்புலனாய்வுத்துறையை சேர்ந்த மூவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர். அவர்களில் இருவர் அதிகாரிகள் தரநிலையில் உள்ளவர்கள் எனவும் கொல்லப்பட்டபின் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது என்றும் அவர்கள் மட்டக்களப்பு பல்பொடி முகாமில் உள்ள இராணுவப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற கொலை நடவடிக்கையில் அவர்ளுக்கு பங்கு இருப்பதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

கருணாகுழுவினர் சிலர் இப்புலனாய்வாளர்களின் கீழேயே செயற்பட்டுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக்கொலைகளையடுத்து இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட கிழக்கிற்கு சென்று நிலமையை ஆராய்ந்துள்ளார்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து மட்டக்களப்பில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும், பின்பு திருமலையில் படைவீரர் ஒருவரும், ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். இதையடுத்து கிழக்கு மீண்டும் கொதிக்கத் தொடங்கியுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து கண்காணிப்புக்குழுவும் அச்சம் தெரிவித்துள்ளது. நிலைமை தமது கையைவிட்டு முற்றாகப்போகக்கூடும் என அது அஞ்சுகிறது. அப்படி ஒரு நிலைமை வருமானால் அனைத்து சமாதான முயற்சிகளும் பயனின்றிப் போகலாம்.

ஒப்பந்தத்தை பாதுகாக்க வருமாறு இரு தரப்பையும் கண்காணிப்புக் குழு கூறியுள்ள அதேவேளை கிழக்கு கொலைகளை சாதாரணவிடயமாக எடுத்துக்கொள்ள முடியாது எனவும் நிலைமை மோசமடைவதை தவிர்க்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறியுள்ளது.

### அரச தரப்பின் அசட்டைப் போக்கு

படைத்தரப்புடன் பேச்சுகளை கண்காணிப்புகுழு தொடர்ந்து நடத்தி வருகிறது. புலிகளின் காலக்கெடு குறித்து அரச தரப்பு அசட்டையாகவே இருந்துவருகிறது. புலிகளின் போக்குவரத்துப் பிரச்சினை குறித்து படைத்தரப்புடன் தொடர்ச்சியாக பேச்சுகளில் ஈடுபட்டுவருவதுடன் தீவிர ஆலோசனைகளையும் கண்காணிப்புக்குழு மேற்கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

படைத்தரப்பும் இறுக்கமாக - தனது நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காத - வகையில் பேசி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்பு குழு புலிகள் முன்வைத்த சில விடயங்களை படைத்தரப்பிடம் தெரிவித்ததாகவும் அதை படைத்தரப்பு நிராகரித்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இவற்றை அடுத்து காண்காணிப்புக்குழு தீவிர பேச்சுகளிலும், உள் ஆலோசனைகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. நிலைமை மெல்ல மெல்ல கைமீறப்போவதை கண்காணிப்பாளர்கள் உணரத்தொடங்கிவிட்டார்கள் போலவே தெரிகிறது.

காலக்கெடுவுக்குள் சாதகமான பதில் இல்லை என்றால் புலிகள் போர்க்காலத்தில் பயன்படுத்திய

**கலன்**

போக்குவரத்து முறையான – கடற்புலிகளின் பாதுகாப்புடன் போக்குவரத்து செய்தல் மற்றது இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிகளூடாக தமது படையணிகளின் பாதுகாப்புடன் நகருதல் – என்பவற்றைப் பயன்படுத்த முனையக்கூடும். அதை படைத்தரப்பு தடுக்க முனையும் என்பது வெளிப்படையானதே.

புலிகள் யுத்தத்துக்குத் தயாராகிவிட்டனர் என்பதே பரவலாக நம்பப்படும் விடயமாக உள்ளது. பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தமோ அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தமோ இன்னொரு போருக்குத் தடையாக இருக்கப் போவதில்லை என்பது விரைவிலேயே உணரப்படலாம்.

# சுனாமி தாக்கத்தில் இருந்து மீளாத முல்லைத்தீவு மக்கள்

சுனாமித் தாக்கம் ஏற்பட்டு ஆறு மாதங்கள் முடிவடைந்துள்ள போதும் முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அந்தப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் இன்னும் சுனாமித் தாக்கத்தில் இருந்து மீளவில்லை.

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் தற்போது மக்கள் படிப்படியாக மீளக் குடியமரத் தொடங்கியுள்ளனர். பலர் இன்றும் தற்காலிகமான கொட்டகைகளிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். கொட்டகைகளில் வாழ்ந்து வரும் மக்கள் எப்போது நிரந்தர வீடுகளில் வாழப் போகிறோம் என்ற ஏக்கத்துடன் வாழ்கின்றார்கள்.

நகரின் சேதமான கட்டடங்களின் கழிவுகள் அகற்றப்பட்டு உள்ளபோதும் புதிய கட்டடங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. தற்காலிக இடங்களில் வாழ்ந்து வரும் மக்கள் தமக்கு வழங்கப்படும் உணவுப்பொருட்கள் தரமானவை இல்லை என்று தெரிவிக்கிறார்கள். நகர்ப்பகுதியில் தேவாலயம், வீதிகள், வீடுகள், மரங்கள் சேதமான நிலையிலையே காணப்படுகின்றன.

மீனவர்கள் தற்போது தமது தொழிலை மீண்டும் ஆரம்பித்து இருக்கின்றார்கள். எனினும் போதிய அளவு படகுகள், தொழில் உபகரணங்கள் இல்லாமை காரணமாக அவர்களால் முற்று முழுதாக தொழிலில் பாதம் பதிக்க முடியாத நிலை இருந்து வருவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் தெரிவித்தார்.

எனினும் நாள் ஒன்றுக்கு 10,000 கிலோ மீனை வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தற்போது மீனவர்கள் தமது பணிகளை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். தமது சமாசத்திற்கு மட்டும் 3 கோடி ரூபா வரையிலான பொருட் தேசம் ஏற்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மீண்டும் கட்டி எழுப்புவதற்காக தமது அமைப்பு வெளி நிறுவனங்களின் உதவிகளை பெற்று வருவதாகவும் தற்போது சில நிறுவனங்கள் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கரிதாஸ் நிறுவனம் இதுவரை 50 படகுகளையும் GTZ நிறுவனம் 6 படகுகளையும் TRO நிறுவனம் 40 படகுகளையும் நல்லாயன் சபை என்ற அமைப்பு 15 படகுகளையும் மீனவர்களுக்கு வழங்கி இருப்பதாகவும் அவர் கூறினார். அதனை வைத்து தற்போது மீன் பிடித்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எனினும் வலைகள் கிடைக்காமையால் பூரணமாக தொழிலை செய்ய முடியாமல் இருப்பதாகவும் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் தெரிவித்தார்.

சுனாமிக்கு முன்னர் 1539 படகுகள் முல்லைத்தீவுப் பகுதியில் மீன்பிடித்தலில் ஈடுபட்ட போதும் தற்போது 115 படகுகளே இந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

''சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை பராமரிப்பதற்கு 21 இடங்களில் தற்காலிக முகாம்களை அமைத்து அவர்களைப் பராமரித்து வருகின்றோம். இன்னும் அந்த மக்கள் தமது பாதிப்பில் இருந்து மீளவில்லை. அவர்களுக்கு தேவையான அடிப்படை பிரச்சினைகளை ஓர் அளவு தீர்த்து இருக்கிறோம்'' – என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி மோரி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

''தொண்டர் நிறுவனங்களினாலும் வேறு அமைப்புகளாலும் வழங்கப்பட்ட மின்சாரம், சுகாதாரம், தண்ணீர் போன்ற வசதிகள் ஓர் அளவு அந்த மக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தற்காலிக பாடசாலைகளில் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

நிரந்தர வீடுகள் அமைப்பதற்கு எங்களினால் 19 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளன. இவற்றில் இரண்டு இடங்கள் அரச இடங்கள். தற்போது 5900 வீடுகள் அமைப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 17 தனியாருடைய காணிகளைச் சுவிகரிப்பதற்கு உரிய ஆவணங்கள் அனைத்தும் பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன. இன்னும் அதற்குரிய அனுமதி எமக்கு கிடைக்கவில்லை'' என அரச அதிபர் கூறினார்.



''தற்காலிக முகாமில் வாழ்ந்து வரும் மக்களுக்கு வழங்கப்படும் உணவில் குறைபாடுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த உணவானது உலக உணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. வெள்ளை அரிசி இந்த பகுதி வாழ் மக்களுக்கு ஏற்றதாக இல்லை. எனவே தொடர்ந்தும் இந்த உணவுப்பொருட்களை அந்த மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே இது தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து உள்ளோம். விரைவில் இதற்கு மாற்றீடான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன'' என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

வட்டுவாகல் பகுதியில் உள்ள தற்காலிக முகாமுக்கு சென்ற போது அங்கு உள்ள மக்கள் மிகவும் சோர்ந்த நிலையிலேயே இருந்தார்கள். காரணம் மிகவும் மோசமாக வெயில் இருந்தது. தற்போது தற்காலிக கொட்டகைக்குப் பதிலாக சிறிய சுவர் எழுப்பி ஓலை வீடு கட்டி அந்த மக்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த வீடுகளில் எந்த விதமாக தொழில் வாய்ப்பும் போதியளவு ஏற்படுத்தி கொடுக்கப்படாத நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மக்களுடன் கதைக்கின்ற போது பெருமளவான மக்கள் தமக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் தொடர்பாகக் கவலை தெரிவித்தார்கள்.

தமக்கு தற்போது வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் மிகவும் தரம் குறைந்தவை என்றும், வெள்ளை அரிசி, மா போன்றனவற்றில் புழு, பூச்சிகள் இருப்பதாகவும் இதனை உண்ணுகின்ற போது சிறுகுழந்தைகளுக்கு தொற்று நோய் ஏற்படுவதாகவும் பலரும் தெரிவித்தனர்.

சுனாமியின் போது கடலில் இருந்து இரண்டரை கிலோ மீட்டர் தூரம் கடல் நீர் சென்று இருந்தது. இதனை அடுத்து நிரந்தர வீடுகளை 300 மீட்டருக்கு அப்பால் கட்டுவதாக பொதுவான இணக்கம் காணப்பட்டு இருந்தது. எனினும் இதில் தற்போது மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது'' என்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். தேசிய ரீதியில் 200 மீட்டருக்கு அப்பால் வீடு கட்டுவதற்கு இணக்கம் காணப்பட்டு இருப்பதன் காரணமாகவே இந்த மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது.

மகாமுனி

முல்லைத்தீவு நகரை மீண்டும் கட்டி எழுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி குழுவினர் வந்து ஆய்வு செய்து சென்று உள்ளனர். பொதுவாக அனைத்துத் தரப்பினரின் இணக்கத்துடன் புதிய நகரம் உருவாகும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.






கோண்டாவிலில் அண்மையில் C.B கணினி நிறுவனத் திறப்பு விழா நடைபெற்றது. யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி கணினிப் பயிற்சிக்கூடத்தைத் திறந்து வைப்பதையும், நல்லைக் குருமணி அவர்கள் நிகழ்வில் ஆசி வழங்குவதையும் படங்களில் காண்க.


பலரது பாராட்டையும் பெற்ற
மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத் திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவதெனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை விணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் நிறையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோ தத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

ஜூலை 23 – 29 வரை சந்திக்கலாம் (வீடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 36-427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

ஜூலை 09 - 10 ஆம் திகதிகளில்
Vanni Inn., 2 ஆம் குறுக்குத் தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

ஜூலை 12 -18
K.S.N. [illegible]
392/A, [illegible] யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223 [illegible]
021 222 5[illegible]

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# போர் அணிகள் தயார்!

வன்னிப் பெரு நிலப்பரப்பில் அண்மையில், விடுதலைப்புலிகளின் இம்ரான் – பாண்டியன் உந்துருளிப் படையணியின் (பீல்ட்பைக்குறூப்) இரண்டாவது பிரிவு அதிவிசேட சிறப்புப் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறியுள்ளது.

விசேடமாகத் தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நேரடியாக படையணியின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு நிகழ்வினைச் சிறப்பித்தார்.

கடந்த வருட ஆரம்பப் பகுதியில் ஏற்கனவே உந்துருளிப்படையணியின் முதல் பிரிவு பயிற்சிகளை நிறைவு செய்திருந்தது. அந்த நிகழ்விலும் தேசியத்தலைவர் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் அணிவகுப்பு மரியாதையை அடுத்து படையணியின் சாகச நிகழ்வுகள், போர் ஒத்திகைகள் என சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. மூத்த தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.



உந்துருளி படையணி

வன்னிப்பெரும் நிலப்பரப்பின் இதயமான முல்லைத் தீவுப்பகுதியின் பாதுகாப்பை இம்ரான் – பாண்டியன் படையணியே மேற்கொண்டு வருகிறது.

முல்லைத்தீவு வீதிகளில் இரவு – பகலாக உறுமிக் கொண்டு ரோந்து நடவடிக்கையில் இப்படையணி கடந்த வருடம் முதல் ஈடுபட்டு வருகிறது. அதிவிசேட கொமாண்டோ பயிற்சிகளைப்பெற்ற இப்படையணி ஸ்ரீலங்காப்படைகளுக்கு எதிர்காலத்தில் மிகப்பெரும் சவாலாக உருவெடுக்கும் என்றே நம்பப்படுகிறது.

தலைவர் பிரபாவின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கும் இப்படையணி, இராணுவ ஊடுருவல்களை கண்காணிக்கும் தீவிர பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

முக்கியமாக புலிகளின் பகுதிக்குள் நுளையும் தாக்குதல் அணிகளை சுற்றிவளைத்து தாக்கி அழித்தல், கைது செய்தல், தாக்குதல்களை முறியடித்தல் போன்ற சிறப்பு பயிற்சிகளைப் .பெற்றுள்ள இப்படையணி அண்மைக் காலங்களில் பல வெற்றிகர முறியடிப்புகள் சிலவற்றை செய்துள்ளதாகவும் தெரியவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் பிரதான படையணிகளுள் ஒன்றாக உருவாகியிருக்கும் இப்படையணிக்கு புலிகளின் சிறப்பு இராணுவப் பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. இப்படையணிக்கு தேவையான மோட்டார் சைக்கிள்கள் வெளிநாடு ஒன்றில் இருந்து பெருமளவு தருவிக்கப்பட்டுள்ளன என்று அறியக்கிடக்கிறது.

இப்படையணியின் தளபதியாக வேலகன் செயற்பட்டு வருகிறார். இப்படையணி தேவையான சீமயங்களில் தேசியத் தலைவர் மற்றும் தளபதிகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையிலும் செயற்படும்.

இம்ரான் – பாண்டியன் படையணி ஆரம்பத்தில் (யுத்தகாலத்தில்) ஒரு முழு இராணுவப் படையணியாக இருந்து வந்தது. போர் ஓய்வு காலத்தில் புலிகள் ஏற்படுத்திய தமது கட்டமைப்பு மாற்றத்தில் இப்படையணி உத்துருளிப் படைப்பிரிவுக்குள் உள்வாங்கப்பட்டது.

இலங்கை இராணு விசேட அதிரடிப்படையினரின் உந்துருளிப்படையணி நீண்டகாலமாக செயற்பட்டு வருகிறது. அது மக்கள் மத்தியில் அச்சமூட்டி ஒரு உளவியல் போரை கடந்த காலத்தில் நடத்திவந்தது. எனினும் புலிகளின் இப்படையணி குறித்து இலங்கை இராணுவமும் அச்சமடைந்துள்ளதாகத் தெரிகிறது.

புலிகளின் இப்படையணிப் போராளிகள் அதிநவீன ரக ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களுடன் செயற்படும் வகையில் பல கோடி ருபாய்கள் இப்படையணியின் தேவைக்காக புலிகளால் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கே.பி**

லெப்.கேணல் இம்ரான், லெப் கேணல் பாண்டியன் ஆகிய முன்னாள் யாழ்.மாவட்டத் தளபதிகளின் நினைவாக உருவாக்கப்பட்டதே இம்ரான் – பாண்டியன் படையணி ஆகும்.

இந்திய இராணுவ காலத்தில் இவர்கள் உயிரிழந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்திரிக்கா

ஜனாதிபதி சந்திரிக்காவின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புத்தகம் ஒன்றை புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் கிறாம் வில்சன் எழுதி உள்ளார். இதை விரைவில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளிலும் இறங்கி உள்ளார் இந்த நூலாசிரியர்.

உலகப் புகழ்பெற்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய எழுத்தாளர்வரிசையில் முன்னணியில் நிற்பவர் கிறாம் வில்சன்.

"இந்த நூலுக்கு சி.பி.கே என்று மகுடமிட்டுள்ளார் நூலாசிரியர். உலகத் தலைவர்கள் மத்தியில் ஜனாதிபதி சந்திரிக்கா, சி.பி.கே என்ற முதல் எழுத்துக்களினாலேயே அழைக்கப்படுகிறார்.

சந்திரிக்காவின் தனிப்பட்ட வாழ்க்கையுடன் அவரது அரசியல் வாழ்க்கையையும் அலசுகின்றது இந்த நூல்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கரமசிங்க ஆகியோரையும் இந்நூல் விட்டுவைக்கவில்லை.

திறந்த மனதுடன் இது எழுதப்பட்டுள்ளது என்று சொல்கின்றார் நூலாசிரியர் கிறாம் வில்சன்.

"நாணயம் தவறிவிட்டார்கள்... நாணயம் தவறிவிட்டார்கள் என்று தலைவர் புலம்பிக் கொண்டு இருக்கிறாரே, என்ன விஷயம்?"

"அவருக்கு எடைக்கு எடை நாணயம் தருவோம் என்று சொன்ன கட்சிக்காரர்கள் இப்ப கை விரிச்சுட்டார்களாம்."



## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.30 | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | மேஸ்க் கார்டூன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டொப் 10 மூவீஸ் |
| 11.00 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | இப்படிக்கு நீங்கள் | இயக்குனர் பார்வை |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | மங்கையர் தெரிவு | மங்கை | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | றிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (சித்திரம்) | (கிளசிக்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | சுப்பர் 10 |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் | நினைவுகள் |
| 5.00 | கிய பியர்ஸ் | கி–மான் | கிட்ஸ் சூன் | தமிழ் கார்ட்டூன் | என்றும் கலாட்டா | நகைச் சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் சமையல் | சுப்பர் சீன்ஸ் | நினைவுகள் | ருத்ர வீணை | சுப்பர் சீன்ஸ் |
| 6.00 | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இளந்தளிர் | சமய நிகழ்ச்சி | அறிவு | மின்னல் |
| 6.30 | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் திமி தக்க தா | 6.55 முதன்மைச் செய்திகள் மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | ஊரும் உலகும் | வேலன் |
| 7.30 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | எஸ்.எம்.எஸ் ஷோ | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | றாஜ றாஜேஸ்வரி | இளைய கானம் |

# சேது சமுத்திரத்திட்டம்: இந்தியாவின் நகர்வுகள்

சேது சமுத்திரத்திட்டத்தின் தொடக்க விழா அண்மையில் மதுரையில் இந்தியப் பிரதமர் தலைமையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. 150 வருடகால திட்டத்தினை இன்று எடுத்து செயற்படுத்தத் தொடங்கியிருப்பதன் பின்னணி பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.


சர்வதேச தொடர்பாடல் மிக்க கடற்பரப்பை தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கும் நாடுகள் பொருளாதார ரீதியில் கேந்திரத்தன்மையை பெற்றுக் கொள்வதுடன் சர்வதேச நாடுகளின் பாதுகாப்பு கூட்டுறவுகளுக்கு பங்காளிகளாகவும் மாறி தமது இருப்பை உறுதி செய்துகொள்கின்றன. உலக நாடுகளில் பெரும்பாலானவை இதற்கு விதிவிலக்கல்ல. இந்த வகையில் சேது சமுத்திரத்திட்டமும் இந்நோக்கங்களின் அடிப்படையில் தான் இந்தியாவால் மேற்கொள்ளப்படுகிறது.

ஆசியாவில் பொருளாதாரத்தில் மிகவேகமாக வளர்ந்துவரும் சீனா (இன்னும் 20 ஆண்டுகளில் அமெரிக்காவை மிஞ்சும் வல்லரசாக சீனா வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது) மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் எண்ணெய்த் தேவையின் பெரும்பகுதி இந்து சமுத்திரக் கடல் வழியாகவே செல்கின்றது. உலகின் மூன்றிலொரு பகுதி மக்கள் இப்பகுதிலேயே வாழ்கின்றனர்.

இந்த வகையில் சேது சமுத்திரத்திட்டத்தின் மூலம் கேந்திரமுக்கியத்தும் மிக்க தெற்காசியாவில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் முக்கிய வளர்ந்த, வளர்ந்து வரும் நாடுகளின் செயற்பாட்டை மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடமுடியும் என இந்தியா நம்புகிறது.

இந்து சமுத்திரத்தின் கடற்பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் வகையில்தான் இந்தியா இராஜதந்திர வலைப்பின்னலை மேற்கொண்டுவருகிறது.

இதற்கு பெருந்தடையாக அமெரிக்கா இருந்து வருகிறது. தெற்காசிய நாடுகளிலுள்ள வளங்களைச் சுரண்டிக் கொள்ளவும், அங்கு நிலவும் பிரச்சினைகளுக்குள் நுழைத்து பிரச்சினைகளுக்கு எண்ணெய் ஊற்றி இப்பகுதியில் காலூன்ற மேற்கு நாடுகள் முக்கியமாக அமெரிக்கா பகீரதப்பிரயத்தனத்தில் ஈடுபட்டுவருகிறது. அதில் அமெரிக்கா குறிப்பிடத்தக்களவு வெற்றியையும் பெற்றுள்ளது. இந்து சமுத்திரப்பிராந்தியத்தை விட்டு அமெரிக்காவை நீக்க முடியாத நிலைக்கு இந்தியா இன்று தள்ளப்பட்டுள்ளது. இந்து சமுத்திரத்தின் மேற்குப்புறத்தில் உள்ள பல நாடுகளுடனும் கிழக்குப்புறத்தில் உள்ள பல நாடுகளுடனும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டு அங்கு அமெரிக்கா படைகளையும் குவித்து வைத்துள்ளது. இப்பகுதிகளில் தனது இருப்பை உறுதிப்படுத்தியுள்ள அமெரிக்கா இந்து சமுத்திரத்தின் நடுவில் உள்ள டியோ காசியாவில் கால் பதித்து அங்கு



தளமாக்கிக் கொண்டமையானது இப்பிராந்தியத்தில் இது பெரும் பாதகமானதாக இருந்துவருகிறது. 1966இல் பிரிட்டனுடன் அமெரிக்கா செய்த 50 ஆண்டுகால ஒப்பந்தத்தின் படி இரு நாட்டுப்படைகளும் இந்தீவை இராணுவத் தேவைக்குப்பயன்படுத்திக் கொள்ள முடியும்.

டியோகாசியாதீவு பெறும் அதே கேந்திர முக்கித்துவத்தை திருகோணமலை பெறுகிறது. இங்குதான் தமிழர் தாயகமும் தமிழர் போராட்டமும் இந்த அதிகாரப்போட்டிக்குள் நுழைகின்றன.

தமிழர் தாயகத் தலைநகரான திருகோணமலையை கையகப்படுத்த அமெரிக்கா நீண்ட காலமாக திட்டமிட்டு வருகிறது.

இந்திராகாந்தி இந்தியப்பிரதமராக இருந்த காலப்பகுதியில் வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலிக்கான கோபுரம் அமைக்கும் முயற்சி மற்றும் திருமலை எண்ணெய்க் குதங்களை அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயின் பின்னணியுடன் சிங்கப்பூர் நிறுவனம் ஒன்று குத்தகைக்குபெற முயன்றமை எல்லாம் இந்திரா காந்தியால் முறியடிக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சிதான் திருகோணமலையை மையப்படுத்தி 1987இல் இந்திய – இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் இந்தியா மேற்கொண்ட உடன்படிக்கை ஆகும்.

1991இல் ராஜீவ் கொலையின் பின் இந்தியா தலையிடாக் கொள்கையை மேற்கொண்டு வந்த சமயம் மெதுவாக அமெரிக்கா இங்கு உள்நுழைந்துகொண்டது. இவற்றை தொகுத்து பார்த்த இந்தியா உஷாரடைந்தது. பலாலி விமானத்தள புனரமைப்பு, சில வருடங்களுக்கு முன் திருமலை எண்ணெய்க்குதங்களை குத்தகைக்கு எடுத்தமை என்பன முக்கியமானவை ஆகும்.

எனினும் அமெரிக்காவின் தொடர் செயற்பாடுகளை அவதானித்துவரும் இந்தியா இலங்கையில் அமெரிக்கப்பிடியைத் தளர்த்தி தனது உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இலங்கையைக் கொண்டுவர எடுத்துள்ள திட்டம்தான் சேது சமுத்திரத்திட்டம்.

இதில் இந்தியாவுக்கு பெரும் தலைவலியாக இருக்கும் விடயம் விடுதலைப்புலிகள்தான்.

கடலில் மிகவும் பலமான கடற் படையைக் கொண்டுள்ள புலிகள் குறித்து இந்தியாவின் கரிசனை கூடியுள்ளது. அத்துடன் சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் தமிழர்தாயகத்தின் காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்துறை, மன்னார் போன்று சிறுதுறைமுகங்கள் சர்வதேசத் தொடர்பு பெறும் வாய்ப்புகள் அதிகமுண்டு. இதன் மூலம் புலிகளை வளர்த்துவிட வெளிச்சக்திகள் முனையக்கூடும் என இந்தியா அஞ்சுகிறது. இவற்றைத் தடுப்பதன் முதல்கட்டமே காங்கேசன் துறைமுகத்தை புனரமைக்க இந்தியா முன்வந்துள்ளமையாகும்.

இதேவேளை தென்னிலங்கையின் கொழும்பு, காலி துறைமுகங்களில் முக்கியத்துவம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படும்.

தற்போது முப்படைகளையும் கொண்டுள்ள ஒரு படையாக புலிகள் உள்ளதால் இது குறித்து இந்தியா அச்சமடைந்துள்ளமையால் இலங்கை – இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி இருநாடுகளும் பேசிவருகின்றன.

இருநாடுகளும் வெவ்வேறு நோக்கங்களுக்காக ஒரே இலக்கை (புலிகளை) குறிவைத்து ஒப்பந்தம் செய்யும் முயற்சி நடக்கிறது.

புலிகளுக்கு எதிரான கவசமாக இந்தியாவை பயன்படுத்த இலங்கை அரசு விரும்புகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை அது இரண்டு இலக்குகளைக் கொண்டுள்ளது. ஒன்று சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறினால் அதன் முழுப்பாதுகாப்புக்கும் இக்கடற்பாதையின் இருபக்கப்பாதுகாப்பும் இந்தியாவின் பக்கம் இருக்கவேண்டும். இதற்கு குடாநாட்டின் கரையோரமும், பலாலி விமானத்தளமும் இந்தியக் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். இரண்டாவது வெளிநாட்டுச் சக்திகள் இத்தீவில் கால்பதிக்காமல் தடுக்க வேண்டும் என்பவை ஆகும்.

இந்த இலக்குகளை அடைய இந்தியா இலங்கையுடன் எவ்வித தயக்கமும் இன்றி ஒப்பந்தத்தை செய்யக்கூடும். ஏனெனில் இந்தியா தனது வல்லாதிக்கப்பிடியை இப்பிராந்தியத்தில் இறுக்க எதையும் செய்யும் என்பது அதன் கடந்த கால வரலாறு.

பிங்கலன்


இந்தியாவின் இப்பாரிய திட்டத்துக்கு இப்பிராந்தியத்தின் இராணுவச் சமநிலையில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதையும் தமிழர்தாயகத்தில் ஏற்படப்போகும் மாற்றம் எவ்வாறானது என்பதையும் இந்தியாவின் நகர்வுக்கு அமெரிக்காவின் எத்தகையது என்பதையும் அறிய சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டியிருக்கும்.





நம்பகமாகக் குறைந்த விலைக்குப் பதிவு செய்யப்பட்ட கார், வேன், ஜீப், லொரி, பஸ், திரீவீலர் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொள்ள

உங்களுக்காக இப்போது... வாஸனா



ஞாயிறு விசேட வாகனச் சந்தை


வாகனங்களை விற்பதற்காகப் பொறுப்பேற்றல், பரிசோதித்தல், விலைக்கு வாங்குதல் தினமும் மு.ப.9.00 பி.ப. 5.00 வரை

லீசிங் வசதிகள் உடன்

பதிவு செய்யப்படாத வாகனங்கள் மற்றும் புத்தம் புது மோட்டார் சைக்கிள்களுக்காக அழையுங்கள் : தொ.பே : 2241333

வாஸனா ட்ரேடிங் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்

391, நீர்கொழும்புவீதி, நாகொட, வெலிஸர.
தொலைபேசி : 0112-4815637-8, 0777323305
0772-734190, 0714-142776



இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட, மறுசீரமைக்கப்படாத உயர்ரக

மெஸியர் கியூஷன்

MASSEY FERGUSON 240

எந்த வேளையிலும் எத்தனை ட்ரக்டர்களையும் வாங்கி வரக்கூடிய இலங்கையின் மிகப்பெரிய ட்ரக்டர் நிறுவனம்

தேவ் டிரக்டர்ஸ்

196, கண்டி ரோட் யக்கல.

(லங்லோ அருகில்)

தொ : 033-2226010 பெ : 033-2226716

டேவிரக் டென்சியா கம்பைன்ட் ஹாவஸ்டர்



புத்தம் புதியது

- குறைந்த செலவு
- இலகு பாவனை
- அதிகூடிய திறன்
- வீண் விரயாங்களைத் தடுக்கலாம்
- ஆறு மாத உத்தரவாதம் உண்டு
- நாளொன்றுக்கு 2 ஏக்கர் நிலப்பரப்பினை அறுவடை செய்யலாம்.
- இதில் சூடடித்தல் மற்றும் நெல்லினை சாக்கினில் இட்டுக்கட்டுதல் போன்றவற்றையும் மேற்கொள்ளலாம்.

தேவ் டிரக்டர்ஸ் பிறைவேட்லிமிடெட்.
யக்கல. தொலைபேசி - 0332226010




முஸ்தபாவை அரவணைத்துக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகிறது.

ஆசிரியர் நியமனம் தொடர்பான விடயத்தில் பெருந்தோட்டப் பகுதியில் உள்ள முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவதாக பைசல் முஸ்தபா பலதடவைகள் சுட்டிக்காட்டியபோதும் இ.தொ.கா தலைமை அதனை கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ளாமை பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது.

## யார் செய்தது?

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் எதிர்ப்புச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட விவகாரத்தில் அரசாங்கத்தின் ஊடகத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளாராம்.

கட்சியின் பிரசார செயற்பாடுகளில் ஒன்றுதான் இந்தச் சுவரொட்டிப் பிரசாரம் என்று, குறிப்பிட்ட அமைச்சர் ஊடகங்களுக்கும் கருத்துத் தெரிவித்தார். ஆனாலும், ஐக்கிய தேசியக்கட்சியின் உபதலைவர் இதுதொடர்பில் முறையிட்டு சுதந்திரக் கட்சியின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிக்காவுக்கு கடிதமொன்றை அனுப்பினார்.

இதேவேளை, இந்த விடயத்துக்கும் கட்சிக்கும் எதுவித தொடர்பும் கிடையாதென்று ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஐக்கிய தேசியக்கட்சிக்கு தகவல் பறந்திருக்கிறதாம். சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு ஜனாதிபதியுடன் இருந்த நெருக்கம் குறைந்ததே இதற்கான காரணம் என்கின்றனர்.

## முறுகலோ முறுகல்!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையுடன் முரண்பட்டு நிற்கும் பைசல்

''இ.தொ.காவின் சர்வாதிகார தலைமைக்கு கட்சியில் உள்ள ஏனையவர்கள் அடிபணியலாம். ஆனால், நான் அப்படி இல்லை. அரசியலை நம்பி நான் வாழவில்லை'' என்று கூறுகிறாராம் பைசல் முஸ்தபா. இந்த முறுகல் எங்குபோய் நிற்குமோ என்று கட்சிக்குள் பலர் கதைத்துக் கொள்கின்றனர்.

''பைசலுக்கு எதிராக பெரும் நடவடிக்கை எதனையும் எடுக்காதீர்கள். அப்படிச் செய்தால் அவர் தலைவராக சித்திரிக்கப்படுவார்'' என்று இ.தொ.கா தலைமைப் பீடம் கட்சி நிர்வாகத்தினை பணித்துள்ளதாம்.

## கொடுக்கல் வாங்கல்

இதுவும் இ.தொ.கா. பற்றியது தான். இக்கட்சியின்கீழ் இருக்கும் மன்றம் ஒன்றுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் பலகோடி ரூபாய்கள் கைமாறப்பட்டதாம். அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்குவதற்காகத்தான் இந்தளவு பணம் கைமாறப்பட்டதாம்.

இந்தளவு நிதி கிடைத்த ஓரிரு நாட்களில் கட்சியின் மகளிர் மாநாடு பதுளையில் நடத்தப்பட்டது. இதற்கென இந்தியாவிலிருந்து 10 பேராசிரியர்கள் பலலட்சம் ரூபா செலவில் வரவழைக்கப்பட்டனர். மாநாட்டுக்காக மில்லியன் ரூபாய்கள் வாரியிறைக்கப்பட்டதாம்.

எவ்வாறாயினும், இந்தக் கூட்டம் தொடர்பில் இ.தொ.காவின் மூத்த உறுப்பினர்கள் கடும் அதிருப்தி கொண்டிருந்தனராம். தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடம் சாப்பாட்டுக்கு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இதுதேவைதானா என்று சிரேஷ்ட உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இது நியாயம்தானே?

## ஓரங்கட்டப்பட்டார்.

இப்போதெல்லாம் வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பான அந்த அமைச்சர் அதிகார அம்மணியிடமிருந்து சற்று ஒதுங்கியே இருக்கிறாராம். முக்கியமான விடயங்களில் ஆலோசனைகளை வழங்கியபோதும் அதிகார அம்மையார் அதனைக் கவனத்தில் கொள்ளாமை கதிர்காம அண்ணருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறதாம்.

இதன் பிரதிபலிப்பாகத்தான் அண்மையில் ஆங்கில ஊடக மொன்றிற்கு வழங்கிய பேட்டியின்போது நோர்வே அனுசரணையாளர்களை அவர் கடிந்து கொண்டாராம். நோர்வே அனுசரணையாளர்களால்தான் சுதந்திர முன்னணி அரசாங்கம் இரண்டாக பிளவுபட்டதாக ஜே.வி.பியினரும் கதிர் அண்ணருக்கு மூளைச்சலவை செய்துள்ளதால் நோர்வே குறித்து அவர் வெறுப்புடன் இருக்கிறாராம்.

எவ்வாறாயினும், கூடியவிரைவில் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிடுவதற்கு கதிர் அண்ணர் எண்ணியுள்ளார். இதுபற்றி தனக்கு நெருக்கமானவர்களிடம் அவர் கூறிவருகிறாராம்.

## இதிலும் மோசடிதானா?

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தினை அமைக்கும் பொறுப்பை சீன அரசிடம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம்.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக நிதியமைச்சின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் கடந்தவாரம் சீனா சென்று அங்கு முக்கிய பேச்சுகளை நடத்தியதுடன், இது குறித்தான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுவிட்டு நாடுதிரும்பியிருக்கிறார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமானால் 30 மில்லியன் ரூபா கமிஷனாக சீனாவிடமிருந்து கிடைக்கவுள்ளது. இந்தக் கமிஷன் நிதியைப் பெறுபவர் அடுத்த தேர்தலில் ஆளுங்கட்சியின் பிரசாரப் பணிகளுக்கு பெரிதும் உதவவுள்ளாராம். எல்லாம் அந்த கடவுளுக்கு வெளிச்சம்.

## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 168

சொற்சிலம்பம் 168 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஜூலை 16 ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூலை 23ஆம் ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 30ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.166க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 168

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | | | | ■ |
| 7 | 8 | | | ■ | 9 | | 10 |
| 11 | | | ■ | 12 | | ■ | |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | |
| 15 | | 16 | | ■ | 17 | | |
| | ■ | 18 | | 19 | | | |
| 20 | | | ■ | 21 | | | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.166

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 கா | 3 ம | 4 ஈ | ம் | ■ | 5 ச | 6 தி |
| 7 து | ந் | து | பி | ■ | 8 ந | க | ரு |
| 9 ர | தி | ■ | 10 ல | 11 வ | ன் | ■ | வு |
| க | ■ | 12 க | ண் | ணி | ■ | 13 அ | ள |
| 14 வி | 15 நா | டு | ■ | 16 தை | 17 ரி | ய | ம் |
| ■ | 18 வ | ந் | ம் | ■ | 19 சி | ல | ■ |
| 20 ச | ல | ம் | ■ | 21 பா | ■ | 22 வ | 23 தி |
| 24 கா | ர் | ■ | 25 பெ | ரி | ய | ன் | னை |

## சொற்சிலம்பம் போட்டி இல.168

**இடமிருந்து வலம்**

1. ஊர் ஊராக அலைந்து யாசகம் பெறுபவன். சொந்தத் தேசம் இல்லாதவன்.
4. நலம்.
6. வான் வெளியில் கீதமிசைத்து அலையும் பறவை.
7. நாவிதனின் பணிகளுள் ஒன்று.
9. கலியாணம்.
11. அதிகமாகும்.
12. இணக்கச்சொல்.
13. கூந்தல்.
14. கணவன்/ இடம்/ நகரம்.
15. உயர்ந்தது. கட்டப்பட்டது.
17. பதிவு செய்ய.
18. நாடாளுமன்றத் தலைவர்.
20. இதை இருநாள்தான் அறுக்க வேண்டுமாம்.
21. சிறிய/ குள்ள.

**மேலிருந்து கீழ்**

1. ஐந்தாம் திதி.
2. சைவ நாயன்மார்கள் பாடியது.
3. கோபம்.
4. இயல்பு / (ஒருவரின்) குணாம்சம்.
5. கடுமையானது.
8. 'தரம்', 'ஆண்டு' என்ற பதங்களில் அழைக்கப்படுவது.
10. மருத்துவர்.
12. உப்பு/பாலும் அணியுமாம்.
13. ஓர் அரிசி வகை.
14. பத்துப் பாடல்கள் கொண்டது.
15. சேர்த்துக் கட்டியதால் வருவது.
16. சோற்றுக்குச் சேர்த்தும் சாப்பிடுவார்கள்; தனியாகவும் குடிப்பார்கள்.
17. ஒரு தானியம். பச்சை நிறமானது.
19. இளங்கன்று (பெண்).

## சொற்சிலம்பம் போட்டி இல. 165

1. ந.சி.ராஜீவ்,
   நீர்வேலி வடக்கு,
   நீர்வேலி.
2. ஏ.எல்.அருஸ்,
   வாழைப்பழக்கடை,
   புன்னக்குடா வீதி,
   ஏறாவூர்—03.
3. சா.அர்ச்சனா,
   சென்மேரிஸ் வீதி,
   அடம்பன், மன்னார்.

### பாராட்டுப் பெறுவோர்

1. மு.அமரலிங்கம்,
   வின்சென்ற் லேன்,
   வெள்ளவத்தை.
2. ரி.தர்ஷினி,
   புலோலி மத்தி,
   தம்பசிட்டி.
3. சிவா சண்முகலிங்கம்,
   காலி வீதி,
   தெஹிவளை.
4. கே.தமிழ்ச்செல்வி,
   அன்பு வழிபுரம்,
   திருகோணமலை.
5. ச.பானுஜா,
   ஸ்ரீ நந்தனம்,
   ஆரையம்பதி.
6. ம.சத்தியபாலன்,
   மயிலணி,
   சுன்னாகம்.
7. பா.ஏஞ்சலின்,
   சுண்டுக்குளி,
   யாழ்ப்பாணம்.
8. வே.ராஜேஸ்,
   கல்லடி,
   மட்டக்களப்பு.
9. சு.சிவாஜினி,
   புதுக்குடியிருப்பு,
   முல்லைத்தீவு.
10. கே.சஞ்சய்,
   பிரதான வீதி,
   பொகவந்தலாவ.

# அரசாங்கக் கட்டமைப்பு கட்டவிழ்ந்துவிட்டது

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் 2002 பெப்ரவரியில் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் நெருக்கடிக்குள்ளாகி வருகிறது என்று இப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி இருந்தோம். இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் தமது போராளிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்தை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் இல்லாவிடில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர்இருந்தநிலைக்குத்தாம்திரும்பவேண்டி இருக்கும் என்றும் கூறி இது சம்பந்தமான தீர்க்கமான முடிவெடுக்க அரசாங்கத்துக்கு இருவார காலக்கெடு விதித்துள்ளனர்.

**நோர்வேக்குழு - தமிழ்ச்செல்வன் சந்திப்பு**

நோர்வேயின் பதில் தூதுவர் ஒட்வார் லெக்கிரிட், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மற்றும் நோர்வேத் தூதரகத்தின் மூன்று அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று கடந்த 30–06–2005 வியாழக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அப்போது தான் இந்தக் காலக்கெடு பற்றிய தகவல் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

படைத்தரப்போ, அரசோ இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு ஏற்ப நடக்கத் தவறினால் எமது போராளிகளோ அல்லது பொறுப்பாளர்களோ வழமை போல யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் எவ்வாறு தமது பயண ஒழுங்குகளை மேற்கொண்டார்களோ அந்த நிலைப்பாட்டுக்குத் திரும்ப வேண்டி இருக்கும். தொடர்ந்தும் எம்மால் பொறுமை காக்க முடியாது. இருவாரங்களுக்குள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு எமக்கு இதற்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

**கதிர்காமர்**

தமிழ்ச்செல்வன் இவ்வாறு காலக்கெடு விதித்துள்ள அதேவேளை ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கிழக்கில் நடந்துவரும் இராணுவ வீரர்களின் படுகொலைகளுக்கும் ஏனைய கொலைகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறி அரசாங்கம் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னரும் கூட அவர்கள் இவ்வாறு நடந்கொள்வது முறையற்றது என்றும் குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் மறு பரிசீலனை செய்யப்பட்டு சட்டம் தனது கடமையைச் செய்யக்கூடிய வகையில் திருத்தப்பட வேண்டும் என்றும் கூறி இருக்கும் அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நோர்வேக்கு முடியாவிட்டால் சமாதானத்தை முன்னெடுக்கும் அனுசரணைப் பணியில் இருந்து அவர்கள் வெளியேற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

என்றுமே குட்டையைக் குழப்பி தனக்கும் தான் சார்ந்த கட்சிக்கும் அரசியல் லாபம் தேடுவதற்கு வாய்ப்பான கருத்துகளை வெளியிட்டு மூக்குடைபடும் கதிர்காமர் மேற்

## போர் நிறுத்தம் - பொதுக்கட்டமைப்பு நீடிக்குமா?

கண்ட கருத்தை வெளியிட்டு இருக்கும் அதேவேளை, புலிகள் விதித்த காலக்கெடு சம்பந்தமாக விரைந்து அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால புலிகளின் சீற்றத்தை தணித்துக் கொள்ளும் வகையில் பதில் அளித்துள்ளார்.கதிர்காமரின் மூக்கு மீண்டும் ஒரு



தமிழ்ச்செல்வன்

முறை உடைக்கப்பட்டிருக்கிறது.

தம்மைச் சந்தித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் பொக்லண்டிடம்தான் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் என்ற உறுதிமொழியும் திரு ஜயந்த தனபாலாவினால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

**பொதுக்கட்டமைப்பும் சமாதான முன்னெடுப்பும்**

இவ்வாறு உறுதிமொழிகள் வழங்கப்பட்டபோதும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் எதிர்காலம் பற்றிய சந்தேகம் நாடெங்கும் பரவிவருகிறது.அதேவேளை பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசாங்கத்தின் இறைமையை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்ற கூற்றையும் தமிழ்ச்செல்வன் ஒட்டுமொத்தமாக நிராகரித்து இருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கீழ் உள்ள ஏனைய பகுதிகளும் இரு வேறு நிர்வாக அலகுகள். யுத்தநிறுத்த, பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தங்கள் மூலம் இரு தரப்பும் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ள என்றும் அவர் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

''யுத்த நிறுத்த உடன்பாடு சீராக அமுலாக்கப்படும்போது சிங்கள தமிழ் மக்களிடையே சீர்குலைந்துபோய் உள்ள நல்லுறவை அது கட்டி எழுப்பும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு பொதுக்கட்டமைப்பு, திட்டமிட்டபடி சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளை திருப்தி அளிக்கக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்துமானால் சமாதானத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலையை அது உருவாக்க உதவும். அவ்வளவுதான். சமாதான முன்னெடுப்பும்– பொதுக்கட்டமைப்பும் வெவ்வேறு விடயங்கள். இரண்டுக்கும் ஒட்டுப்போட முனைவது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல''– என்றும் அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கையெழுத்திடப்பட்ட சூட்டோடு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஆர்வம்காட்டி வருகின்றது.ஆனால் பொதுக்கட்டமைப்பை சீராக நடைமுறைப்படுத்தினால் மட்டுமே புலிகளைப் பொறுத்தவரையில் இது சம்பந்தமான முடிவொன்றை எடுப்பதற்கு வாய்ப்பாக அமையுமென்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அரசாங்கக் கட்டமைப்பே சீர்குலைந்துபோய் உள்ள நிலையில் அது எப்படி பொதுக்கட்டமைப்பின் மீது சுமத்தப்பட்டுள்ள நிவாரணப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்.

**ஜனாதிபதி தேர்தல்**

அரசாங்கம் செய்வது தெரியாமல் நிலை தடுமாறுகிறது. 22.12.1999இல் ஆரம்பித்த ஜனாதிபதியின் பதவிக் காலம் சட்டரீதியாக இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. ஆனால் ஜனாதிபதி சந்திரிக்கா நாடாளுமன்றத் தேர்தலோ அல்லது ஜனாதிபதித் தேர்தலோ இப்போது நடத்தப்படமாட்டாது என்று அழுங்குப்பிடி பிடிக்கிறார். அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் 2006 நவம்பரில்தான் நடத்தப்படும் என்றும் கூறுகிறார்.

ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிக்கும் பொறுப்பு தேர்தல் கமிஷனரிடமே உள்ளது. இது பற்றி பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து இருக்கிறார்.ஆனால் ஜனாதிபதியோ தனது முடிவில் இருந்து கீழ் இறங்கிவருவதாகத் தெரியவில்லை. இது தொடர்பாகத் தேர்தல் ஆணையாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி பற்றி எதுவும் சொல்வதற்கு இல்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

**அமைச்சர் அனுரா பிரதமர் ராஜபக்ச கயிறிழுப்பு**

அதுமட்டும் அல்ல. சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவா பிரதமர் மஹிந்த ராஜபக்சவா ஜனாதிபதி வேட்பாளர் என்ற குழப்ப நிலை அரசாங்கக் கட்சிக்குள் மட்டுமன்றி நாட்டின் சகல மட்டங்களிலும் தோன்றியுள்ளது.

இதற்கான இறுதி முடிவை எடுப்பதற்காக கடந்த மாதம் 30ஆம் திகதி ஸ்ரீ.ல.சு.கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற இருந்தது. அதுகூட இப்போது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**குழப்பம் நீடிப்பு**

நாட்டின் சகல மட்டங்களிலும் குழப்ப நிலையே தொடர்கிறது. இவற்றை எல்லாம் சமாளித்து நாட்டை சரியான பாதையில் வழி நடத்திச்செல்லும் வல்லமை ஜனாதிபதிக்கு உள்ளதா? தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை அவர் நிறைவேற்றி வைப்பாரா?தற்போது நிலவும் நாட்டு நிலைமையை அலசிப் பார்க்கும்போது இங்கு விரைவில் சுமுக நிலை தோன்றி விடும் என்று கூறக்கூடிய சூழ்நிலைகள் எதுவும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

# யார் ஜனாதிபதி வேட்பாளர்? அனுரா ஆத்திரம்

ஜனாதிபதி வேட்பாளராகும் வாய்ப்பினை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் முயற்சியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தீவிரமாக இறங்கி உள்ளார். ஆனால் அனுரா பண்டாரநாயக்காவும் விட்டேனா பார் என்றுமுஷ்டியை முறுக்கிக் கொண்டு நிற்கிறார். இதுவிடயமாக அண்மையில் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டார நாயக்காவுக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தொம்பே தொகுதியின் அமைப்பாளர் உப்பாலி குணரத்னவுக்கும் இடையில் நடைபெற்ற பரபரப்பான தொலைபேசி உரையாடல் ஒன்றை எமது வாசகர்களுடன் இங்கே பகிர்ந்து கொள்கிறோம்.



அனுரா

அத்தனகல,தொம்பே,இரத்தினபுரி தேர்தல் தொகுதிகள் பண்டாரநாயக்கா குடும்பம் ஆதிக்கம் செலுத்தும் தொகுதிகளாகும். இந்தத் தொகுதிகளில் உள்ள ஸ்ரீ.ல.சு. கட்சி கிளைகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டும் என மேலிடத்தைக் கேட்டுள்ளன.

இந்த கோரிக்கைகளினால் ஆத்திரம் அடைந்த அனுரா பண்டாரநாயக்கா தொம்பே தொகுதியின் ஸ்ரீ.ல.சு.க. அமைப்பாளர் உப்பாலி குணரத்தினாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அவர் அந்த உரையாடலின் இடையே பாவித்த சொற் தொடர்கள் பத்திரிகையில் பிரசுரிக்க முடியாதவை. பண்புள்ள மனிதர்கள் அவற்றைக் கேட்டால் வெட்கித் தலை குனிவர்.

*அந்த உரையாடலை கீழே வாசித்துப் பாருங்கள்.*

''அந்தக் கோமாளியை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு உங்களுக்கு என்னஉரிமை இருக்கிறது?''– இப்படி முழங்கினார் அனுரா.

விட்டாரா குணரத்தினா ''இது தொம்பே தொகுதி எடுத்த ஜனநாயக முடிவு. இதற்கு மேல் என்னால் என்ன செய்ய முடியும் சொல்லுங்கள் பார்க்கலாம்.'' – இப்படி பதில் அளித்தார் அவர்.

அவரது இந்தப் பதில் அனுராவைக் கொதிக்க வைத்தது. அனுரா உரத்த குரலில் இப்படிக் கத்தினார் ''ஓய், தொம்பே தொகுதிக்கு மஹிந்த என்ன செய்திருக்கிறார். இந்தத் தொகுதிக்கு ஏதாவது செய்யப்பட்டிருக்குமானால் அதை நான்தான் செய்தேன். உங்களைப் போன்ற முட்டாள்கள் தொடர்ந்தும் தொம்பே தொகுதியின் அமைப்பாளர்களாக இருப்பதற்கு அனுமதிக்கமாட்டேன்''– என்று சவால்விட்டார் அனுரா.(அனுரா தொம்பே தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது)

''நாங்கள் தொம்பே தொகுதிக்கு வேட்பாளர் ஒருவரை நியமிக்கவில்லை. முழு நாட்டுக்குமான வேட்பாளரைத்தான் தெரிவு செய்தோம். ஒரு நாட்டின் ஜனாதிபதியாகும் தகுதி உங்களுக்கு இல்லை. மஹிந்த தான் எங்கள் தெரிவு. அவரால் மட்டும்தான் தேர்தலில் வெற்றிபெற முடியும். இதைக்கேட்டு நீங்கள் ஆத்திரம் அடையலாம். ஆனால் உண்மை இதுதான்''– குணரத்னா அனுராவுக்குக் கொடுத்த பதிலடி இது.

அனுரா திரும்பத் தாக்கினார் இப்படி.

''நான் சந்திரிக்காவுக்கு நீங்கள் ஒரு மோசமான சதிகாரன் என்று சொல்லியிருக்கிறேன் – அவர் உங்களை அளவுக்கு அதிகமாக நம்பிவிட்டார். நான் தொம்பேக்கு புதிய அமைப்பாளரை நியமிப்பேன்''– இத்துடன் நின்றுவிடாமல் மேலும் தொடர்ந்த அனுரா, அந்தத் தொகுதியின் அமைப்பாளராக தான் நியமிக்க உள்ளவரின் பெயரையும் குணரத்னாவிடம் தெரிவித்தார்.

குணரத்னா அமைதியாகச் சொன்னார்.

''ஐயா – இப்போது நீங்கள் சொன்னீர்களே, அவரும் இந்தத் தெரிவின்போது எம்முடன் இருந்தார். மஹிந்தவுக்கு ஆதரவாகத் தனது கையையும் உயர்த்தினார். நீங்கள் விரும்பினால் என்னை அகற்றிவிட்டு அவரை எனக்குப் பதிலாக நியமியுங்கள் – ஆனால் முடிவு ஒன்றாகத்தான் இருக்கும்.'' இவ்வாறு சொல்லி நிறுத்தினார் அவர்.

இந்த வாய்த்தர்க்கம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஸ்ரீ.ல.சு.கவின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவை தொலைபேசியில் தொடர்புகொண்ட அனுரா, இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளராக யாரையாவது முன்மொழிந்து தலைமைப்பீடத்துக்கு அறிவிக்க வேண்டாம் என ஸ்ரீ.ல.சு கட்சியின் அனைத்துக் கிளைகளுக்கும் ஆணை ஒன்றை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.



மஹிந்த

ஜனாதிபதி சந்திரிக்காவுடன் இதுபற்றி ஆலோசித்து முடிவெடுப்பதாக மைத்திரிபால சிறிசேன பதில் அளித்தார்.

# சிறார்களின்



டிலினி, தரம் 3, கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, கல்கிசை



எஸ்.த்பிகா, தரம் 6B அனுவொல வேவல்வத்த, இரத்தினபுரி





# கைவண்ணம்



# யானை பூசணிக்காய்!

முன்னொரு காலத்தில் தவசி, முத்து என்ற இருவர் வசித்து வந்தனர். இருவரும் பக்கத்து வீட்டுக்காரர்கள். அவ்வளவு உயிர் நண்பர்கள் அல்லர்.


தவசி மிகப்பெரிய பணக்காரன். ஆனால், முத்து மிகவும் ஏழை. இருப்பினும் தன்னிடம் உள்ளதைக் கொண்டு திருப்தியாக வாழ்ந்து வந்தான்.

ஆனால், தவசியோ பணக்காரனாக இருந்தாலும் பேராசைக்காரனாக இருந்தான்.

ஒருமுறை முத்து தன்னுடைய தோட்டத்தில் பூசணிக்காய்களை பயிரிட்டிருந்தான். அதில் ஒன்று யானை அளவு பெரிதாக இருந்தது.

அந்த அதிசய பூசணிக்காயை அரசருக்கு பரிசளிக்க விரும்பினான் அந்த ஏழை. எனவே, அதைத் தான் தலையில் சுமந்து வந்து அரசருக்கு காணிக்கையாக கொடுத்தன்.

அரசரும், முத்துவின் ஏழ்மை நிலையை அறிந்து. தனது அன்புக்கு பரிசாக நூறு பொற்காசுகளை வழங்கினார். மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான் முத்து. இந்தச் செய்தி விரைவில் தவசியின் காதுகளில் விழுந்தது. அவ்வளவுதான் ஆத்திரம் தாங்க முடியவில்லை தவசிக்கு. எங்கே முத்துவும் தன்னைப் போலவே பணக்காரனாகி விடுவானோ என்று



ஆத்திரம் கொண்டான்.

எனவே, தானும் அரசருக்கு பரிசு கொண்டு போக ஆசைப்பட்டான். இவன் கொண்டு போன பூசணிக்காய்க்கே அரசர் நூறு பொற்காசுகள் கொடுத்தால், தான் யானை ஒன்றை பரிசாகக் கொடுத்து ஆயிரம் பொற்காசுகளைப் பரிசாகப் பெறலாம் என்று நினைத்தான்.

எனவே, அதிக விலை கொடுத்து குட்டி யானை ஒன்றை வாங்கிக் கொண்டு அரசனைப் பார்க்கச் சென்றான் தவசி.


அரசனோ 'யானையை பரிசாகத் தருகிறான் என்றால் இவன் எத்தனை வசதியானவனாக இருப்பான்? இவனுக்கு நான் எதைப் பரிசாகக் கொடுப்பேன்? இவன் நிச்சயமாக நம்மிடம் பணத்தை எதிர்ப்பார்க்க மாட்டான். எனவே, இந்த அதிசய பூசணிக்காயை இவனுக்கு பரிசாகத் கொடுப்பேன்' என்று நினைத்து பூசணிக்காயைக் கொடுத்தான்.

நொந்து போன தவசி, அந்தப் பூசணிக்காயை தூக்க முடியாமல் இரண்டு நபர்களை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

## தகவல் துளிகள்

1. உலகிலே அதிக பெண் எழுத்தாளர்களைக் கொண்ட நாடு எது?
ரஷ்யா.
2. உலகிலே மிகப்பெரிய உரியினம் எது?
நீலத்திமிங்கிலம்.
3.கொசுக்களே இல்லாத நாடு எது?
பிரான்ஸ்.
4.காகங்களே இல்லாத நாடு எது?
சிங்கப்பூர்.
5.உலகில் உள்ள நீரின் அளவு எவ்வளவு?
1400 மில்லியன் கன லீற்றர்.
6.மீன்களே இல்லாத நதி எது?
ஜோர்தான் நதி.
7. கடலில் வேகமாக ஓடும் மீன் எது?
சுறா.
8.இலங்கையின் தேசிய விலங்கு எது?
சிங்கம்.
9.தரையில் வேகமாக ஓடும் விலங்கு எது?
சிறுத்தை.
10. கம்பளி ஆடைகளை உற்பத்தி செய்யும் மலை எது?
அவுஸ்ரேலியா.
11. உலகின் மிக உயரமான மலை எது?
எவரஸ்ட் சிகரம்.
12. உலகின் மிகப்பெரிய பறவை எது?
தீக்கோழி.
13. வெள்ளி உற்பத்தி செய்யும் நாடு எது?
மெக்சிக்கோ.


*ந.நவஜீகா, புனித பற்றிமா, றோ.க.வித்தியாலயம், உருத்திரபுரம், கிளிநொச்சி.*



மேலே உள்ள இரண்டு படங்களுக்கும் இடையே குறைந்த பட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றை கண்டுபிடியுங்கள்.

**விடைகள்**

| | |
|---|---|
| 1. மரக்கிளை | 5. கைமடிப்பு |
| 2. துடுப்பின் கைப்பிடி | 6. பாறை |
| 3. படகுடிசைன் | 7. புதர்ச்செடி |
| 4.வாலிபரின் தலைமுடி | |



# நகரும் கண்டங்கள்

ஐந்து கண்டங்கள் என்று அழைக்கப்படும் பெரும் நிலப்பரப்புகள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருக்கின்றன என்ற செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்தினாலும் அது உண்மையான செய்திதான். 1910 ஆம்



ஆண்டு அதைப்பற்றி முதன் முதலில் அறிவித்தவர் டெய்லர் என்பவராவார். புவிக்கோளில் உள்ள கண்டங்களும் கடல்களும், 12 ராட்சத பாளங்களின் மீது அமைந்துள்ளன. அவற்றுள் யூரேஷியன், இந்தியன், பசுபிக் அமெரிக்கன், ஆபிரிக்கன், அண்டார்டிக் ஆகிய பாளங்கள் முக்கியமானவை. அந்தப் பாளங்கள் ஒவ்வொன்றும் சுமார் 100 கி.மீட்டர் பருமன் உள்ளவை. அவை மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருப்பதாகவும் அவை நகரும்போது ஒன்றோடு ஒன்று உராய்வதால்தான் நில நடுக்கங்கள் ஏற்படுவதாகவும் கூறுகிறார்கள். கலிபோனியாவில் உள்ள சென் அண்ட்ரூஸ் நிலமுறிவு இந்தப் பாளங்களின் இயக்கத்திற்குச் சிறந்த உதாரணம் என்றும் டெய்லர் கூறுகிறார். அந்தப் பாளங்களின் இயக்க வேகம் மிக மிக மெதுவானது என்றாலும் 1960 ஆம் ஆண்டு சான் பிரான்ஸ்கோவில் ஏற்பட்ட நில நடுக்கத்தின்போது சென் அண்ட்ரூஸ் நில முறிவுப் பகுதி சில நிமிடங்களுக்குள் 6 மீட்டர் தூரம் வரை நகர்ந்து விட்டதாம். அதற்கு என்ன காரணம் என்று புரியாமல் விஞ்ஞானிகள் இன்னும் திகைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

# 'ஸ்கை — கார்'



அமெரிக்காவின் 'ஸ்கை – கார்', (sky car) சர்வதேச தொழிலதிபர்களை உச்சி குளிர வைத்திருக்கிறது. நியூஜேர்சி விமான பொறியிலாளர் பால் மொல்லரின் 30 ஆண்டுகால மனித உழைப்பில் உருவாகி நிற்கும் இதனை அங்குள்ளோர் 'பறக்கும் பிளைமூத்' என்று அழைக்கிறார்கள்.

ஹெலிக்கொப்டர் போல் கிளம்பி, விண்ணில் கார் போல இந்த விமானம் பறந்தோடும். இதில் நான்கு பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும்.

பறக்கும் பிளைமூத் விமானத்தில் நாசெல்ஹோ ரோட்டரி என்ஜினுடன் கூடிய நான்கு புரொப்பல்லர்கள் இருப்பதால், விமானி இதனை நினைத்த மாத்திரமே பறக்க வைத்துவிடலாம். அமெரிக்காவின் போக்குவரத்து நெரிசலுக்கு விலை உயர்ந்த தீர்வாக களமிறங்கியுள்ள இதன் அடக்க விலை ரூபா 30 கோடி.

'கேசோலின்' எனப்படும் பிரத்தியேக எரிபொருள் மூலமாக பறக்கும் பிளைமூத் இயங்குகிறது. எனவே இது விமானம் போல கூச்சல் போட்டுக்கொண்டு கிளம்புவது இல்லை. இதன் மொத்த எடை 2500 கிலோ. இதில் 800 கிலோ அளவுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லலாம். இது செங்குத்தாக மேலேறியதும் சாதாரண கார் போல செயற்படத் தொடங்கி விடுகிறது.

விமானிகள் சௌகரியத்துக்காக விமானி இருக்கும் பகுதியில் அதி தொழில்நுட்பத்தில் உருவாகிய கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வெகு தொலைவில் தெரியும் கட்டடங்கள், மின்சார கடத்திகள் மற்றும் பறவைகள் ஆகியவற்றை துல்லியமாக பார்த்துக் கொள்ளலாம். இது பெரும்பாலும் 70 அடி உயரத்திலேயே பறக்கிறது.

# டூத் பிரஷ்



முதன் முதலில் டூத்பிரஷை உருவாக்கியவர் வில்லியம் அட்டிஸ் என்பவர்.

இவர் 1780 ஆம் ஆண்டு அளவில் இதை தயாரித்தார். எனினும் அடுத்த 100 ஆண்டுகளுக்கு பின்னரே இவரது கண்டுபிடிப்பு பிரபலமடைந்தது

# ஒட்டகச் சிவிங்கியின் உறுமல்



ஒட்டகச் சிவிங்கிகள் பொதுவாக அமைதியான சுபாவம் கொண்டவை. இவை பெரும்பாலும் சத்தம் எழுப்புவது கிடையாது. எப்போதாவது லேசாக உறுமுவது மாதிரி மட்டும் சத்தமிடும்.




# தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மணி

அவுஸ்திரேலிய நாட்டிலுள்ள அருங்காட்சியகத்தில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பழமைவாய்ந்த ஒரு மணி உள்ளது. ஒரு சமயம் தமிழ் நாட்டிலிருந்து இந்தோனேசியாவுக்குச் சென்ற கப்பல் ஒன்று அவுஸ்திரேலியாவுக்கு அருகில் கடலில் மூழ்கியதாம். அந்தக் கப்பலில் இருந்து எடுக்கப்பட்டது இந்த தமிழ் மணி. ஒரு சமயம் அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற அறிஞர் தனிநாயகம் அடிகள் அந்த அருங்காட்சியகத்தில் இதைக் கண்டு மகிழ்ந்ததோடு இந்த தமிழ் மணியை உலகறியச் செய்தார். இதை இன்றும் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வோர் கண்டு ஆனந்தமடைகின்றனர்.

# மின்சார சைக்கிள்



பாதசாரி மனிதனுக்கு புதிய ரக 'மோனா' சைக்கிள் ஒன்று இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. குட்டிகளின் குட்டி கார் போல தோற்றமளிக்கும் இது ஒரு மின்சார சைக்கிள். 12 வோல்ட் மின்சாரத்தில் இது இயங்குகிறது. மணிக்கு 15 கி.மீ. வேகத்தில் பறக்கும் சக்தி வாய்ந்தது.

இந்த 'மோனோ' சைக்கிளில் ஒருவர் மட்டும் பயணம் செய்ய முடியும். பெருந்தெரு ஒன்றில் இது புயலாகப் பறக்கும். தெருவின் சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து புறப்படுகின்ற பொடி வாகனமும் கூட. இதனை அங்குள்ளோர் 'மெகா செக் வேஸ்கூட்டி' என்றுதான் அழைக்கிறார்கள்.

மின்சார சைக்கிள் சக்கரங்களில் டைனமோ பொருத்தி மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதால் இது தானியங்கி ரக வாகனமும் கூட. இங்கிலாந்து நாட்டவரை இறுமாப்பு கொள்ள வைத்திருக்கும் இந்த மோனோ சைக்கிளின் தயாரிப்பாளர் சின்கிளேர் என்பவர். லண்டனின் 'ஆட்டோமொபைல்' பிரம்மாவாக கருதப்படும் இவரது படைப்பு உலக நாடுகளையே விழிவிரிய வைத்துள்ளது.

இங்கிலாந்தை வளையமிடும் மோனோ சைக்கிள் சர்வதேச நாடுகளில் சுழன்று திரியும் நாள் வெகு தொலைவில் இல்லை. இதன் ஒட்டு மொத்த விலை ரு 2லட்சம் தான்.

## ஜப்பானின் பழைய தலைநகரம்

ஜப்பானின் பழைய தலைநகரம் 'யோக்டோ' ஆகும். 1868 இல் தான் டோக்கியோ ஜப்பானின் தலைநகரானது.

இதில் ஒரு விசேஷம் இருக்கிறது. யோக்டோவை திருப்பி வாசித்துப் பாருங்கள். டோக்கியோ வரும்.

# தண்ணீர் இல்லை

கோலா கரடியைப் பற்றி கேள்விப்பட்டிப்பீர்கள். கோலா என்ற வார்த்தை அவுஸ்திரேலிய நாட்டின் பழங்குடி மக்களான அபோர்ஜினி இனத்தவரின் மொழியில் இருந்து உருவானது. இவர்களது மொழியில் கோலா என்றால் தண்ணீர் இல்லை என்று அர்த்தம். இந்தக் கரடிகள் தங்களுக்குத் தேவையான தண்ணீரை யூகலிப்டஸ் என்ற இலைகளைச் சாப்பிடும் போதே பெறுகின்றன. தனியாக தண்ணீர் எதுவும் குடிப்பதில்லை.





# டைனோசர் முதுகெலும்பு

36 அடி நீளமுள்ள டைனோசரின் முதுகெலும்பு ஒன்று ஆர்ஜென்டினா நாட்டின் படகோனியா மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது 16 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசரின் முதுகெலும்பாகும்.

# இயற்கை எரிவாயு

சைபீரிய பகுதியில் உலகிலேயே மிக அதிகமான அளவு இயற்கை எரிவாயு நிலத்தடியில் மண்டிக் கிடக்கின்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கு அப்பகுதியில் இருந்துதான் குழாய்கள் மூலமாக வாயு அனுப்பப்படுகிறது. மேலும் உயர்ரக பெட்ரோலும் அப்பகுதியில் ஏராளமாக கிடைக்கிறது.

# மாலைதீவு




அமைவிடம்:– இந்த சமுத்திரத்தில் இந்தியாவுக்கு. தென்மேற்காக அமைந்துள்ள 1191 தீவுக் கூட்டங்கள்.

பரப்பளவு:– 300 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பும் 300 சதுரகிலோ மீட்டர் நீர்ப்பரப்பும் கொண்டது.

காலநிலை:– வரண்டதும் வெப்பமுள்ளதுமான காலநிலை வடகீழ் பருவக்காற்று (நவம்பரிலிருந்து – மார்ச்வரை), தென்மேல் பருவக்காற்று (ஜூன் – ஒகஸ்ட் வரை) மழை.

நில உபயோகம்:– மொத்த நிலப்பரப்பில் பயிர்செய்யக்கூடிய நிலம் 13.33%. பயிர் வகை 16.67%. 200 தீவுகளில் மக்கள் குடியேற்றம், 80 தீவுகள் உல்லாசப்பயணிகளுக்கான வசதிகள் கொண்டவை.

பொருளாதாரம்:– சுற்றுலாத்துறை, மீன்பிடி, ஆடை உற்பத்தி, படகுகட்டுதல், கைவினைப்பொருட்கள், அரசாங்கத்துக்கு வரி மூலம் கிடைக்கும் வருமானத்தில் 90% இறக்குமதி வரி மூலம் கிடைக்கிறது.



குடிசனத் தொகை:– 2,80 000 மாலைதீவு மக்கள் + 31,000 வெளிநாட்டுத் தொழிலாளர்கள்.

மதம்:– சுனி முஸ்லிம்

மக்கள்:– தென் இந்தியர், அராபியர்.

மொழி:– திவேஹி

அரச உத்தியோக மொழி:– ஆங்கிலம்.

# விடுதலை



மானிட சமூகம் ஓர் உன்னதமான உச்ச நிலை வளர்ச்சியை எட்டிவிட்டது என்றும், இக்கட்ட வளர்ச்சியுடன் மனித வரலாறு முடிவுக்கு வந்துவிட்டது என்றும் புக்குயாமா முன்வைக்கும் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித சமூகத்தின் உயர்கட்ட வளர்ச்சிப் போக்கானது முடிவில்லாத பெரும் பயணமாகத் தொடர்கிறது. அந்த முடிவில்லாப் பயணத்து யாத்திரீகனாக வரலாறும் தொடர்ந்து நடைபோட்டு வருகிறது.

2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், 11 ஆம் திகதி, அமெரிக்கத் தலைநகரான நியூயோர்க்கில், உலகின் பொருளாதார மையமாக வானைத் தொட்டு நின்ற கோபுரங்கள் தாக்கப்பட்டு தகர்ந்து விழுந்த கோர நிகழ்வானது உலக வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. உலக முதலாளியத்தின் உச்ச வளர்ச்சியின் சின்னமாக,' அமெரிக்க சனநாயகத்தின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட கோபுரங்கள் மீது விழுந்த அடி, புக்குயாமாவின் வரலாற்றுக் கோட்பாட்டையும் தகர்த்தது. வரலாறு இன்னும் முடிவுக்கு வந்துவிடவில்லை என்ற செய்தியையே அந்த நிகழ்வு உலகெங்கும் பறைசாற்றியது.

> **தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை - அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை - வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.**

இந்த நிகழ்வை அடுத்து ஒரு புதிய உலக வரலாற்றுப் படலம் கட்டவிழ்ந்தது. அமெரிக்கா, பிரிட்டன் தலைமையில் மேற்குலகம் அணிதிரண்டு உலகப் பயங்கரவாத ஒழிப்பு இயக்கம் என்ற போர்வையில் இஸ்லாமிய அடிப்படைவாத சர்வாதிகாரங்களுக்கு எதிராகப் போர் தொடுத்தது. ஆப்கானிஸ்தானும் பின்பு ஈராக்கும் பெரும் படையெடுப்புகளுக்கு ஆளாகின. இந்நாடுகளில் பழைய ஆட்சியமைப்புகள் கவிழ்க்கப்பட்டு, புதிய ஆட்சிகள் நிறுவப்பட்டன. ஆனால், இங்கு போரும் வன்முறையும் ஓய்ந்து விடவில்லை. அமைதி நிலைநாட்டப்படவில்லை. ஒரு புதிய சர்வதேச நெருக்கடிக்குள் உலகம் சிக்குப்பட்டுள்ளது. ஒரு புதிய பரிமாணத்தில் மனித வரலாற்று இயக்கம் அசையத் தொடங்கியுள்ளது.

***

# உலக வரலாறும் 8 மனித விடுதலையும்

புதிய உலக ஒழுங்கை நிர்ணயிக்கும் சக்தியாக மேற்குலக சனநாயகம் வளர்ச்சி பெற்று வருவதால் இந்தப் பூமியில் மனித அரசியல் ஆட்சிமுறை பூரணத்துவம் பெற்றுவிட்டது என்றும் இதனால் உலக நெருக்கடி நிலைமைகள் தணிந்து வரலாற்று இயக்கம் முடிவுக்கு வந்துவிட்டதென்றும் புக்குயாமா கண்ட தரிசனம் பிழைத்துவிட்டது.

மானிட சமூகம் இன்னும் உன்னதம் பெறவில்லை. மனிதர்களிடையே இன்னும் பிணக்குகள் தீர்ந்துவிடவில்லை. முரண்பாடுகள் நீங்கிவிடவில்லை. மனித

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

சமூகங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்றன. இனங்களிடையே போர் நிகழ்கிறது. பலம் பொருந்திய நாடுகள் பலம் குன்றிய நாடுகள் மீது படையெடுப்புகளை நிகழ்த்துகின்றன. ஆக்கிரமிப்புகள் நடக்கின்றன. ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகக் கிளர்ச்சியும், வன்முறையும் தாண்டவமாடுகின்றன. இந்தப் பூமியில் இரத்த ஆறுகள் ஓடியவாறு இருக்கின்றன. வரலாறு என்றும் [illegible] அமைதி [illegible] இருக்கிறது. மானிடம் இன்னும் விடுதலை பெறவில்லை.

ஒரு புதிய பரிணாமம் நோக்கி நகர்ந்து செல்லும் மனித வரலாற்று இயக்கத்தை எப்படி விளங்கிக்கொள்வது? இன்றைய உலக நெருக்கடி எந்தத் திசையில் செல்கிறது?


உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் அமெரிக்க வல்லரசானது மேற்குலக நாடுகளை அணிதிரட்டி ஆப்கானிஸ்தானுக்கும் ஈராக்கிற்கும் எதிராகத் தொடுத்த யுத்தம், இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தமாகவே கருதப்படுகிறது. இன்னொரு வகையில் பார்க்கப்போனால், மேற்கத்தைய கிறிஸ்தவ உலகிற்கும் இஸ்லாமிய உலகிற்கும் மத்தியிலான மோதலாகவும் இந் நெருக்கடி சித்திரிக்கப்படுகிறது. இரு பெரும் நாகரிகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்கின்றனவா என்ற கேள்வியும் இப்பொழுது எழுப்பப்படுகின்றது. இந்தப் பார்வையின் அடிப்படையில் பிரபல அமெரிக்க வரலாற்று அறிஞரான சாமுவேல் ஹண்டிங்ரனது (Samuel Huntington) 'நாகரிகங்களின் மோதல்' என்ற வரலாற்றுக் கோட்பாடு இன்று மிகவும் பரவலாக மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. ஹண்டிங்ரனின் வரலாற்றுக் கோட்பாடு பற்றி இங்கு சுருக்கமாக விளக்க முயற்சிக்கிறேன்.

1993 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் Foreign Affairs எனப்படும் பிரபல அரசியல் ஆய்வு ஏட்டில் 'நாகரிகங்களின் மோதல்' (Clash of Civilizations) என்ற தலைப்பில் சாமுவேல் ஹண்டிங்ரன் எழுதிய கட்டுரை பெரும் சர்ச்சையையும், தொடர்ச்சியான விவாதத்தையும் ஏற்படுத்தியது.

உலகத்தில் பல்வேறு நாகரிகங்களைச் சேர்ந்த மக்கள் இனங்கள் வாழ்ந்து வருகின்றன. இனிவரும் உலக நெருக்கடியின் மிகவும் ஆபத்தான பரிமாணமாக வெவ்வேறு நாகரிகங்களைச் சேர்ந்த மக்கள் இனங்கள் மோதிக்கொள்வது சாத்தியமாகும். அதாவது, நாகரிகங்களின் மோதல்களாகவே எதிர்காலத்தில் மனித வரலாறு கட்டவிழும். ஹண்டிங்ரனது கட்டுரையின் மையக் கருத்து இதுதான். இந்தக் கருத்து சர்வதேச அரசியல் உலகில் ஒரு சிலுசிலுப்பை ஏற்படுத்தியது.

ஹண்டிங்ரனது கோட்பாடு பற்றிப் பல கேள்விகளும் வாதப் பிரதிவாதங்களும் எழுந்தன. இவை எல்லாவற்றிற்கும் ஒரு தெளிவான, விரிவான விளக்கம் அளிக்கும் நோக்குடன் 1997 ஆம் ஆண்டு, 'நாகரிகங்களின் மோதலும் உலக ஒழுங்கை மீளமைத்தலும்' (The Clash of Civilization and the Remaking of World Order) என்ற தலைப்பில் ஹண்டிங்ரன் ஒரு நூலை வெளியிட்டார். பனிப்போர் யுகத்தின் பின்னர் பரிணாமம் பெற்றுவரும் உலக அரசியல் நிலைமை பற்றிய ஓர் ஆய்வாகவே இந்நூல் அமையப்பெறுவதாக முன்னுரையில் அவர் கூறுகிறார். இந்நூலில் தரப்படும் மையக் கருத்துக்கள் பற்றி இனிப் பார்ப்போம்.

கம்யூனிசம் - முதலாளியம் என இரு துருவங்களாகப் பிளவுபட்டு, முரண்பட்டு நின்ற உலகம் சோசலிசத்தின் சிதைவுடன் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தை அடைந்தது. பனிப்போர் முடிவுக்கு வந்தது. கருத்தியல் முரண்பாடுகளும் முடிவுக்கு வந்தன. சித்தாந்த வேறுபாடுகளும் செயலிழந்து போயின. முன்பு போல, சித்தாந்தங்களும், அரசியல் [illegible] வடிவங்களும், பொருளாதாரத் [illegible]களும் மனித சமூகங்களின் தனித்தன்மையைக் கோடிட்டுக் காட்டவில்லை. பண்பாட்டு வடிவங்களே மனித சமூகங்களின் அடையாளங்களை நிர்ணயிக்கின்றன. சமூகங்களின் தனித்தன்மையை வேறுபடுத்திக் காட்டுகின்றன. மொழி, மதம், பாரம்பரியம், வரலாறு, வழக்கங்கள், நியமங்கள், நிறுவனங்கள் என்ற ரீதியில் பண்பாட்டுக் கோலங்களிலிருந்தே மனித சமூகங்கள் தம்மை இனம் கண்டு கொள்கின்றன. ஒரு குலமாக, இனக் குழுமமாக, மதச் சமூகமாக, தேசிய இனமாக ஒட்டுமொத்தத்தில் ஒரு நாகரிகமாக மக்கள் சமூகங்கள் தம்மை அடையாளம் காட்டிக் கொள்வதற்குப் பண்பாட்டு அம்சங்களே ஆதாரமாக விளங்குகின்றன. பண்பாடானது நாகரிகத்திலிருந்து வேறுபட்டதல்ல. ஒரு பண்பாட்டின் அகன்ற பரிமாணமே நாகரிகமாகும். மனித வரலாறு என்பது மனித நாகரிகங்களின் வரலாறாகும். ஒரு நீண்ட



சாமுவேல் ஹண்டிங்ரன்

முடிவில்லாக் கதையாக மனித நாகரிகங்களின் வரலாறு தொடர்கிறது. உலகின் முதன்மையான நாகரிகங்களுக்கு மதங்களும், மதம் சார்ந்த விழுமியங்களுமே அத்திவாரமாக விளங்குகின்றன. உதாரணமாக, மேற்கத்தைய கிறிஸ்தவ நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம், இந்து நாகரிகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். காலத்தால் சிதைந்து போன நாகரிகங்களும் உண்டு. உதாரணத்திற்கு, சுமேரிய நாகரிகம், எகிப்திய நாகரிகம், கிரேக்க நாகரிகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆனால், அதேவேளை, தோற்றம் முடிவின்றி பல ஆயிரம் ஆண்டுகள் வரை நீடித்து நிலைத்து நிற்கும் நாகரிகங்களும் இருக்கின்றன. நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதே நாகரிகங்களின் சிறப்பம்சமாகும். சாம்ராஜ்யங்கள் எழுச்சியும் வீழ்ச்சியும் அடையலாம்; அரசுகள் தோன்றி மறையலாம். சமூக, அரசியற் புரட்சிகள் வெடிக்கலாம். ஆயினும் இப் பூகம்ப நிகழ்வுகளுக்கு ஈடு கொடுத்து நாகரிகங்கள் நிலைத்து நிற்கலாம். புறநிலை அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து சவால்களை எதிர்கொண்டு, ஒரு படிநிலை வளர்ச்சியில் நாகரிகங்கள் அகற்சி பெற்று நீடிக்கின்றன. நாகரிகங்களுக்கு புவியியல் எல்லைக்கோடுகள் இருப்பதில்லை. பல தேசிய அரசுகளைக் கொண்டதாக, பல இனக் குழுமங்களை உள்ளடக்கியதாக பூதாகார விரிவாக்கம் பெற்ற நாகரிகங்களும் உண்டு. உதாரணத்திற்கு மேற்கத்தைய கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்களைக் குறிப்பிடலாம். இன்றைய நவயுகத்தில் ஏழு அல்லது எட்டு நாகரிகங்களை இனங்கண்டு கொள்ளலாம். மேற்கத்தைய கிறிஸ்தவ நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம், லத்தீன் அமெரிக்க நாகரிகம், ஆபிரிக்க நாகரிகம், சீன நாகரிகம், இந்து நாகரிகம், பௌத்த நாகரிகம் என்ற ரீதியில் உலகப் பண்பாட்டு மையங்களை வகைப்படுத்தலாம்.

இன்றைய உலக நாகரிகங்களில் அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் பெரும் வளர்ச்சி பெற்று வல்லாதிக்கம் படைத்ததாக விளங்குவது மேற்குலக கிறிஸ்தவ நாகரிகமாகும். மேற்குலக நாகரிகத்தின் எழுச்சியும் அதன் வீச்சும் உலகின் ஏனைய நாகரிங்கள் மீது பாரதூரமான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி வந்தது. முன்பு ஒரு காலத்தில் காலனித்துவ அடக்குமுறையாக மேற்குலக நாகரிகம் உலகளாவிய ரீதியில் ஏனைய நாகரிகங்களைச் சீண்டிச் சிதைக்க முற்பட்டது. காலனித்துவ யுகத்தின் பின்பும் மேற்குலக நாகரிகம் உலகத்தை தனது வல்லாதிக்க வியூகத்தினுள் வைத்திருக்க முனைகிறது.

மேற்குலக கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அமெரிக்கா தலைமை வகிக்கிறது. மேற்குலக கிறிஸ்தவ நாகரிகமே மனித குலத்தின் அதியுன்னத பண்பாட்டு வடிவம் என அமெரிக்கா எண்ணுகிறது. மேற்குலக நாகரிகத்தின் பண்பாட்டு விழுமியங்களை ஏனைய நாகரிகத்தின் மீது திணித்துவிட முயல்கிறது. சனநாயகம், தனிமனித சுதந்திரம், திறந்த சந்தைப் பொருளாதாரம், சட்ட ஆட்சிமுறை போன்றன மேற்குலக நாகரிகத்தின் உன்னத பண்புகள் என வரையறுத்து, அவற்றை மனித குலம் பின்பற்ற வேண்டுமென அமெரிக்கா விரும்புகிறது. அதுவே தனது இலட்சியப் பணி எனவும் இறுமாப்புடன் செயற்படுகிறது. அமெரிக்கா தலைமை வகிக்கும் மேற்குலக நாகரிகமானது இராணுவப் படையெடுப்புகளை நிகழ்த்தி ஏனைய நாகரிகங்களைச் சார்ந்த நாடுகளை அடிமைப்படுத்தியும், ஆட்சி மாற்றங்களை நிகழ்த்தியும் நசுக்கி விட முனைகிறது. தனது பொருளாதார நலன்களை மேம்பாடு செய்யும் நோக்கில், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் வாயிலாக ஒரு உலகப் பொருளாதார ஒழுங்கமைப்பை உருவாக்கி ஏனைய நாகரிகங்களின் பொருளாதார வாழ்வைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சிக்கிறது. மேற்குலக நாகரிகமானது முழு உலகத்தையுமே தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரும் நோக்கில் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

மேற்குலக நாகரிகத்தின் ஆதிக்கமும் செல்வாக்கும் ஏனைய உலக நாகரிகங்கள் மீது ஆக்கபூர்வமான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகிறது. முதலாளிய பொருளுற்பத்தி, கைத்தொழில் மயமாக்குதல், நவீனத்துவமாக்குதல் போன்ற மேற்குலகின் வழி முறைகளைத் தழுவி ஏனைய நாகரிகங்களும் பெரு வளர்ச்சி கண்டுவருகின்றன. சீனம், யப்பான் மற்றும் தென் கிழக்கு ஆசிய புலிப் பொருளாதார வடிவங்கள் மேற்குலகிற்குப் போட்டியாக முன்னேற்றம் கண்டுள்ளன. இதனால் மேற்குலக நாகரிகத்தின் மேலாதிக்க நிலை தளர்ந்து வருகிறது. பாரிய வளர்ச்சி கண்டு வரும் கிழக்கு ஆசிய சமூகங்களுடன் ஒப்பு நோக்குகையில் மேற்குலகின் பொருளாதார வளர்ச்சி குன்றிவருகிறது. சனத்தொகை விகிதாசாரமும் வீழ்ச்சி கண்டு வருகிறது. இவற்றைவிட, மேற்கில் தார்மீக ஒழுக்க நெறிகள் சீர்குலைந்து வருகின்றன. வன்முறை, குற்றச் செயல்கள், போதைமருந்துப் பாவனை பெருகி வருகின்றன. குடும்ப உறவுகள் சிதைந்து வருகின்றன. மேற்குலகில், குறிப்பாக அமெரிக்காவில் பல்லினப் பண்பாட்டுக் (Multi-Cultural) கோட்பாடு வலியுறுத்தப்படுவதால் மேற்குலக நாகரிகத்தின் தனித்தன்மை பலவீனமடைந்து வருகிறது. மேற்குலகம், தனது தனித்துவமான பண்பாட்டினை வலுப்படுத்தி வளர்ப்பதற்குப் பதிலாக, அதனை உலகமயப்படுத்த முனைவது ஆபத்தாக முடியலாம். உலகமானது பல்வேறு பண்பாட்டு மையங்களைக் கொண்டுள்ளது. இந்த நாகரிகங்கள் தமது பண்பாட்டுத் தனித்துவங்களைப் பேணி வளர்த்து முன்னேற முயல்கின்றன. இப் பன்முக [illegible]ளது அபிலாஷைகளின் அடிப்படையிலேயே இனிவரும் உலக அரசியல் ஒழுங்கு நிர்ணயிக்கப்படும்.


(தொடரும்)

# ஹிஸ்புல்லாஹ்வின் இராஜினாமா பின்னணி

# மு.காவுடன் இணைந்து அமீர் அலியைக் கவிழ்க்கத் திட்டமா?

முஸ்லிம் அரசியல் அரங்கில் இன்னும் பரபரப்பாகப் பேசப்படும் விடயம் தேசிய ஐக்கிய முன்னணியின் (நுவா) சிரேஷ்ட பிரதித் தலைவரான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அரசு தனக்கு வழங்கிய சிவில் விமான சேவைகள் மற்றும் விமான நிலையத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தது பற்றியதே.

ஆழிப்பேரலை அனர்த்த மீள் கட்டுமான மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்காக புலிகளுடன் இணைந்து அரசு உருவாக்கிய பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு



பசீர் சேகுதாவூத்

தனித்தரப்பு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஹிஸ்புல்லாஹ் கடந்த மாதம் 26ஆம் திகதி தனது சிவில் விமான சேவைகள் மற்றும் விமான நிலையத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

அவர் இராஜினாமாச் செய்ததோடு நின்றுவிடவில்லை. தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும் அமைச்சருமான பேரியல் அஸ்ரப் மற்றும் ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் சேஹு இஸ்ஸதீன் ஆகியோர் 48 மணி நேரத்துக்குள் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலக வேண்டும் என்று காலக்கெடு விதித்தார். அவர்கள் விலகாவிடின் தாம் கட்சியில் இருந்து விலகிவிடப்போவதாகவும் தெரிவித்தார்.

அதன்பின் 48 மணிநேர கால அவகாசம் ஒரு கிழமையாக மாறியது. தற்போது இந்த ஒருகிழமைக் காலக்கெடுவும் கடந்துவிட்டது.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படாவிட்டால் அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்வோம் எனப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட முன்னர் கூறி வந்த முஸ்லிம் அமைச்சர்கள் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டதும் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டனர்.

அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்வதுபற்றி பரிசீலனை செய்வதாகக் கூறிய தேசிய ஐக்கிய முன்னணி பின்னர் இராஜினாமாச் செய்யப்போவதில்லையெனத் தெரிவித்தது. அதேபோல்தான் அமைச்சர் அமீர் அலியும் தெரிவித்தார்.

"முஸ்லிம்களுக்குத் தனித்ததரப்பு வழங்கப்படாவிட்டாலும் பொதுக்கட்டமைப்பில் சமபங்கு வழங்கப்பட்டுள்ளது. உயர் சபையில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் பிராந்திய சபையில் மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளும் இடம்பெறுகின்றனர். இதில் உள்ள மேலதிக குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றால் அமைச்சுப் பதவியில் இருந்துகொண்டுதான் ஜனாதிபதியுடன் கதைத்து அதைச் செய்ய முடியும்" என்று அமைச்சர் அமீர் அலி, தான் அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்ய முடியாமைக்கான காரணத்தைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு முஸ்லிம் அமைச்சர்கள் தங்கள் கொள்கையை ஒரு நாளைக்கு ஒருவிதமாகத் தெரிவித்துக்கொண்டிருந்த சமயமே சற்றும் எதிர்பாராத விதமாக திடீரென தனது பதவியை இராஜினாமாச் செய்தார் ஹிஸ்புல்லாஹ்.

ஹிஸ்புல்லாஹ்வின் இந்த இராஜினாமா முடிவு முஸ்லிம் அரசியல்வாதிகளைத் திடீர் அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் சிலரை மகிழ்ச்சியடையவும் செய்தது.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு மூன்றாம் தரப்பு வழங்கப்படாவிட்டால் அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்வோம் எனக் கூறிய முஸ்லிம் அமைச்சர்கள் தற்போது ஹிஸ்புல்லாஹ்வை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவரின் இராஜினாமாவினால் பொதுக்கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. மாறாக, இதைச் சாட்டாகக் கொண்டு ஹிஸ்புல்லாஹ் அரசியல் லாபம் தேட முனைகிறார் என்கின்றனர்.

ஹிஸ்புல்லாஹ் பதவியை இராஜினாமாச் செய்தாலும், அவரின் உள்நோக்கம் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது அல்ல. தீர்க்கதரிசனமான அரசியல் லாபமே பின்னணியில் உள்ளது என இவர்கள் கூறுகின்றனர்.

இவர்களது விமர்சனத்தை மெய்ப்பிக்கும் வகையில் தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) ஹிஸ்புல்லாஹ்வின் இராஜினாமாக் கடிதத்தின் பிரதிகளை ஊடகங்களுக்கு அனுப்பி, அக்கடிதத்தில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பதவியை இராஜினாமாச் செய்வதாக ஹிஸ்புல்லாஹ் குறிப்பிடவில்லை என்பதை வெளிப்படுத்தியது.

## இராஜினாமாவின் பின்னணி

ஹிஸ்புல்லாஹ் இராஜினாமாச் செய்தமையின் உள்நோக்கம் வேறு. பொதுக்கட்டமைப்பை சாட்டாகக் கொண்டு மக்களின் ஆதரவைத் திரட்டி தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க ஹிஸ்புல்லாஹ் தயாராகின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது அனேகமாக உண்மையாக இருக்கலாம். காரணம் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்படாவிட்டால் அமைச்சுப் பதவிகளைத் துறப்போம் எனக் கூறிய முஸ்லிம் அமைச்சர்கள் தனித்தரப்பு புறக்கணிக்கப்பட்டும் அமைச்சுப் பதவிகளைத் துறக்காததால் முஸ்லிம்கள் இந்த அமைச்சர்கள் மீது வெறுப்படைந்துள்ளனர்.

இந்த நிலையில் அரசியல்வாதியோ அல்லது அரச உயர்பதவியில் உள்ள ஒருவரோ இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது பதவியை இராஜினாமாச் செய்தால் மக்களது ஆதரவு அவர் பக்கம் திரும்புவது அரசியல் யதார்த்தம்.

விமான சேவையில் அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் ஹிஸ்புல்லாஹ்வின் இராஜினாமாக் கடிதத்தை ஏற்கமுடியாது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துவிட்டார். ஜனாதிபதியும் ஹிஸ்புல்லாஹ்வை அழைத்து பேச்சு நடத்தி இருக்கிறார். ஆனால் ஹிஸ்புல்லாஹ் தனது முடிவில் உறுதியாக இருக்கிறார்.

"பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் தனித்தரப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டால் நான் பதவியை மீண்டும் ஏற்கின்றேன்." என்கிறார் ஹிஸ்புல்லாஹ். இல்லையேல் தனது இராஜினாமாவில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படமாட்டாது என்றும் கூறினார்.

ஹிஸ்புல்லாஹ்வின் பதவி விலகலால் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பில் எவ்வித மாற்றத்தையும் செய்யப் போவதில்லை.

ஆனால் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்தி அரசியல் காயை மிகவும் திறமையாக நகர்த்துகிறார் ஹிஸ்புல்லாஹ்.

பேரியல் அஷ்ரப்பும், சேஹு இஸ்ஸதீனும் இராஜினாமாச் செய்வதற்கு விதித்த காலக்கெடு கடந்த நிலையில் ஹிஸ்புல்லாஹ் நிச்சயம் தேசிய ஐக்கிய முன்னணியில் (நுஆ) இருந்து விலகிவிடுவார் என முஸ்லிம் அரசியல் அரங்கில் கதை அடிபடுகிறது.

அப்படி விலகும் ஹிஸ்புல்லாஹ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் மீண்டும் இணைந்து கொள்வார் என்றும் அதற்கான இரகசிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேஹுதாவூத் ஹிஸ்புல்லாஹ்வை கட்சிக்குள் ஈர்ப்பதற்கு முழுமூச்சாகச் செயற்பட்டு வருகிறார் என்று கூறப்படுகிறது.

## அமீர் அலிக்கு வேட்டு

ரிசாத் பதியுதீன், நஜீப்.ஏ.மஜீத், பைலா மற்றும் அமீர் அலி ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகி அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டதிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இந்த நான்கு பேருக்குமிடையில் பகைமை வளர்ந்துகொண்டே போகின்றது.

இதன் ஓர் அங்கமாகத்தான் அமைச்சர் அமீர் அலியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேஹுதொவூத்தும் அண்மைக்காலமாக மோதிக்கொண்டு வருகின்றனர்.

தாங்கள் இருவரும் மோதிக்கொள்வதை நாடு முழுவதும் பார்க்க வேண்டும் என்பதற்காக தொலைக்காட்சியில் நேருக்கு நேர் விவாத நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்தனர்.

பஷீர் சேஹுதொவூத் ஒரு தொலைக்காட்சி நிலையத்துக்கும் அமீர் அலி மற்றொரு தொலைக்காட்சி நிலையத்துக்கும் ஒருவரையொருவர் அழைத்ததால் அது இழுபறிக்கு உட்பட்டு அந்த 'மோதல்' நிகழ்ச்சி இடம்பெறாமல் போனது.

இறுதியில் 'காத்தான்குடி கலாசார மண்டபத்தில் விவாதத்தை நடத்தி மோதுவோம். அங்கு வாருங்கள் என பஷீர் சேஹுதொவூத் அமீர் அலியை அழைத்தார்.

நிறைய மக்களால் அதனைப் பார்க்கமுடியாது எனக் கூறி அமீர் அலி அங்கு ஏற்பாடு செய்யப்படவிருந்த விவாதத்திலும் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

இந்த விவாதத்தின் ஊடாக அவர்கள் இருவருக்குமிடையில் ஏற்படவிருந்த மோதல் தவிர்க்கப்பட்டுவிட்ட போதிலும். உள்ளார்ந்த மோதல் இடம்பெற்று வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மோதலின் அடுத்த கட்டமாகவே ஹிஸ்புல்லாஹ்வை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைத்து எதிர்வரும் தேர்தலில் அமீர் அலிக்கு வேட்டுவைக்க பஷீர் சேஹுதொவூத் முயற்சிசெய்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பஷீர் சேஹுதொவூத், அமீர் அலி மற்றும் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் ஒரே



ஹிஸ்புல்லாஹ்


மாவட்டம் என்பதால் எதிர்வரும் தேர்தலில் ஹிஸ்புல்லாஹ்வை வெல்லவைத்து தான் தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகி அமீர் அலியைக் கவிழ்த்துவிடுவதுதான் பஷீரின் திட்டமாகும்.

-எம்.ஐ.முபாறக்-

இந்தத் திட்டத்தை மனதில் வைத்தே ஹிஸ்புல்லாஹ் தனது பதவியை இராஜினாமாச் செய்தார் என்றும் அதற்கமைய செயற்பட்டு வருகிறார் என்றும் கூறப்படுகிறது..

ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம் காங்கிரஸில் இணைவாரா? அப்படி இணைந்தால் அமீர் அலி தனது நிலையைப் பலப்படுத்த மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை என்ன? இவை பற்றியெல்லாம் சற்றுப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.


நியு மெடிமிக்ஸ் பல்மருந்து (மூலிகை மருந்து)
NEW MEDIMIX TOOTH MEDICINE (HERBAL)




பல் முரசு கரைகிறதா? பல்லில் இரத்தம் கசிகின்றதா? பல் கூச்சமா? பல் முரசு கரைந்து பல் ஆட்டம் காண்கிறதா? இரத்தமும், சலமும் ஏற்பட்டு (பிரியமானவர்களிடம் பழக முடியாதபடி) துர்நாற்றமாக இருக்கின்றதா? இதுதான் தந்தவாயு (பயோரியா) எனப்படும் பல்நோயாகும். இவ்வகை நோய்களை தவிர்த்துக் கொள்ளவும், முரசு நோய் வராமலும், பூச்சிப்பற்களற்றவர்களாக வாழவும், பல்வகையான மூலிகைகளைக் கொண்டு அபூர்வமாக தயாரிக்கப்பட்ட நியு மெடிமிக்ஸ் பல்மருந்து வாங்கி தொடர்ந்து பாவியுங்கள். கரைந்த முரசு வளர்வதுடன், ஆடும் பல்லும் உறுதியடைவதைக் கண்டு நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

இலங்கையில் எல்லா ஆயுர்வேத, ஆங்கில மருந்துக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பாளர்:- (REGI.NO:- C 766)

THEVA INDUSTRIES

No. 51/5, KOOLWADY ROAD, BATTICALOA, Tel: 065-2224019

விலை ரூபா 20/= மட்டுமே

# பித்தன் பதில்கள்

அ.தவச் செல்வன்— கூழாங்குளம்.

கேள்வி:- பித்தா! நீர் தேர்தலில் போட்டியிடுவதானால் என்ன சின்னத்தில் போட்டியிட விரும்புவீர்?



பதில்:— எருமை மாட்டுச் சின்னத்தில். ஏன் என்றால் நான் போஸ்டர் அடித்து ஒட்டும்போது யாராவது நிச்சயம் அதற்குச் சாணி அடிப்பார்கள். அப்போது அது எருமை போட்ட சாணி மாதிரி தத்ரூபமாக இருக்குமே தவிர என்னைக் கேவலப்படுத்தாது அல்லவா?

செ.பரிமளம்— தாவடி.

கேள்வி:- பித்தா! பெண்கள் அழகு கெடாமல் கட்டுடலாக இருப்பதற்கு எது சிறந்தது? உணவுக் கட்டுப்பாடா? நிறைக் கட்டுப்பாடா?

பதில்:— குடும்பக் கட்டுப்பாடு.

சு.தணிகாசலம்—ஆவரங்கால்

கேள்வி:-பித்தா!ஒரு பொடியன் என்னுடன் பழக்கமாகி அடிக்கடி வீட்டுக்கு வந்து போகிறான். அவன் என்னைப் பார்க்க வரும் சாக்கில் என்னுடைய மகளைப் பார்க்கத்தான் வருகிறான். அவனை எப்படி வீட்டுக்கு வராமல் பண்ணுவது?(வராதே என்று நேரடியாகச் சொல்ல மனது வருகுதில்லை)

பதில்:— ரொம்பச் சுலபம். ஒரு லட்சம் ரூபா தேவைப்படுகிறது. கடனாகத் தா அல்லது யாரிடமாவது வாங்கித்தா என்று அவனிடம் கேளும். பொடியன் உமது வீட்டுப் பக்கம் தலை வைத்தும் படுக்க மாட்டான்.

மைதிலி— பருத்தித்துறை.

கேள்வி:-பித்தா! காதலிப்பது தப்பா? காதலிப்பவர்களை ஏன் சிலர் பிரிக்க நினைக்கிறார்கள்? சீரியஸாகப் பதில் தாரும்?

பதில்:— தப்பில்லை— தவறில்லைதான். ஆனால் சிலர் தப்புத் தப்பாகக் காதல் பண்ணி— தப்புத் தவறுகளைப் பண்ணிவிட்டு தொப்பையோடு வந்து தப்புத் தாளம் போடுகிறார்களே! அதனால்தான் எல்லோரும் காதலை தப்பு— தவறு என்கிறார்கள். தனித்தனியாகப் பிரிக்கவும் நினைக்கிறார்கள்.

அ.ஜென்சன்— மல்லாவி.

கேள்வி:-இந்த வார ஜோக் என்ன?

பதில்:—பரீட்சை எழுதிவிட்டு வந்த மாணவன் நேரே கோவிலுக்குப் போய் கடவுளை மன்றாடினான். ''கடவுளே ரோம் நகரத்தை துருக்கியின் தலைநகராக மாறச் செய்''

இதனைக் கேட்ட அவனது நண்பன் கேட்டான். ''துருக்கியின் தலைநகராக எந்த நகரம் இருந்தால் உனக்கென்ன? இதற்கேன் கடவுளிடம் மன்றாடுகிறாய்?''

மாணவன் சொன்னான். ''இன்று என்னுடைய பரீட்சைப் பேப்பரிலே வந்த கேள்வி ஒன்றுக்கு துருக்கியின் தலைநகரம் ரோம் என்று எழுதிவிட்டு வந்துவிட்டேனே!''

கே.ராஜ்குமார்— பரந்தன்.

கேள்வி:-மைடியர் பித்தா! ஆண்களுக்கும் - பெண்களுக்கும் (உடல் அமைப்பை விட) உள்ள வித்தியாசம் என்ன? விரிவாக விளக்கம் தரவும்.

பதில்:—இவர்கள் ஜொள்ளு விடுவார்கள்.

அவர்கள் வழிய வைப்பார்கள்.

இவர்கள் அடங்கிப் போவார்கள்.

அவர்கள் அடக்குவார்கள்.

இவர்கள் தோய்ப்பார்கள்.

அவர்கள் உடுப்பார்கள்.

இவர்கள் சமைப்பார்கள்.

அவர்கள் ருசிப்பார்கள்.

இவர்கள் உழைப்பார்கள்.


அவர்கள் செலவு செய்வார்கள்.

இவர்கள் வாங்குவார்கள்.

அவர்கள் கொடுப்பார்கள்.

இவர்கள் கொடுப்பார்கள்.

அவர்கள் சுமப்பார்கள்.



அ.சுரேன்— முள்ளிவாய்க்கால்.

கேள்வி:-பித்தா! எமது பாரம்பரியப்படி திருமணம் பேசும்போது ஆண்தான் பெண்ணைப் பார்த்து கல்யாணத்துக்கு சம்மதிக்கிறான்.ஆனால் இம்முறையை மாற்றி பெண்கள் ஆண்களைப் பார்த்துத் திருமணம் முடிப்பது என்று கிளம்பினால் ஆண்களின் நிலை என்னவாகும்?

பதில்:— ஊரில் 90 வீதமான ஆண்கள் திருமணம் முடிக்காமல் முதிர் இளைஞர்களாகி( வயது கூடி திருமணம் ஆகாமல் இருக்கும் கன்னிகளை முதிர்கன்னிகள் என்று அழைப்பர்.அதற்கு இது ஆண்பால்)ஏக்கப் பெருமூச்சுடன் வாழ வேண்டிய நிலை ஏற்படும்.

அதேவேளை பல கன்னிகளும் திருமணம் முடிக்காமல் முதிர்கன்னிகளாக வாழ வேண்டிய நிலை ஏற்படும். ஏனென்றால் பெண்களை இப்போது ஆண்கள் பார்த்துவிட்டுத் திருமணத்துக்குச் சம்மதிப்பதால் பெண்ணுக்கு விருப்பமில்லாவிட்டாலும் பெரிசுகள் மிரட்டி, வெருட்டி முடித்து வைத்து விடுகிறார்கள்.ஆனால் பெண்கள் போய் ஆண்களைப் பார்க்க ஆரம்பித்தால் எல்லா ஆண்களையும் இவன் தனது அழகுக்கு ஈடாக இல்லை என்று ஒதுக்கத்தான் செய்வார்கள்.இதனால் அவர்களது திருமணமும் தள்ளிக்கொண்டே போகும்.எனவே தற்போதைய முறைதான். o.k?

மணிமேகலை—கோணாவில்.

கேள்வி:- உம்முடைய மனைவி 'நன்றாகப் பாடுவாரா பித்தா?

பதில்:—ஓ...நன்றாகப் பாடுவாள். ஆனால் அவள் பாடத் தொடங்கியதும் நான் வீட்டுக்கு வெளியே போய் நின்றுவிடுவேன். ஏனென்றால் நான்



அவளுக்கு அடிப்பதாகவும்— அதனால் அவள் கத்துவதாகவும் அண்டை— அயல் வீட்டுக்காரர்கள் நினைத்துவிடக்கூடாது பாருங்கள். அதனால்.

ஆர்.எம்.கதிர்நிலவன்— வன்னி.

கேள்வி:-பித்தா!வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள்.ஸ்ரீலங்கா விமான படையாளரிடம் அதி உச்ச போர் விமானங்களும் - உலங்கு வானூர்திகளும் இருந்தும் புலிகள் அதுபற்றி கிஞ்சித்தும் அஞ்சுவதில்லை. கவலைப்படுவதும் இல்லை. ஆனால் புலிகளிடம் இருக்கும் பயிற்சி விமானத்தைப் பார்த்தே இலங்கை அரசும்- படைகளும் இந்தியாவும் கிலி கொள்கின்றார்களே. ஏன்?

பதில்:— ஸ்ரீலங்கா படையினரைப் பொறுத்த மட்டில் புல்லாங்குழலை வைத்து அடுப்பு ஊதுபவர்கள்.

ஆனால் புலிகளோ அடுப்பு ஊதும் குழலை வைத்தே இனிமையாக புல்லாங்குழல் இசையை வெளிக்கொணரக் கூடியவர்கள். கிலி வருமோ வராதோ.

அஜந்தன்— முள்ளிவாய்க்கால்.

கேள்வி:- பித்தா! எமது கொள்ளுப் பாட்டன் காலத்து மரபுப்படி இந்தக் காலப் பெண்களை- கணவன் இறந்தவுடன் உடன் கட்டை ஏறும்படி சொன்னால் ஏறுவார்களா?



பதில்:—சொல்லிப்பாரும். ஏற்றிவிடுவார்கள் உம்மை.

**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**

பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-



பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

த.சாரங்கன்— விளான்.

கேள்வி:- உங்கள் வீட்டில் மொத்தமாக எத்தனை பேர்?

பதில்:— எங்கள் வீட்டில் ''மொத்தமாக'' யாரும் இல்லை. எல்லோரும் மெல்லியவர்கள்தான் இருக்கிறார்கள்.

வ.தக்ஷலா— வெள்ளவத்தை.

கேள்வி:-உமது வீட்டிலே நீர்தான் எல்லாரின் உடுப்புக்களையும் தோய்ப்பதாகச் சொல்கிறீர்.எல்லோருக்கும் சமைப்பதாகச் சொல்கிறீர். உமது மனைவி செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் நீரே செய்வதாகப் புலம்புகிறீர். இதனைப் பார்த்து உமது பிள்ளைகள் கேலி செய்வதில்லையா?

பதில்:— செய்யத்தான் செய்கிறார்கள். அதுவும் சும்மாவில்லை. ''அம்மாவும் நீயே... அப்பாவும் நீயே'' என்று பாட்டுப் பாடி கேலி செய்கிறார்கள். என்ன செய்வது. எனது தலைவிதி அப்படி.



சி.குகானந்த்— விசுவமடு.

கேள்வி:-பித்தா! உங்கள் மனைவியிடம் சீதனம் வாங்கித்தானே திருமணம் செய்தீர்கள்.அதுதான் மனைவி சமையல், உடுப்புத் தோய்த்தல் எல்லாவற்றையும் உம்மிடம் விட்டுவிட்டு ஜாலியாக இருக்கிறார்.ஐயோ பாவம் நீர்.

பதில்:—பாவம் அல்ல. படுபாவம். தெரியாமல் ஏதோ அந்த நேரத்தில் லம்பாகக் கிடைக்கிறதே என்ற சந்தோஷத்தில் கையை நீட்டிவிட்டேன். ஆனால் அதற்காக இந்த ஆயுள் தண்டனை தேவையா? ஜாலியாகக் கழித்தாலும் பரவாயில்லை. மாசா மாசம் எடுக்கிற சம்பளத்தையும் அவளிடம் கொடுத்துவிட்டு தினமும் பஸ் ஸ்ரக்கும்— பொக்கற் மணிக்கும் தலையைச் சொறிந்துகொண்டு நிற்க— அவள் ஏதோ பிச்சை போடுவது போல் ஐம்பது ரூபாத் தாளை எடுத்து செத்த எலியைத் தூக்கிப் போடுவது போல் எனது கையிலே போடுகிறாளே. கொடுமையிலும் கொடுமையப்பா.

சுகிமோகன்—பாரதிபுரம்.

கேள்வி:-மைடியர் பித்துக்குட்டி. எனது கனவில் தினமும் ஒரு அழகிய ஆண்மகன் வந்து போகிறான். நான் அவனைப் பிடிக்க முற்படும்போதெல்லாம் மறைந்து ஓடிவிடுகிறான். அவனை நான் நேரில் காணும் பாக்கியம் கிடைக்காதா?

பதில்:— காது. ஏனென்றால் அது கனவு.

# விண்வெளிப் புரட்சி

சென்ற நூற்றாண்டில், இராணுவ வீரர்களின் பலத்துடன், அவர்கள் வைத்துள்ள நவீன ரகத் துப்பாக்கி மற்றும் டாங்கி போன்ற இராணுவ சாதனங்கள், போர் விமானங்களின் எண்ணிக்கை, ஆழ் கடலில் அபாயகரமாக உலவும் சப்மரீன்கள் ஆகிய வற்றை வைத்து ஒரு நாட்டின் பலம் கணிக்கப்பட்டது.

இந்த நூற்றாண்டிலோ, செயற்கைக்கோள்கள் செய்த புரட்சியால், ஒரு நாட்டின் வலிமை, அது எத்தனை செயற்கைக்கோள்களைக் கொண்டுள்ளது, எவ்வகையான செயற்கைக்கோள்களைத் தன் வசம் வைத்திருக்கிறது என்பதை வைத்தே நிர்ணயிக்கப்படும்.

போட்டி போட்டுக்கொண்டு, ஒவ்வொரு நாடும் விண் வெளிக்கலத்தில் குதித்து செயற்கைக் கோள் புரட்சியில் தனது வலிமையைப் பெருக்கி வருகிறது.



ஏராளமான பணம் வெள்ளம் போல் இந்தத் துறையில் பாய்கிறது.பெரிய அரசுகளுடன், தனியார் துறையில் வலிமை வாய்ந்தய நிறுவனங்களும் இதில் குதித்துவிட்டன.

இன்னும் சுமார் 10 ஆண்டுகளில் 1700 செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்பட இருக்கின்றன.

இந்த செயற்கைக்கோள்கள் ஒட்டுமொத்த மனித குலத்தையே ஒரு மனிதன் அந்தாட்டிக்காவில் இருந்தாலும் சரி, ஸ்ரீலங்காவில் இருந்தாலும் சரி மாற்றப்போகின்றன.

இன்டர்னெட் எனப்படும் இணையத்தளம்,இன்று உலகை உள்ளங்கைக்குள் சுருக்கி விட்டது. கணினிப் புரட்சிக்குக் காரணகர்த்தாவான பில் கேட்ஸ், விண்வெளிக்களத்தில் ஒரு பெரும் புரட்சியை எற்படுத்த எண்ணுகிறார்.

இப்போது இமைக்கும் நேரத்தில் உங்கள் செய்தி அமெரிக்காவை அடைகிறது. ஆனால் இதைவிட 2000 மடங்கு அதிக வேகத்தில் தகவல் தொடர்பு சாதனமான இன்டர்நெட் தொடர்பைப் பெறவும், அதன் மூலம் அதிகமான தொடர்புகளையும், செய்திகளையும் இமைக்கும் நேரத்துக்குள் அனுப்பவும், பெறவும் அவர் ஏற்பாடுகளைச் செய்யத் திட்டமிடுகிறார்.

ஒரு சொடுக்குப் போடுவதற்குள், ஆயிரக்கணக்கான செய்திகள் உலகின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

இன்னும் பத்து வருடங்களில், செயற்கைக்கோள்கள் மிக மிக மலிவான விலைக்கு விற்பனைக்கு வந்துவிடும். இன்று விமானங்கள் பறப்பதுபோல் செயற்கைக்கோள்கள் அதிக எண்ணிக்கையில் சுற்றும் காலம் விரைவில் வரும்.

## 40 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

# தொடரும் தவிப்பு

திறந்தேயிருந்த அந்த வளாகத்திற்குள் நுழைந்து உள்ளிருந்த கட்டடத்தின் அருகே சென்று நின்றது ஆட்டோ. கீழிறங்கிய அற்புதத்தை நோக்கி வந்தார் ஒரு காவலர். "யாரும்மா நீங்க, என்ன வேணும் உங்களுக்கு?"

"அப்பா என் பிள்ளையை நேற்று இங்கு கூட்டிக்கிட்டு வந்தாங்க. அவனை திரும்ப கூட்டிட்டுப் போக வந்திருக் கேப்பா..."

மிகுந்த அப்பாவியாக பேசிய அவரைப் பார்த்து சிறிது கேலியான புன்னகை எட்டிப்பார்த்தது அந்த காவலர் முகத் தில், "அதெல்லாம் முடியாதம்மா போயிட்டு நாளைக்கு வாங்க!"

"இல்லப்பா என்னை இன்னைக்குத்தான் வரச்சொல்லி இருக்காங்க; இவங்க இரண்டு பேருல யாரையாவது பார்த்து நான் கேட்டுக்கிறேன். அவங்க கிட்ட என்னை கூட்டிட்டு போப்பா!" என்று பையிலிருந்து அதிகாரி எழுதிக்கொடுத்த முகவரிச் சீட்டை தேடி எடுத்துக் காட்டினார்.

"யாரையும் பார்க்க முடியாது! போம்மா..."

"இந்தா பாரப்பா! அதிகாரி தனது கையால எழுதிக் கொடுத்தது. என்னை உள்ள விடுப்பா!"

கெஞ்சும் பாவனையில் மாறியது அவர் குரல். இந்தப் பாவி நிலைமை புரியாம பேசுறானே! என்ன சொல்லி இவ னுக்கு புரிய வைக்கிறது. எப்படி என் பையனை கூட்டிட்டு போறது... பதட்டமானார்.

இவரது பதட்டம் அந்த காவலருக்கு புரிந்ததோ புரியலையோ, தான் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தார்.

"பார்க்க முடியாது என்று சொல்றேன் போம்மா...."

நேரம் செல்ல அவர் குரலின் கடுமை கூடியதும் அற்புதத் தின் குரலில் பரிதாபம் கூடியதும்தான் மிச்சம்.

ஒரு கட்டத்தில் கழுத்தைப்பிடித்து தள்ளாத குறையாக அவர் சத்தமிட முகம் குன்ற பின்வாங்கினார் அற்புதம்.

இப்படி கண்டவன் கிட்டையும் கெஞ்ச வேண்டியதா கிப்போச்சே என்ற அவமானம் ஒருபுறம், பிள்ளையை பற்றி கவலை மறுபுறம். உடம்பும் மனசும் தளர... எப்படித்தான் வந்து சேர்ந்தாரோ திடலுக்கு.

நடந்ததை குயில்தாசனிடம் கூறினார். இவரும் கலந்து பேசும்நிலையில்தான், தன் மகன் குறித்த துயரநிலை மெது வாக உறைக்கத்துவங்கியது. 'நம்பிள்ளை ஏதோ பெருசா பிரச்சினையில மாட்டிருவானோ?' – பயம் மனதைக் கவ் வியது. மீண்டும் ஒரு தூக்கமற்ற இரவுக்குப் பின் – காலை யில் அறிவுக்கு மாற்றுடை எடுத்துக்கொண்டு மல்லிகைக்குக் கிளம்பிவிட்டார் அற்புதம்.

'எப்படியும் அறிவை இன்னைக்கு விட்டுருவாங்க', மீண்டும் மீண்டும் தனக்குத்தானே சொல்லிக்கொண்டார் என்றாலும் அவரையும் மீறிய ஒரு பயம் மனதின் ஓரம்.'

மல்லிகையில் நுழையும்போது உடம்பு லேசாக நடுங்குவது போலி ருந்தது. மீண்டும் போய் கெஞ்ச வேண் டுமா என்று நினைக்கும்போது உடலும் மனமும் குறுகி யது. திரும்பிப் போய்விடலாம்போல் ஒரு பதட்டம்.

'நாமளே இப்படிப் பயந்தா... நம்ம பிள்ளைக்கு வேறயாரு இருக்கா? நாமதானே செய்யணும்...'

மனதில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு உள் சென்றார். எதிரில் வந்த மனிதரைப் பார்த்தவுடன் பாதி உயிர் வந்தது அற்புதத்திற்கு... அதிகாரி வந்து கொண்டிருந்தார்.

'ஐயா வணக்கம் ஐயா... என் பிள்ளை.'

அதிகாரிக்கும் அற்புதத்தை யாரெனத் தெரிந்தது.

"என்னம்மா விசயம்?"

"என்னங்கய்யா இப்படிக் கேட்கிறீங்க.. என் பிள் ளையை கூட்டிட்டு போக வந்தேங்க... நேத்தே வந்தேன். ஆனால் விடமாட்டேன் என்கிறாங்க."

'உங்க பையன் உண்மையை சொல்ல மாட்டேங்கிறா னேம்மா. பொய்யே சொல்றானே.'

"இருக்காதுங்கய்யா. என் பிள்ளை அப்படிப் பட்டவன் இல்ல... அவனுக்குப் பொய் சொல்ல தெரியாதுங்க..."

"கேட்டதுக்குப்பதில் சொல்ல மாட்டேங்கிறானே..."

"எப்படிங்கய்யா சொல்லுவான்... அவனுக்குத் தெரிஞ்சாத்தானே சொல்லுவான்."

"இல்ல இல்ல... நீங்க போய்விட்டு வாங்க. அவன பார்க்க முடியாது" கடுமையான குரலில் கூறினார்!

எங்கிருந்து அற்புதத்திற்கு அத்தனை வேகம் வந்ததோ..

"முடியாது போகமாட்டேன். என் பிள்ளையை நீதான கூட்டிட்டு வந்த... உன்னை நம்பித்தான் அவனை அனுப் பினேன். நீதான் அவனை எனக்குக் காட்டணும். அவனை பார்க்காமல் நான் போகமாட்டேன்.'

"அம்மா சொல்லுறதைக் கேளுங்க! பிரச்சினை பண் ணாம போயிருங்க, இல்லேன்னா போக வைக்க வேண்டி வரும். போங்க, போயிட்டு நாளைக்கு வாங்க பார்ப்போம்."

சட்டென உடைந்தார் அற்புதம்.

"இந்த மாற்றுடையை மட்டுமாவது கொடுத்திட்டுப் போயிறேங்க"

"முடியாதும்மா, கொடுங்க நானே கொடுத்திடறேன்."

"ஒரே ஒரு நொடி, ஒரு நொடி பார்த்திட்டு போயிறேங்க. தயவுசெஞ்சு அவனை என் கண்ணில மட்டும் காட்டுங்க ளேன்..." கெஞ்சினார்.

அந்த ஈரமற்ற பாவிகள் எதற்கும் இறங்கவில்லை. உடைகளை வாங்கிக்கொண்டனர்.

கட்டுப்படுத்த முடியாமல் வெடித்த அழுகையூடே அதிகாரியை பார்த்துகேட்டார்.

'என் பிள்ளை நல்லபுள்ளைங்க.... அவனை அடிப் பீங்களா, அடிக் கிறீங்களா..."



பூட்டிப் பூட்டி
வைத்திருந்த சோகம்
அந்த நொடியில் வெடித்துக்
கிளம்பியது

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலி ருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறு விறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கி யுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

கேட்கும்போதே அற்புதத்திற்கு உடல் நடுங்கி யது. இத்தனை வருடத்தில் ஒரு நாள் ஒருமுறை கூட அடித்து வளர்க்காத பிள்ளையை யார் யாரோ இன் னைக்கு அடிக்கிறாங்களோ.... பதறியது தாய் மனம்.

'அம்மா நாங்க ஆபிசருங்கம்மா. ரெளடிங்களோ பொலிஸ் சுகாரங்களோ இல்ல. உங்க பிள்ளையை நல்லா வசதி வாய்ப்போட வைச்சிருக்கோம். வெளிய வந்த உடனே நீங்களே கேட்டுக்கோங்க...."

சற்று நிம்மதியானது மனது. இருப்பினும் ஏமாற்றப் பட்ட உணர்வு.

மனைவி கண்டிப்பாக மகனை அழைத்து வந்து விடுவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்த குயில்தா சனுக்கு நடந்தவைகளை கேட்டவுடன் மனம் தளர்ந்தது.

நீண்டநாள் சென்னையில் தங்க முடியாது வேலை இருக்கிறது. அதனால் ஊருக்குத் திரும்ப முடிவெடுத்தார்.

அற்புதம் தான் மட்டும் இருந்து பார்த்து வருவதாகக் கூறி அவரை அனுப்பி வைத்தார்.

தனிமை, அதிலும் மனம் வெம்பிநிற்கும். அந்தச் சூழலில் ஆறுதல் வார்த்தைகளுக்காய் ஏங்கித் தவிக்கும் நிலையில் தனிமை மிக மிகக் கொடுமையானது. அந்த கொடுமையை அனுபவித்துக் கொண்டிருந்தார் அற்புதம். அனைவரும் அவரவர் வேலையில் கவனமாக சுற்றிக்கொண்டிருந்த னர். தன்னுடன் இருந்து நேரம் செலவழிக்க வேண்டாம். ஆறுதலான ஒரு பார்வையோ பேச்சோ கூட இல்லாது கவனிப்பாரற்று....

இரண்டு நாட்களுக்கு முன் அறிவைக் காண வந்தபோது இந்த நிலையென்ன, இன்றைய நிலையென்ன? திடலுக் குள்ளேயே குடியிருந்த வெற்றிச்செல்விதான் ஒரே ஆறு தல். அவர் மட்டுமே அவ்வப்போது ஆறுதல் வார்த்தைகள் கூறி ரணமான மனதிற்கு ஒத்தடமாய் இருந்தார்.

மாலையில் பெரியார் சிலைக்குப் பின்னே பாதி இருட் டில் சென்று அமர்ந்துகொண்டார் அற்புதம். எவர் முகத் தையும் காணவே விருப்பமில்லை.

"அம்மா..." யாரோ அழைக்கும் குரல் கேட்டு திரும்பி பார்த்தார்.

கண்களில் நீர்மல்க நின்றிருந்தார் அந்த மனிதர்.

"வாப்பா... எப்படிப்பா இருக்க?"

கேட்டதுதான் தாமதம்... வெடித்து எழுந்தது அந்த மனிதரின் குரல்.

"நான் எப்படி நல்லாஇருப்பேன். உன் பிள்ளை என்னை நல்லா இல்லாதபடிக்கு செஞ்சிட்டானே...."

அற்புதம் அதிர்ந்தே போனார். இவரா இப்படி பேசுவது. அறிவான பிள்ளை அழகான பிள்ளை என வாய்க்கு வாய் புகழும் இவரா இப்படி பேசுகிறார்.

"என்னப்பா சொல்ற...."

"கறியும் சோறும் போட்டு இந்தக் கையாலையே ஊட்டி ஊட்டி வளர்த்தேனே. உன் பிள்ளை இப்படி செஞ்சுட்டானே... இப்ப என் வேலையே போயிரும்போல இருக்கே...." வாய்விட்டு அழுதார். இன்னும் ஏதேதோ... ஏதேதோ.

பெற்ற மகனை பிறர் திட்டுவது கேட்கும் கொடுமை எந்தத் தாய்க்கும் எந்த நிலையிலும் வரக்கூடாது கொடிய நிலைமை. அற்புதத்திற்கு பேச்சே மறந்துவிட்டால் போலிருந்தது.

'என் நிலைமை இப்படியாகி போச்சே... பஸ்சுக்குகூட காசில்லாம இப்படி நிக்க வைச்சுட்டானே உன் பிள்ளை....' தொடர்ந்தார் அந்த மனிதர்.

உள்ளுக்குள் பொங்கும் உணர்வுகளை மறைத்துக் கொண்டு பையிலிருந்து ஒரு நூறு ருபாவை எடுத்து நீட்டினார் அற்புதம்... 'இந்தாப்பா இதை வைச்சுக்கோ. நீ ஊருக்கு கிளம்புப்பா...'

கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அவ்விடத்தைவிட்டு அகன்றார் அந்த மனிதர்.


(தவிப்பு தொடரும்.....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# சொந்த வீடு இல்லாத மன்மோகன் சிங்

இந்தியாவின் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங்கிற்கு சொந்தமாக வீடு இல்லை. கேட் பதற்கே ஆச்சரியமாக இருக்கிறதா? உண்மை தான்.

1991ஆம் ஆண்டு தனது மந்திரி சபை யில் நிதி மந்திரியாக பதவி ஏற்க மன்மோகன் சிங்கை நரசிம்மராவ் அழைத்தபோது, மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக இல்லை. இதனால் ராஜ்யசபை உறுப்பினராக நியமிப் பது என்று நரசிம்மராவ் முடிவு செய்தார்.



அசாம் மாநிலத்தில் இருந்து மன்மோகன் சிங்கை ராஜ்யசபைக்கு தேர்ந்து எடுக்க நரசிம்மராவ் தீர்மானித்த போது, அப் போதைய தேர்தல் கமிஷனராக இருந்த டி.என்.சேஷன் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். மன்மோகன் சிங்கிற்கு நிரந்தர முகவரி என்று எதுவும் இல்லை. ஆகவே அவரை ராஜ்யசபை உறுப்பினராக நியமிக்க முடியாது என்று கூறினார்.

அப்போது மன்மோகன் சிங்கிற்கு கை கொடுத்தவர் அசாம் மாநில முதல்வர் ஹிதேஸ் வர் சைக்கியா. அசாம் மாநிலத் தலைநகரான கவுகாத்தியில் திஸ்புரி என்ற இடத்தில் உள்ள தனது வீட்டை மன்மோகன் சிங்கிற்கு ஒதுக்கி கொடுத்தார். அந்த வீட்டையே மன் மோகன் சிங்கும் தனது முகவரியாக அளித் தார். இதுவே பின்னாளில் அவரது நிரந்தர முகவரி ஆனது.

1995, 2001 ஆம் ஆண்டுகளிலும் அசா மில் இருந்து மன்மோகன் சிங் இரு தடவை கள் ராஜ்ய சபைக்கு தேர்ந்து எடுக்கப்பட் டார். இந்த இருதடவைகள் இதே முகவரி யைத்தான் கொடுத்தார்.

இப்போது அசாம் மாநில முதல்வர் ஹிதேஸ்வர் சைக்கியா உயிருடன் இல்லை. அவரது மனைவியும் அசாம் மாநில அமைச்சருமான ஹீமோ புருவா சைக்கியா இந்த குடியிருப்பில் வசித்து வருகிறார். மன் மோகன் சிங்கிற்கு ஒதுக்கப்பட்ட இடம் தனி யாக உள்ளது.



"என்னப்பா! மன்னர் உயிர்களிடத்தில் அன்பு செலுத்திறவர் என்று சொன் னீயே! வில், அம்புகளோட வேட்டைக்கு கிளம் பிட்டாரே!"

"நீ வேற! உயிர்களிடத்தில் 'அம்பு' செலுத்திறவன்னுதான் சொன்னேன்"

தொண்டர்1:– நம்ம தலைவர் இனிமேல் தேர்தலிலே நிக்க மாட்டாராமே!

தொண்டர்2:– எதனால...?

தொண்டர்1:– அவருக்கு நின்றா கால் வலிக்குதாம்!



# மந்திரி பதவிக்காக வவுனியா சுந்தர் இழைத்த துரோகம்!

## தமிழ் மக்கள் விமோசனம் பெறக் கிடைத்த கடைசிச் சந்தர்ப்பமும் தவறிப் போனது



**நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம் பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)**

**தற்போது 96 வயதை எட்டிய நிலையில் கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது படியுங்கள்.**

பெரும்பான்மையினரை நம்பி ஏமாறுவதென்பது சிறுபான்மை இனத்தவருக்கே உரிய பிறவிக்குணமா என்று சில சமயங்களில் யோசிக்கத் தோன்றுகிறது.

நாடாளுமன்ற ஜனநாயகம் திருப்திகரமாக நடைமுறையிலுள்ள நாடுகளில் தங்கள் தரப்பில் சிறுபான்மையினர் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே பெரும்பான்மையினர் நடந்து கொள்கிறார்கள். அந்த நம்பிகையை மோசம் செய்யும் வகையில் அவர்கள் ஒரு போதும் எதையும் செய்வதில்லை.

ஒருசமூகம் நாகரிக சமூகமாக கலாசாரம், பொருளாதாரம், அரசியல் துறைகளிலும் மற்றும் சர்வதேசமட்டத்திலும் முன்னேற வேண்டுமானால் நம்பிக்கையே பிரதானம். நம்பிக்கையே நம்பிக்கையைக் கொண்டுவரும் என்ற மூதுரையின்படி நடந்துகொள்வது அவசியம்.

### முதலாவது தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி

சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசுகள் மிக விரைவாகவே செயலாக்கம் பெறத் தொடங்கின. 1946இல் இரண்டு சட்டவிதிகள் பிரிட் டிஷ் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டன. ஒன்று இலங்கை அரசமைப்புச் சட்டவிதிகள் (The Ceylon constitution Order in Council), மற்றது இலங்கைப் நாடாளுமன்ற தேர்தல் விதிகள் (Ceylon Parliamentary Election Order in Council). இவ்வாறாக இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஒரு டொமினியன் அந்தஸ்துள்ள நாடாக மாறியது

புதிய அரசியல் அமைப்பின்படி பிரிட்டிஷ் பாணியில் கட்சி அடிப்படையில் நாடாளுமன்றம் அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டதால், சிங்கள தேசியத்தைப் பிரதிபலிக்கும் ஒரு சீரான அரசியல் கட்சி இலங்கை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது போன்றதோர் தோற்றத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றன.

டி.எஸ். சேனநாயக்க அவரது புதல்வர் டட்லி சேனநாயக்க, மருமகன் சேர் ஜோன் கொத்தலாவலை, ஏ.ஈ.மொலமுறே, ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகியோரைக் கொண்டிருந்த இலங்கை தேசிய காங்கிரஸ் கட்சியும் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்காவின் தலைமையில் இயங்கிய சிங்கள மகா சபாவும் ஐக்கிய தேசியக்கட்சி (UNP) என்ற பெயரில் ஒன்றிணைந்தன. தமிழ் மிதவாதிகளான ஏ.மகாதேவா, எஸ்.நடேசபிள்ளை போன்றவர்கள் அக்கட்சியில் சேர்ந்து கொண்டனர்.

சோல்பரி ஆணைக்குழுவின் முன் தமிழ்த் தரப்பின் கருத்துக்களை முன்வைப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்த குழு தமிழ்க்காங்கிரஸ் என்ற பெயரில் நிரந்தர அமைப்பாக ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையில் இயங்கத் தொடங்கியது.

மலையக தோட்டப்பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழர்கள் இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற பெயரில் ஏற்கனவே இயங்கத் தொடங்கியிருந்தார்கள்.

1947ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் இந்தக் கட்சிகள் எல்லாமே தங்கள் கட்சி அடையாளங்களுடன் போட்டியிட்டன.புதிய அரசமைப்பின்படி முதலாவது பொதுத் தேர்தல் 1947 ஆம் ஆண்டு இடம் பெற்றபோது

தேர்தலில் ஐ.தே.க. பெரும்பான்மை ஆசனங்களைவென்றது.டி.எஸ்.சேனநாயக்கா டொமினியன் அந்தஸ்துப்பெற்ற இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

இத் தேர்தலில் சட்டசபையில் உறுப்பினர்களாய் இருந்த தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் மண் கவ்வினார்கள். நடேசபிள்ளை எஸ். ஜே.வி.செல்வநாயகத்தினால் தோற்கடிக்கப்பட்டார். ஏ.மகாதேவா, ஜி.ஜி.பொன்னம்பலத்



சுந்தரலிங்கம்

திடம் தோல்வியைத் தழுவினார். ஏ.மகாதேவா, ஜெகநாதன் தியாகராஜா ஆகியவர்கள் அதற்குப்பிறகு அரசியலுக்கே முழுக்குப் போட்டு விட்டார்கள்.

பதவி ஏற்ற கையோடு இலங்கை அரசியல் திட்டத்தை சீர் அமைப்பது தொடர்பாக டி.எஸ். சேனநாயக்க பிரிட்டிஷ் அரசுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தபோது முழுச் சுதந்திரம் வேண்டும் என்று வற்புறுத்தினார். இலங்கைக்கு அப்பொழுது முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பொதுத்தேர்தலுக்குப் பின்னர் இலங்கை அரசு அப்படி ஒரு கோரிக்கையை முன் வைக்




குமானால் பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்கான சட்டவிதிகளை வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதுபற்றி ஆலோசிக்கும் என்று டி.எஸ்.சேனநாயக்காவுக்கு கூறப்பட்டிருந்தது.

இலங்கையின் சார்பில் எல்லாச் சமூகங்களும் ஒன்றிணைந்து அவ்வாறான கோரிக்கையை முன் வைத்தால் என்றும் மட்டுமே முழுச் சுதந்திரம் வழங்குவது பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் ஆலோசிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### ஒலிவரின் தந்திரம்

அந்தக்காலத்தில் டி.எஸ்.சேனநாயக்காவுக்கு மிகவிசுவாசமுள்ள ஆலோசகர் ஒருவர் இருந்தார். அவர்தான் சேர் ஒலிவர் குணத்திலக்க. புத்திக் கூர்மையும் தந்திரோபாயமும் கொண்ட இராஜதந்திரியாகக் கருதப்பட்டவர்.

முழுச் சுதந்திரம் வழங்குவதற்கு பிரிட்டிஷ் அரசு தெரிவித்திருந்த நிபந்தனைகளை மனதில் வைத்துக்கொண்டு டி.எஸ்.தனது அமைச்சரவையை ஆயத்தம் செய்வதில் ஈடுபடலானார். பெரும்பாலும் ஒலிவரின் ஆலோசனையின் பேரிலேயே அவர் இதில் ஈடுபட்டிருந்தார் என்று நம்பப்பட்டது.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலே, ஐரோப்பியர் மற்றும் பறங்கியர் போன்ற எல்லாச் சமூகத்தவர்களையும் தமது அமைச்சரவையில் இணைத்துக்கொள்ள டி.எஸ் ஆயத்தமானார். வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் அமைச்சரவையில் தமிழர்களின் சார்பில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

சுந்தரலிங்கம் அரசாங்கத்தில் சேர்வதற்கு நாட்டில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. டி.எஸ்.சேனநாயக்க தமக்கு அளிக்க உள்ள அமைச்சர் பதவியைத் தாம் ஏற்றுக் கொண்ட காரணத்தை விளக்குவதற்கு கொழும்பு நகரமண்டபத்தில் சுந்தரலிங்கம் ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தார்.

அந்தக் கூட்டத்தில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன. ஜீ.ஜீ..பொன்னம்பலம் (யாழ்ப்பாணம்) எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (காங்கேசன்துறை) சி.வன்னியசிங்கம் (கோப்பாய்) டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் (செனேட்டர்) வி.குமாரசுவாமி (சாவகச்சேரி) ஆகியோரும் புதிதாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்த தமிழ் உறுப்பினர்களும் இந்த எதிர்ப்பியக்கத்தை முன்னின்று நடத்தினர்.

தமிழ்க் காங்கிரஸ் டிக்கெட்டில் நின்று வெற்றிபெற்றிருந்த இவர்களும் இவர்களின் ஆதரவாளர்களும் சுந்தரலிங்கத்தின் ஆதரவாளர்களுடன் மோதினார்கள். சுந்தரலிங்கம் அமைச்சரவையிலிருந்து விலகவேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். சுந்தரலிங்கம் மூர்க்கத்தனமாக மறுத்துவிட்டார். கூட்டம் அமளிதுமளியில் முடிவுற்றது.

அமைச்சரவை கூடியபோது டி.எஸ்.சேனநாயக்க எடுத்த முதல் நடவடிக்கை இலங்கைக்கு முழுச் சுதந்திரத்தை பிரிட்டிஷார் வழங்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை ஏக மனதாக நிறைவெற்றியதுதான். தமிழர்களும் இந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்கு சுந்தரலிங்கம் கையெழுத்திட்டார்.

1947 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இலங்கைக்கு முழுச் சுதந்திரம் வழங்கும் சட்டத்தை நிறைவேற்றியது. இலங்கைக்காக சட்டங்களை இயற்றும் தனது உரிமையை பிரிட்டன் கைவிட்டது. சுதந்திர நாட்டின் சட்டதிட்டங்களை இயற்றும் அதிகாரங்கள் யாவும் இலங்கை நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டன.

1948 பெப்ரவரி 4ஆம் திகதி கொழும்பில் தற்பொழுது சுதந்திர சதுக்கமாக விளங்கும் டொரிங்டன் சதுக்கத்தில் கிளவு செஸ்டர் பிரபு யூனியன் ஜாக் என்றழைக்கப்படும் பிரித்தானிய கொடியை கீழே இறக்கி விட்டு அதிகாரம் கைமாற்றப்பட்டுவிட்டதை எடுத்துக்காட்ட சிங்களவர்களின் சிங்கக்கொடியை ஏற்றிவைத்தார்.

சுந்தரலிங்கம் தனது சம்மதத்தை தெரிவித்து கையெழுத்திட்ட செயலானது இலங்கை தமிழ்மக்களின் தலைவிதியின் மீது இறுதி முத்திரைகுத்தப்பட்டுவிட்டதைக் குறிப்பதாக அமைந்தது.

தமிழர்கள் தமது தரப்பில் பொருத்தமானதோர் சந்தர்ப்பத்தில் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவிருந்த துருப்புச்சீட்டுப் ஓர் அமைச்சர் பதவிக்கு விலை போய் விட்டது. இந்த ஒரு செயற்பாட்டால் தமிழர்கள் தமது எஜமான்களை சிங்களவர்களாக மாற்றிக் கொண்டார்கள்.

இவையெல்லாம் நடந்துமுடிந்த போதிலும் சுந்தரலிங்கம் நீண்டகாலம் அமைச்சரவையில் இருக்கவில்லை. பிரதம மந்திரியுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் அவர் ராஜினாமாச் செய்து விட்டார். மலையக தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமான ஒரு விடயம் என்று கூறப்பட்டது. ஆனால் வேறுகாரணங் களுக்காக அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலகும்படி கேட்கப்பட்டார் என்று அரசதரப்பில் கூறப்பட்டது.

காரணம் எதுவாக இருந்தபோதிலும் அவர் தமது அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னரே ஈடுசெய்ய முடியாத வகையில் கெடுதி செய்யப்பட்டுவிட்டது.

### சுந்தர் பிற்காலத்தில் வருந்தினார்

பிற்காலத்தில் சிங்கள மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் சுந்தரலிங்கம், தாம் முன்பு செய்துவிட்ட தவற்றை எண்ணி வருந்தினார்.

தமிழருக்கு தாம் மோசம் புரிந்துவிட்டதாக அறிக்கையும் விடுத்தார். தாம் சுதந்திரக் கோரிக்கைக்கு சம்மதம் தெரிவிக்காமல் இருந்திருந்தால் பிரிட்டன் அதனை வழங்கியிருக்காது என்று தெரிவித்தார். இன்று தமிழர்களுக்கு நேர்ந்துள்ள கதி நேர்ந்திருக்க மாட்டாது என்றும் விசனப்பட்டார்.

இந்த அறிக்கையை எழுதும்பொழுது தமிழ் மக்களின் விதியை எண்ணி கண்ணீர் சிந்தியபடியே எழுதுவதாகவும் சுந்தரலிங்கம் தெரிவித்திருந்தார்.

டி.எஸ்.சேனநாயக்க தனது நம்பிக்கைக்குரிய நண்பராக இருந்தார் என்றும் அவருக்காக பல சொற்பொழிவுகளையும், அரச அறிக்கைகளையும் தாம் எழுதிக் கொடுத்திருந்தார் என்றும் குறிப்பிட்டிருந்த சுந்தரலிங்கம், தமது நண்பரான பிரதமமந்திரி ஒருபோதும் தமிழர்களைக் கைவிடமாட்டார் என முழுநம்பிக்கை கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

கல்வி அறிவு, அனுபவம் உள்ள புத்திஜீவிகளான பெரிய மனிதர்கள், ஒருமக்கள்

### தமிழில் - 'பேனா'

சமூகத்தின் அல்லது தேசத்தின் விதியை நிர்ணயிக்கவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்படும்போது எவ்வாறு அதிகாரத்திலுள்ள தமது நண்பர்களின் மீது தாம் வைத்திருக்கும் நம்பிக்கையால் தாம் தவறாக வழிநடத்தப்படுவதற்கு அனுமதித்து விடுகிறார்கள் என்பதைக் காண ஆச்சரியமாக இருக்கிறது.

நிரந்தரமாக இருக்கவேண்டிய ஒன்றுக்கு இந்த நண்பர்களால் ஈடுசெய்யமுடியும் என்று இவர்கள் எவ்வாறு கருதிவிடுகிறார்கள்? அவர்கள் என்னசாகாவரம் பெற்றவர்களா? மேலும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரதிகூலமான விளைவுகளுக்கு இந்த நண்பர்கள் மீது தாம் கொண்டிருக்கும் நம்பிக்கை போதிய பாதுகாப்பாக இருக்கும் என்று எவ்வாறு நம்பலாம்?

சுந்தரலிங்கம் தமது கவலையை வெளியிட்டதால் அவருக்குள்ள நேர்மையை சந்தேகிப்பதற்கு இடமில்லை. ஆனால் இலங்கையில் தமிழ் மக்களின் உயிர்வாழ்வுக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும்போது இவ்வித கழிவிரக்கங்களால் என்ன பிரயோசனம்?

(தொடரும்)

ஈரான்

# அமெரிக்காவுக்கு புதிய சாத்தான்

ஈரானின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அஹமதீன் ஜாட் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி பதவியேற்க இருக்கிறார். கடும்போக்காளரான இவரை ஈரானிய மக்கள் தமது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்து இருப்பது அமெரிக்காவுக்கும் அதன் நேச அணியில் உள்ள நாடுகளுக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. ஈரான் தனது அணு பலத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று எதிர்




கால ஜனாதிபதி அறிவித்து இருப்பது அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் தலையிடியைக் கொடுத்துள்ளது. அத்துடன் அமெரிக்காவுக்கும்— ஈரானுக்கும் இடையில் ஏற்கனவே நிலவி வந்த கசப்புணர்வு மேலும் தீவிரமடையவும் இந்த அறிவிப்பு வழி திறந்துள்ளது.

## அமெரிக்கா - பெரிய சாத்தான்

இஸ்லாம் கூறும் கோட்பாடுகளின் அடிப்படையில் ஈரானைக் கட்டியெழுப்ப வேண்டும் எனக் கனவு காணும் அஹமதீன் ஜாட் அமெரிக்காவை 'பெரிய சாத்தான்' என்று வர்ணித்து இருக்கிறார். அத்துடன் அந்த நாட்டுடன் உறவுகளைப் பேண வேண்டிய தேவை எதுவும் ஈரானுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்து இருக்கிறார். அணு பலத்தை விருத்தி செய்வது ஈரானுடைய உரிமை என்று அடித்துக்கூறும் அவர் தம்மைப் பலமிக்க நாடுகளாகக் கருதும் ஒரு சில நாடுகளின் விருப்பங்களுக்கு ஏற்ப தாளம்போடும் நிலையில் தனது நாடு இல்லை என்றும் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

## அமெரிக்காவின் அதிருப்தி

ஈரான் தனது அணு பலத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முற்படுவதை அமெரிக்காவால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் அது ஈரான் மீது வசைமாரி பொழிந்திருக்கிறது.

''அஹமதீன் ஜாட் ஜனநாயக விரோதி— சுதந்திரத்தின் எதிரி''— இப்படி அமெரிக்க பாதுகாப்புச் செயலர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்து இருக்கிறார். ஐரோப்பிய ஒன்றியமும் ஈரானின் அணுக்கொள்கை பற்றி தனது கவலையை வெளியிட்டு இருக்கிறது. அதுமட்டுமன்றி ஈரானுக்கு அணு பலத்தை அதிகரிப்பதற்கு என்ன தேவை இருக்கிறது என்றும் அமெரிக்கா கேட்கிறது.

ஈரானின் எதிர்கால ஜனாதிபதி அஹமதீன் ஜாட் ''நாட்டின் நலன்களுக்காகவே அணு சக்தி பயன்படுத்தப்படும். அணு சக்தி மூலம் மின் சக்தியைப்பெற்றுக்கொள்வதில் நாங்கள் ஆர்வம் கொண்டுள்ளோம்'' என்று தனது நாடு அணுசக்தி பெற்றுக் கொள்வதற்கான நோக்கத்தை தெளிவு படுத்தி இருக்கிறார்.

இந்த விளக்கத்தை எல்லாம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அமெரிக்கா இல்லை. ஈரான் தனது அணுசக்தி அபிவிருத்தியைக் கைவிட வேண்டும் என்றே எதிர்பார்க்கிறது. இது ஏன்? தான் சொல்பவை எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்ளும் தனது அடிவருடி நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகள் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் அணு வல்லமை பெற்றுக்கொள்வதை அமெரிக்கா விரும்புவதில்லை. அந்த நாடுகளின் எண்ணெய் வளத்தின் மீது குறி வைத்திருப்பதுதான் இதற்கான காரணம். இங்கே ஒரு விடயத்தை குறிப்பிட்டே ஆக வேண்டும். 1979ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற இஸ்லாமிய புரட்சிக்கு முன்னர் அந்த நாட்டை ஆட்சி செய்தவர் மன்னர் ஷா. அமெரிக்காவின் அரவணைப்பில் இருந்த அவரின் ஆட்சியின்போது அங்கு இடம் பெற்ற அணு அபிவிருத்திக்கு அமெரிக்கா உதவி செய்து வந்ததை சரித்திரம் இன்றும் நினைவில் வைத்துள்ளது.

## அணுவும் அரசியலும்

இப்போது ஈரானின் எல்லைநாடுகளான ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவின் அன்புக்குரிய இஸ்ரேலும் ஈரானுக்கு அண்மையில் உள்ளது. ஈரானின் அணு பலம் இந்த நாடுகளுக்கு மட்டுமல்லாது மத்திய கிழக்கின் வளங்களில் கண் வைத்துள்ள தனக்கும் என்றோ ஒருநாள் ஆபத்தைக்கொண்டுவரும் என அமெரிக்கா அஞ்சுவதும் இதற்கான இன்னொரு காரணம்.

அஹமதீன் ஜாட் ஈரானிய ஜனாதிபதியாவதை இஸ்ரேலும் விரும்பவில்லை. ஈரான் தனக்குச் சமீபத்தில் உள்ள மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று இஸ்ரேல் தனது கவலையை வெளியிட்டுள்ளது. அதேநேரம் யூதர்களுக்கான நாடாக இஸ்ரேல் இருப்பதற்கு எந்தவிதமான உரிமையும் அதற்கு இல்லை என்று ஈரான் வாதிடுகிறது.

இப்படி ஏட்டிக்குப்போட்டியாக விடயங்களை இந்த நாடுகள் அரங்கேற்றுகின்றன. இஸ்ரேல் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளும்போது தனது மற்றைய பிரச்சினைகளை எல்லாம் ஒருபுறம் தூக்கி வைத்துவிட்டு ஈரானின் அணு வல்லமை பற்றியே பேசுகிறது.

இவ்வாறு இந்த நாடுகள் எல்லாம் தமது சொந்த நலன் கருதி ஈரானின் அணு அபிவிருத்தித் திட்டத்தை எதிர்த்து வருகின்றன. ஆனால் ஈரனோ தனது அணு சக்தி அழிவுக்கல்ல, ஆக்கத்துக்கே பயன்படுத்தப்படும் என உலக நாடுகளுக்கு உறுதி அளிக்கிறது. இவ்வாறு ஈரான் கூறிவருவதை மேலே உள்ள பத்தி ஒன்றில் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

## அமெரிக்க புலனாய்வு

ஈரானின் உறுதிமொழி இவ்வாறு இருக்க அமெரிக்க பாதுகாப்பு ஏஜன்சி ஒன்று தனது புலனாய்வு அறிக்கை ஒன்றில் அந்த நாட்டின் அணுத்திட்டம் பற்றி கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளது.

''ஈரான் அணு பலத்தை அதிகரிக்க ஆர்வம் கொண்டுள்ளது. எதற்காக? மத்திய கிழக்கில் தன்னை ஒரு பலம்மிக்க நாடாக உருவாக்கிக்கொள்ள அது விரும்புகிறது. எப்போதாவது ஒருநாள் அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாகத் தன்னைத் தாக்குவதற்கு எத்தனித்தால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அணு பலம் தன்னிடம் இருக்க வேண்டும் என்றும் அது கருதுகிறது''— இதுதான் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கம்.

தவிர, ஈரானின் அணு வல்லமையைக் கட்டுப்படுத்த ஏதாவது ஒரு வழி தேடப்படாவிட்டால் 2005ஆம் ஆண்டில் ஈரான் அணு ஆயுதம் ஒன்றை உற்பத்தி செய்யக்கூடும் என்றும் அந்த அறிக்கை எச்சரிக்கிறது. இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றை தட்டிக் கழிப்பதற்கு இல்லை. ஏனெனில் 1990ஆம் ஆண்டிலிருந்து ஈரான் அணு சாதனங்களை சீனா, ரஷ்யா போன்ற கம்யூனிச நாடுகளிலிருந்து மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்து வருகிறது. அணு சக்தி உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள் 'யுரேனியம்'. இதற்கு வலுவூட்ட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்தச் சாதனங்கள் உதவும். அதுமட்டுமன்றி ஈரானின் அணுத்துறை சார்ந்த நிபுணர்கள் தமது நாட்டில் மட்டுமன்றி மேற்கத்திய நாடுகளிலும் பயிற்சி பெற்று வெளியேறி உள்ளனர். இவற்றை நோக்கும்போது இந்த நாடு அணுத்துறை சார்ந்த சகல வளங்களிலும் தன்நிறைவு பெற்றுள்ளது என்பது புலப்படும்.

## எண்ணெய் வளம்.

நாட்டின் எண்ணெய் வளங்களிலும் பாரிய மாற்றங்களைச் செய்ய எண்ணி இருப்பதாக அஹமதீன் ஜாட் அறிவித்து இருப்பதும் அமெரிக்காவுக்கு ஆத்திரத்தையும் வயிற்றெரிச்சலையும் கிளப்பி இருக்கும். எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் வரிசையில் நான்காவது இடத்தை வகிக்கும் ஈரான் பாரியளவு எண்ணெய் வளத்தை தன் கைவசம் வைத்துள்ளது. அமெரிக்கா உட்பட பல நாடுகள் இந்த எண்ணெய் வளங்களில் கோடானு கோடி டாலர்களை முதலீடு செய்து மிகப்பெரும் இலாபத்தைச் சுரண்டி வருகின்றன. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் ஈரானிய பிரஜை ஒவ்வொருவருக்கும் எண்ணெய் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் சென்றடைய வேண்டும் என்றும் அஹமதீன் ஜாட் அறிவிப்பு விடுத்துள்ளார்.

## அபிவிருத்திப் பணிகளில் பாரிய மாற்றம்

இவ்வாறு நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் பாரிய மாற்றங்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ள அஹமதீன்ஜாட்டின் பின்னால் ஈரானின் பெரும்பான்மை மக்கள் அணி திரண்டு நிற்கிறார்கள். அவர்களிடம் அமெரிக்க எதிர்ப்பு உணர்வுகள் மேலோங்கி நிற்கின்றன. நினைத்ததை முடிப்பவன் என்றும் ஏழைகளின் நண்பன் என்றும் சொல்லப்படும் அஹமதீன் ஜாட்டுக்கு மக்கள் 'ஈரானிய தலிபான்' என்ற பட்டப் பெயரையும் சூட்டி மகிழ்கின்றனர்.

ஈரானின் அரசியல் யாப்பின்படி ஈரானிய ஜனாதிபதி தான் நினைத்தது அனைத்தையும் அமுலாக்க முடியாது. ஒவ்வொரு திட்டமும் நாட்டின் பெருந்தலைவரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். நாட்டின் பெருந்தலைவராக இப்போது இருக்கும் ஆயத் துல்லா கமேனியின் ஆதரவும் அஹமதீன் ஜாட்டுக்கு இருக்கிறது.

## எதிர்பார்ப்பு

இவ்வாறு மக்களதும் நாட்டின் பெருந்தலைவரதும் ஆதரவு அவருக்கு இருப்பதால் தான் அறிவித்தவற்றை அமுலாக்க அகமதீன் ஜாட் தயங்கப்போவதில்லை. மக்கள் இவரிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறார்கள். மேற்கு நாடுகளும் அவரது எதிர்கால அணுகுமுறைகளைச் சந்திக்க ஆவலாக இருக்கிறது. ஈரானிய மக்கள் தன் மீது வைத்துள்ள அபார நம்பிக்கை தன்னைப் பெருமையடையச் செய்வதாக அவர் கூறியிருக்கிறார். நிச்சயம் மக்கள் எதிர்பார்ப்புக்களை அவர் நிறைவேற்றுவார். ஆனால் அமெரிக்காவினதும் அதனது நேச நாடுகளினதும் எதிர்பார்ப்பை அவர் ஈடுசெய்வாரா? இல்லை . அவர்களுக்கு அவர் ஒரு சாத்தானாகவே இருக்கப்போகிறார்.

## அஹமதீன் ஜாட் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

*1979 ஆம் ஆண்டு தெஹ்ரானில் இருந்த அமெரிக்கத் தூதரகத்தில் 444 நாட்கள் தம்மை பணயக்கைதிகளாக வைத்திருந்தவர்களில் ஈரானின் எதிர்கால ஜனாதிபதி அஹமதீன் ஜாடும் ஒருவர் என முன்னாள் அமெரிக்க பணயக் கைதிகள் சிலர் தெரிவித்த குற்றச் சாட்டுக்களை அமெரிக்கா ஆராய்ந்து பார்க்க இருக்கிறது.*



*இவ்வாறு வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஸ்கொட் மக்கலன் தெரிவித்துள்ளார்.*

*444 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்த பணயக்கைதிகள் விவகாரத்தில் அஹமதீன் ஜாட் முக்கிய பாத்திரம் ஒன்றில் பங்கு கொண்டிருந்தார் என்று அந்த முன்னாள் பணயக் கைதிகள் அவர்மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள் என்று வோஷிங்டன் டைம்ஸ் என்ற பத்திரிகை தெரிவித் துள்ளது.*

*49 வயதுடைய அஹமதீன் ஜாட் சீர்திருத்த வாதியான ரப்சான் ஜானைத் ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடித்து வெற்றி பெற்றமை சர்வதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.*

*வோஷிங்டன் இந்தத் தேர்தலை முறை கேடானது என வர்ணித்திருந்தது குறிப்பிடத்தக்கது.*

*ஆனால், இவர் மத்தியதர வர்க்கத்தினரதும், பாட்டாளி மக்களதும் ஆதரவைப் பெற்ற அவர் அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றுவார் என்று பரவலாக நம்பப்படுகிறது.*




''ஓய்வுபெற்ற பின் சரியான தூக்கமே இல்லை' என்று மறுபடியும் வேலைக்கு போறாரே உன் கணவர். என்ன வேலைக்குப் போறார்?''

''இரவுக் காவலாளி வேலைக்குத்தான் போறார்.''

# இளையராஜா என் குரு

மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில் உள்ள சிவ புராணத்தையும் மற்றும் 5 பதிகங்களையும் இசையமைப்பாளர் இளையராஜா இசை அமைத்து பாடி உள்ளார். இந்தப் பாடல்கள் அடங்கிய சி.டி வெளியீட்டு விழா சென்னை மியூசிக் அக்கடமி அரங்கில் நடைபெற்றது. விழாவுக்கு மத்திய அமைச்சர் ஜெயபால் ரெட்டி தலைமை தாங்கினார். சி.டியை அவர் வெளியிட கர்நாடக இசை மேதை பால முரளி கிருஷ்ணா பெற்றுக் கொண்டார்.


-ரஜினி-

விழாவில் நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், இயக்குனர் பாரதிராஜா, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். வை.கோ பேசும் போது கூறியதாவது:

"தமிழ் இசையை, வளம் மிக்க தனது குரலால் மெருகேற்றிப் பாடக்கூடிய மாமேதை பிறப்பார் என்றுதான் அந்த கிராமம் பண்ணைப்புரம் என்று பெயர் சூடிக் கொண்டது. நான் இளையராஜாவின் பரம ரசிகன். அதனால் அவரைப் பிரிந்ததே இல்லை. இரவும் பகலும் அவரது பாடல்களை விரும்பிக் கேட்பேன். காலத்தை வென்று நிற்கும் பாடல்களை அவர் கொடுத்துள்ளார். இளையராஜா யாருக்கும் தலைவணங்க மாட்டார். புகழ் பலரை வீழ்த்திவிடும். இளையராஜா புகழுக்கு மயங்க மாட்டார். ஒலி, அலை இருக்கும் வரை இளையராஜாவின் திருவாசகப் பாடல் இருக்கும்'' என்றார்.

நடிகர் ரஜினிகாந்த் பேசும் போது

''அமெரிக்காவில் சந்திரமுகி படத்தைப் பார்த்துவிட்டு 5 வயது சிறுவன் ஒருவன் என்னைப் பார்க்க வேண்டும் என்று கூறியுள்ளான். எனக்கு கடிதம் எழுதி அனுமதி பெற்றுவிட்டு அந்த சிறுவன், சிறுவனின் பாட்டி, தகப்பன், தாய் ஆகியோர் வந்தார்கள்.

என்னிடம் பேசிவிட்டு அருகில் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அதன்பிறகு அந்தச் சிறுவன் ரஜினி எங்கே என்று என்னிடம் கேட்டான். நான்தான் ரஜினி என்றேன். நீங்களா ரஜினி? என்று கேட்டுவிட்டு நீங்கள் ரஜினியின் தந்தை என்று கூறிவிட்டான். பின்னர் மீசையை வைத்துவிட்டுத் தாடியை எடுத்த பிறகுதான் நம்பினான். அந்த பாட்டி, 'இவ்வளவு சம்பாதிக்கிறாயே, தாடியை சவரம் செய்ய ஒரு பிளேடு கூடவா வாங்க முடியவில்லை? தலைக்கு மை அடித்துக் கொள்ளக்கூடாதா' என்று கேட்டார். அதனால்தான் தலைக்குடை அடித்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

திருவண்ணாமலை ரமண மகரிஷியை எனக்குக் காட்டியது இளையராஜாதான். ஒருவகையில் அவர் எனக்கு குரு. 6 மாதத்திற்கு முன்பு நான் அவரைப் பார்க்கப் போனபோது இந்த சி.டி.யை போட்டுக் காண்பித்தார். உங்களுக்கு இருக்கும் உணர்வு எனக்கு அப்போது இருந்தது.

நாதத்தை நேசிப்பவருக்கு ஆண்டவன் மீது நம்பிக்கை இருந்தே ஆக வேண்டும். சப்தஸ்வரம் அவன் கொடுத்த பிச்சை தான். திருவாசகம் புகழ்வது. சந்தோஷம் வந்து போகும். நிலைத்து நிற்காது. கஷ்டம் வரும். 8 வாரம் இருந்துவிட்டுப் போய் விடும். பெயர், பணம், புகழ் வரும். மறைந்துவிடும். ஆனால் அமைதி வருவது கஷ்டம். அந்த அமைதியை தேடித்தான் இளையராஜா இப்போது போகிறார்.''

இவ்வாறு ரஜினிகாந்த் பேசினார். இறுதியில் பேசினார் இசை ஞானி இளையராஜா. ''திருவாசகத்தை இசையாகப் படைத்துள்ளேன். இதைவிடச் சிறந்த படைப்பு வர வேண்டும் என்று இறைவன் விரும்பினால் வரும்'' என்றார்.


'பொன்னியின் செல்வன்'
-ரவிகிருஷ்ணா, கோபிகா-

# டைரக்டர்மீது சீ

தன் பார்த்திப காதலை பாதியிலேயே முறித்துக்கொண்ட சீதா தனியாகத்தான் வாழ்ந்து வருகிறார். இந்த ஜோடி மீண்டும் இணையும் என்ற அரசல் புரசலான செய்திகளுக்கு நெற்றியடியாக விளக்கம் அளித்த சீதா, பார்த்திபன் மற்றவர் துன்பத்தில் இன்பம் காண்பவன் என்று விமர்சித்திருந்தார். பார்த்திபனிடம் வளர்ந்து வந்த தன் குழந்தைகளையும் ஒவ்வொருவராக தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார். இதற்கிடையில் ரி.வி நடிகர் சதீஷ் என்பவருடன் சீதாவுக்கு தொடர்பு இருப்பதாக வந்த செய்திகளையும் அவர் மறுத்ததாகத் தெரியவில்லை.

இந்த சூழ்நிலையில்தான் சீதா கொடுத்த பொலிஸ் புகாரும், அதை தொடர்ந்த அந்த விசாரணையும் சதீஷ்—சீதா உறவை பகிரங்கப்படுத்தியிருக்கிறது. குணால், மனோஜ், புதுமுகம் மோனிக்கா ஆகியோர் நடிக்கும் 'காதல் வளர்த்தேன்' படத்தில் நடித்துவருகிறார் சீதா. இப்படத்தினை இயக்கிக் கொண்டிருப்பவர் பார்த்திபனிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய கலாபுதியவன் என்பவர்.

இவரிடம் தன் காதலரான சதீஷுக்கும் ஒரு கேரக்டர் தரும்படி கேட்டாராம் சீதா. அதற்கு முதலில் சம்மதித்த கலாபுதியவன், பிறகு மறுத்துவிட்டதாக தெரிகிறது. இதையடுத்து இவருக்கும் சீதாவுக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டுள்ளது. ஆபாச வார்த்தைகளால் தன்னை திட்டியதாக பொலீஸில் புகார் கொடுத்தார் சீதா. கூடவே நடிகர் சங்க தலைவர் விஜயகாந்திடமும் புகார் கொடுத்ததாக தெரியவருகிறது.

காவ
விஜயகா
யும் நே


-சீதா-

# எம்.ஜி.ஆரை வி

விஜயகாந்த் கட்டும் அரசியல் மாளிகைக்கு நடந்த பூமி பூஜை போல்தான் இருந்தது 'சுதேசி' படப்பூஜை. தனது வீட்டில் மனைவி பிரேமலதா துவக்கி வைக்க, விஜயகாந் பேசிய முதல் வசனம், 'நா
நினைத்ததை முடிக்காமல் விடமாட்டேன்'.

அளவுக்கு மீறிய 'பஞ்ச்' வசனங்களும், நாடு முன்
அருளுரைகளுமாக தயாராகிறது 'சுதேசி'. இதில் அதி
யாக விஜயகாந்த் கவனம் செலுத்துவது எம்.ஜி.ஆர். பாண
தானாம்.

'அன்புக்கு எம்.ஜி.ஆர்., பண்புக்கு காமராஜர், ஆற்
விஜயகாந்த்' என்று புதிய கோஷத்துடன் தொண்டர்படை
விடப்பட்ட நிலையில் 'எம்.ஜி.ஆர் படத்தில் வருவது பே
படத்திலும் வசனங்களை வைக்க உத்தரவிட்டுள்ளார்
காந்த்.

எற்கனவே எம்.ஜி.ஆர். பயன்படுத்திய பிரசார வாக
செப்டம்பர் —14 மாநாட்டுக்காகத் தயாராகி வருகிறது
போகிற ஊர்களில் எல்லாம் கிழவிகளை கட்டிப்பிடித்து எம்.ஜி.ஆர்.பாணியில் ஆதரவு பெற முயற்சி செய்து வருகிறார் கேப்டன். காலம் கனியும்போது 'கறுப்பு எம்.ஜி.ஆர்.' கோஷத்தை அவிழ்த்து விடவும் ஐடியா தயாராக உள்ளது.

இந்நிலையில் திரையிலும் எம்.ஜி.ஆரை அப்படியே தொடரச்செய்ய உத்தரவிட்டிருக்கும் விஜயகாந்த், எம்.ஜி.ஆர் போட்ட ரோட்டில் தனது அரசியல் தேரை ஓட்டினால் சேர வேண்டிய இலக்கை சிரமமில்லாமல் அடையலாம் என கணக்குப் போட்டுள்ளார்.

ஜனங்களுக்கு அசலுக்கும் நகலுக்கும் வித்தியாசம் தெரியாது என்று நினைக்காதீர்கள் கேப்டன் இப்போ மக்கள் ஜாக்கிரதையாத்தான் இருக்காங்க.

# அடர்ந்த காட்டில் சரத்குமார் - நமித

சரத்குமார் — நமீதா ஜோடியாக நடிக்கும் சாணக்கியா
வேகமாக வளர்ந்து வருகிறது. சரத்குமார்மீது நமீதாவுக்கு
சரத்குமார் தன்னைக் காதலிக்கிறாரா இல்லையா? என்று
நமீதா தவிக்கிறார். ஒரு சந்தர்ப்பத்தில் சரத்குமார் தன்னை
றார் என்ற உண்மை நமீதாவுக்கு தெரியவரும் போது உற்
கிறார். நமீதாவின் கற்பனையில் ஒரு பாடல் பிறக்கிறது
டியா... தரலேன்னா என் பேச்சு காபூ..... என்ற பாடலுக்கு
50 நடனக் கலைஞர்களுடன் கொட்டும் மழையில் ஆடிப்
வின் அடர்ந்த காட்டுப் பகுதியில் படமாக்கப்பட்டது.

ஆலம்புழை, சாலக்குடி ஆகிய இடங்களில் படப்பிடிப்
கள் 10 திடீர் என்று பாய்ந்து வர படப்பிடிப்பு குழுவினர்
கள் கலைந்து சென்ற பின்னரே மீண்டும் படப்பிடிப்பு ந

இப்படத்தில் லயா, வடிவேல், சலீம்கோஷ் ஆகியோர் ந
தேவாவின் வாரிசு ஸ்ரீகாந்தேவா வழங்குகிறார்.

# மாதவனுக்கு அதிர்ச்சி

இப்போது தேனப்பனின் தயாரிப்பில் ப்ரியசகி படத்தில் நடித்து வரும் மாதவன் தனது சம்பள பாக்கியை தந்தால்தான் க்ளைமாக்ஸ் காட்சிகளில் நடிக்க வருவேன் என்று கண்டிப்பாக கூறிவிட்டார்.

இவருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க முடிவு பண்ணிய தேனப்பன் உங்கள் சம்பளப் பணம் இருக்கிறது வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று

அவரை அலுவலகத்
மாதவன் செ
தொலைபேசியின்
கில் மாதவனின்
பாரம் குறித்து பல
கஸ்தர்களிடம்
அவர்கள் அனைவரு
பின்னா வென
னார். உடனே மாதவ
தருவதைத் தாருங்
கூறி எழுந்து செ

## ...து சீதா புகார்!

காவல் நிலையத்தை தொடர்பு கொண்ட விஜயகாந்த், கலாபுதியவனையும் சீதாவையும் நேரில் அழைத்து சமாதானப்படுத்தி வைக்கும்படி ஆணையாளரைக் கேட்டுக் கொள்ள இருவரையும் அழைத்து சமாதானப்படுத்தி அனுப்பியது பொலீஸ்.

நல்வேளையாக அனாமிகா, தனுஜா ஸ்டைலில் சீதாவும் பாலியல் புகார் கொடுக்கவில்லையே என்றார் கலாபுதியவன்.



-சீதா-

## கிசுகிசு படித்தால் அழுவேன் - சினேகா

புதுப்பேட்டை படத்தில் விலைமாதுவாக நடிக்கும் சினேகாவிடம் நீங்கள் இப்படியொரு வேடத்தில் நடிக்கிறீர்களா என்று கேட்டதற்கு,

''நிபந்தனையுடன்தான் இந்த வேடத்தில் நடிக்கச் சம்மதித்தேன். கதைக்கு, பாத்திரத்துக்கு தேவை என்றாலும் ஒரு எல்லை வரைக்கும்தான் நடிப்பேன்'' என்றாராம்.

ஸ்ரீகாந்துடனான நட்புப் பற்றி இப்போது அடிக்கடி கவலையுடன் பேட்டியளிக்கிறார் இவர். அவருடன் உள்ளது வெறும் நட்புத்தான், அதற்கு மேல் எதுவுமில்லை. அவருக்கும் அம்மா அப்பா குடும்பம் இருக்கிறது. எனக்கும் அம்மா, அப்பா, அக்கா என்று குடும்பம் இருக்கிறது. (எங்களுடன் மட்டும் இல்லையா?) இப்படி 'கிசுகிசு' எழுதினால் இரண்டு குடும்பங்களுக்குமே கஷ்டம் என்று நிருபர்கள் கேட்காமலே ஸ்ரீகாந் குடும்பத்தையும், தன்னுடைய குடும்பத்தையும் சேர்த்துக் கவலைப்படுகிறார். ''முன்பெல்லாம் என்னைப் பற்றி கிசுகிசு பார்த்தால் படித்துவிட்டு அழுவேன் இப்போது பழகிவிட்டது என்று சொல்லும் சிரிப்பழகி இப்போதெல்லாம் படப்பிடிப்பில் அதிகமாக பேசுவதில்லை. சென்ட்ரல் ஸ்டேஷன் மாதிரி எப்போதும் பரபரப்பாக இருக்கும் இவர் வாய் இப்போது உள்ளூர் தியேட்டர் மாதிரி 'வெறிச்' சென்று அமைதி காக்கிறது.

சினேகாவுக்கு திடீரென்று என்னவாயிற்று?

'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' படப்பிடிப்பில் சினேகாவின் பேசிக்கொண்டே இருக்கும் குரலை கமலும் கேட்டிருக்கி... பிறகு ஒரு நாள் பக்குவமாக அழைத்து. இப்படியெல்லாம் கார்ப்பரேஷன் குழாய் மாதிரி வார்த்தைகளைக் கொட்டக் கூடாது என்று அறிவுரை கூறியிருக்கிறார். அதிலிருந்து 'நா'காக்க ஆரம்பித்துள்ளார் சினேகா.

ஆனால், சின்னா படத்தின் காட்சிகளைப் பார்த்தால் பேச்சைவிட உடையில்தான் அதிக சிக்கனம் காட்டுகிறார்.



'கள்வனின் காதலி'
-நயன்தாரா-

## ஏ.எம்.ரத்னத்தின் கள்ளன்

இந்தியன், நட்புக்காக, தூள், கில்லி, 7 ஜி ரெயின்போ காலனி ஆகிய வெற்றிப் படங்களை தயாரித்தவர் ஏ.எம்.ரத்னம். இவர் தயாரிக்க, ரவிகிருஷ்ணா — கோபிகா நடிக்கும் பொன்னியின் செல்வன், விஜய் —அஸின் நடிக்கும் சிவகாசி ஆகிய இரு படங்களும் முடிவடையும் நிலையில் உள்ளன.

இதையடுத்து ஏ.எம்.ரத்னம் 'கள்ளன்' என்ற பெயரில் புதிய படம் தயாரிக்கிறார். இதில் ரவிகிருஷ்ணா கதாநாயகனாகவும் அவருக்கு ஜோடியாக புதுமுகங்கள் தமயுணா, எலியானா ஆகியோரும் நடிக்கிறார்கள். இவர்களுடன் கருணாஸ் சுமன்ஷெட்டி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

இப்படத்திற்கு ஏ.எம்.ஜோதிகிருஷ்ணா கதை, திரைக்கதை எழுதி டைரக்ஷன் செய்ய இதற்கு இசையமைத்துள்ளார் யுவன் ஷங்கர்ராஜா.

## சாதனை படைத்த ஷங்கர்

'அந்நியன்' ஆரம்பித்த நேரத்திலிருந்தே ஷங்கருக்கு பல்வேறு அழைப்புகள். அதிலொன்று சிரஞ்சீவியிடமிருந்து வந்தது. தமிழ் டெக்னிஷியன்களை பயன்படுத்திக் கொள்வதில் ஆர்வமாக இருக்கிறார்கள் ஆந்திரா நட்சத்திரங்கள். காரணம், திறமை, உழைப்பு மற்றும் சின்சியாரிட்டி!

தமிழ் பிரபலங்களுக்கும் ஆந்திரா மீது காதல். காரணங்கள் பல. ஒன்று சம்பளம். இரண்டு அங்கு கிடைக்கும் வசதிகள்.

தமிழ் நாட்டில் ஒரு படத்திற்கு 150 பிரதிகள் என்றால் ஆந்திராவில் சர்வசாதாரணமாக 300 பிரதிகள் வரை போடுகிறார்கள். இதனால் வருமானம் அதிகம். ஆகவே பட்ஜெட்டும் அதிகம்.

ஷங்கர் 25 கோடி பட்ஜெட்டில் படம் பண்ணிவிட்டார். அடுத்தபடத்துக்கு அவர் யோசிக்கும் கதையின் கனம் 25 கோடியை விட அதிகமிருக்குமே தவிர குறையாது. தமிழில் இவ்வளவு பெரிய தொகையை முதலீடு செய்து லாபம் பார்ப்பது கொட்டாம்பட்டியில் ஐந்து நட்சத்திர ஹோட்டலை கட்டுவதற்கு சமம். ஷங்கரின் மெகா பட்ஜெட்டை தாக்குப்பிடிக்கும் ஒரே மாநிலமாக இருப்பது தற்போது ஆந்திரா மட்டுமே.

இவை அனைத்தையும் யோசித்து, சிரஞ்சீவியின் சிக்னலுக்கு செவி சாய்த்திருக்கிறார் ஷங்கர். ஷங்கரின் அடுத்த நாயகன் சிரஞ்சீவி என்பது 90 வீதம் உறுதியாகிவிட்டது. நாற்பது கோடி ரூபாய் பட்ஜெட்டில் தயாராகியிருக்கும் இந்தப் படத்தை 'என்னவளே' படத்தை எடுத்த நிறுவனம் தயாரிக்கிறது.

இப்படத்திற்கு ஷங்கர் பெறப்போகும் சம்பளம் ஐந்து கோடி.. மற்ற இயக்குனர்கள் 'அம்மாடியோவ்' என்று வியக்கும் இந்த சம்பளம்தான் இது. இந்தியாவின் எந்தவொரு இயக்குனருமே பெற்றிராத மிகப் பெரிய தொகை. அவர் படத்தில் மட்டுமல்லாது சம்பளத்திலும் சாதனை படைக்கிறார்.

## ...ர தொடரும் விஜயகாந்...

...கக்கு ...தேசி' ...லதா ...ல் வசனம், 'நான் ...'.

...நம், நாடு முன்னேற ...ி'. இதில் அதிகப்படி ...ம்.ஜி.ஆர். பாணியைத்

...ாமராஜர், ஆற்றலுக்கு ...தாண்டர்படை முடுக்கி ...ல் வருவது போல் தன் ...ரவிட்டுள்ளார் விஜய...

...ய பிரசார வாகனம், ...ராகி வருகிறது. ...கீட்டிப்பிடித்து ...சி செய்து ...பாது ...து

...ி. ...ர ...ர் ...ட்டி. ...லாமல் ...ார். ...ும் வித்தி ...ள் கேப்டன் ...க்காங்க.



## காதலா? பாசமா? பெரிது

காதல் பெரிதா, பாசம் பெரிதா? என்ற கருவை அடிப்படையாக வைத்து ஒரு புதிய படம் தயாராகிவருகிறது. அந்த படத்தின் பெயர் என் காதலே. இதில் கதாநாயகனாக புதுமுகம் ரவிகணேஷ் நடிக்க அவருடைய தந்தையாக நாசர் நடிக்கிறார். மகன் மீது பாசம் கொண்ட தந்தை தம் இருவருக்கும் இடையே யாரும் வரக் கூடாது என்ற கொள்கையை கொண்டவர். ஆனால் அவரை அறியாமல், மகன் காதல் வலைக்குள் சிக்குவதற்கு காரணம் ஆகிறார். ஒரு காலகட்டத்தில் அந்த மகன், தந்தையை மதிக்க தவறுகிறான். இதற்கு காரணம் ஒரு பெண் என்பதைக் கண்டுபிடிக்கிறார். அந்த பெண்ணை மகன் காதலிக்கும் விவரம் தெரியவருகிறது. இந்த காதலை உடைக்க அவர் நான்கு வழிகளைக் கையாளுகின்றார். இதுதான் படத்தின் கதை.

## ...டில் ...நமீதா

...ம் சாணக்கியா படம் ...மீது நமீதாவுக்கு காதல். ...லையா? என்று தெரியாமல் ...த்குமார் தன்னைக் காதலிக்கி... ...ரும் போது உற்சாகத்தில் துள்ளு... ...டல் பிறக்கிறது. பூதருவியா தரமாட்... ...ன்ற பாடலுக்கு சரத்குமாரும், நமீதாவும் ...ழையில் ஆடிப்பாடிய இந்தக் காட்சி கேரளா... ...கப்பட்டது.

...ரிலே ...பிடிப்பு நடத்தும் போது காட்டு யானை ...ப்பு குழுவினர் ஓட்டம் பிடித்தார்கள். யானை ...ு படப்பிடிப்பு நடத்தப்பட்டது. ...ஷ் ஆகியோர் நடிக்கிறார்கள். இசையினை ...கிறார்.

## ...ர்ச்சி வைத்தியம்

...ரை அலுவலகத்திற்கு அழைத்தார். ...மாதவன் சென்றதும் ...லைபேசியின் மைக் ...மாதவனின் படவியா... ...ம் குறித்து பலவிநியோ... ...தர்களிடம் கேட்டார். ...கள் அனைவரும் கன்ன... ...னா' வென திட்டி தீர்த்த... ...உடனே மாதவன் நீங்கள் ...வதைத் தாருங்கள் என்று ...எழுந்து சென்று...'' ... ஏ.

## காட்பாதரின் பின் தான் நான் கடவுள்!

கடந்த ஒரு வாரகாலமாகவே தயாரிப்பாளர் கவுன்சிலில் இடியும் மழையும்... அஜித் நடிக்கும் காட்பாதர் படம் சம்பந்தமான பஞ்சாயத்து! கட்டை பஞ்சாயத்துக்கெல்லாம் கட்டையைக் கொடுக்கிற பஞ்சாயத்தாக அமைந்ததுதான் இதில் வேடிக்கை. பணப்பற்றாக்குறையால் பாதியிலேயே நின்று போன காட்பாதர் படத்தை முடித்துக் கொடுத்துவிட்டுதான் பாலா இயக்கும் நான் கடவுள் படத்தில் அஜீத் நடிக்க வேண்டும் என்று அதிரடி உத்தரவு போட்டிருக்கிறது தயாரிப்பாளர் சங்கம்.

காட்பாதர் படத்திற்கு சம்பளமே வாங்கிக் கொள்ளாமல் நடித்துக் கொண்டிருக்கிறாராம் அஜீத். கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் இப்படம் ஆரம்பத்தில் வெகுஜோராகத் துவங்கி நாளடைவில் பணப் பற்றாக்குறை காரணமாக வாரத்தில் ஒரு நாள் ஷூட்டிங் என்றாகி, ஒரு கட்டத்தில் நின்றே போனது. திகதி கொடுத்த பிறகு நடிகைகள், நடிகர்கள் எல்லாம் வேறு படத்தில் பிஸியாகிவிட்டார்கள். குறிப்பாக இப்படத்தின் நாயகி அஸின் மளமளவென்று பிஸியாகி ஐந்து படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். கொடுத்த திகதியை பயன்படுத்தாத நிலையில் இவர் மீண்டும் எப்போது வந்து நடித்துக் கொடுப்பது?

பல மாதங்களாக வீட்டிலேயே இருந்து பொழுதைப் போக்கிய அஜீத்தும் பாலா இயக்கும் நான் பாதி கடவுள் படத்துக்காக முடியையும் தாடியையும் வளர்க்க ஆரம்பித்துவிட்டார். கே.எஸ். ரவிக்குமாரும் இது வேலைக்காகாது என்று முடிவெடுத்த பின் வேறு ஹீரோக்களை பார்த்துக் கதை சொல்ல ஆரம்பித்துவிட்டார். இந்த நிலையில்தான் தயாரிப்பாளர் சங்கத்தின் மேற்படி தீர்ப்பு வெளியாகியது.

இது நியாயமா? அடுக்குமா? என்று பொருமிக் கொண்டிருக்கிறது அஜீத் தரப்பு. காரணம் சக்கரவர்த்திக்காக அஜீத் இழந்தது கொஞ்சநஞ்சமல்ல என்கிறார்கள். நிக் ஆட்ஸ் எடுத்த சமீப காலப் படங்கள் எதற்கும் அஜீத் சம்பளம் வாங்கவில்லை என்று சொல்லப்படுகிறது. 'நான் கடவுள்' படத்துக்காக ஒன்றரைக் கோடி அட்வான்ஸ் வாங்கியிருக்கிறாராம் அஜீத் . இந்த பணம் சினிமா பைனான்சியர் ஒருவரிடமிருந்து கடன் வாங்கி அஜீத்திற்கு கொடுத்த பணம்.

பல மாதங்களாக அந்தப் பணத்திற்கு வட்டி கட்டிக் கொண்டிருக்கிறார் பாலா. விரைவில் படப்பிடிப்பை ஆரம்பித்தால்தான் படத்தை சீக்கிரம் முடித்துவிட்டு வட்டியில் இருந்து தப்பிக்கலாம் அவர். நிலைமை இப்படியிருக்க, பாலாவிற்கும் அஜீத்திற்கும் மேலும் பல சங்கடங்களை கொடுத்திருக்கிறது தயாரிப்பாளர் தரப்பு.



-அஜித்-

பெண்
சசி

# அன்பு செய்தலும் புரிந்துகொள்ளலும் உங்கள் வாழ்க்கையை வளப்படுத்தும்!

ஒரு குடும்பத்தில் பிரச்சினை என்றால் இன்றும் கூட கிராமங்களிலும், ஏன் நகரங்களிலும் கூட பெண்கள் சாத்திரம் கேட்கச் செல்வதும், வசிய மருந்துகளைப் பயன்படுத்துவதும், முழந்தாளிட்டு மணிக்கணக்கில் பிரார்த்தனை செய்வதும் பல வீடுகளில் சர்வ சாதாரணமாக நடக்கும் ஒரு விடயம்.

அதே போல வீட்டில் மனைவியோடு பிரச்சினை ஏற்பட்டால் அல்லது அவளுடனான நெருக்கம் குறைந்துபோனால் மது மற்றும் பிற மங்கையரை நாடுதல் போன்றவற்றில் ஆண்கள் ஈடுபடுவதையும் நாம் காணலாம். பிரச்சினை இதையும் தாண்டினால்தான் விவாகரத்து நடக்கின்றது.

உங்கள் இருவரில் யார் பிரச்சினைக்குக் காரணமாக இருந்தாலும் அதனால் நீங்கள் இருவருமே பாதிக்கப்படுகிறீர்கள்.

அவ்வாறே பிரச்சினையைத் தீர்க்க இருவரில் யார் ஒருவர் முன்வந்தாலும் விட்டுக்கொடுத்தலும் அதனால் வரும் இன்பமும் இருவருக்குமே கிடைக்கும்.

அப்படி என்றால் குடும்பத்திலே பிரச்சினை ஏற்படாமல் இப்படியொரு இன்பம் கிடைக்க என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் சிந்திப்பது புரிகிறது.

ஆம். முதலில் உங்கள் பேச்சால், செயலால், அன்பால் உங்கள் கணவரை நீங்கள் கவர வேண்டும். நீங்கள் அவரை மிக அதிகமாக நேசிக்கிறீர்கள் என்பதை அவர் புரிந்துகொள்ளுமாறு நடக்க வேண்டும்.

மற்றவர்களை விட உங்களவர்தான் விசேடமானவர் என நீங்கள் நினைத்திருப்பதாக அவருக்கு உணர்த்த வேண்டும். நீங்கள் எதைச் செய்தாலும் அதில் அவரது பங்களிப்பு இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.சுருக்கமாகச் சொல்லப்போனால் நீங்கள் பழைய நிலைக்கு மாற வேண்டும்.

அதாவது அவரைச் சந்தித்த போது நீங்கள் காட்டிய ரொமான்ஸ் உணர்வை மறுபடி புதுப்பிக்க வேண்டும். அப்போது பிரச்சினைகள் மறைந்துபோகும்.

கணவன் மனைவியரிடையே காதல் உணர்வுகள் உண்டாவதற்கு எது தடையாக இருக்கிறதோ அதை முதலில் தூக்கி எறிய வேண்டும். திருமணமான புதிதில் உங்களில் யாராவது ஒருவர் கோபித்துக் கொண்டிருந்தால் நீங்கள் வலியச் சென்று கோபத்தைத் தணித்திருப்பீர்களே, அதுபோல் உங்கள் மனஸ்தாபத்தின்போதும் நடந்துகொள்ளுங்கள். காதல் உணர்வுகள் எல்லோருக்கும் இயல்பாக உண்டு. அதிலும் யாரிடம் சாதுர்யம் அதிகமிருக்கிறதோ அவர்களிடம் எப்படிப்பட்டவர்களும் விழுந்துவிடுவார்கள்.



சின்னச்சின்ன விடயங்களில் நீங்கள் காட்டும் அக்கறைதான் உங்களவரின் சிந்தையை எப்போதும் நிறைத்துக்கொண்டிருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

மனைவி, குடும்பப் பொறுப்புகள் போன்ற சுமைகளால் நெருக்கப்பட்டிருக்கும் போது அவளுக்கு ஆதரவாக இருக்கப் பழக வேண்டும்.

பொதுவாக இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ள இருவரும் மனம் விட்டுப்பேச வேண்டும். அதுமட்டுமல்ல இருவருக்கும் பிடித்தமானதையே பேச வேண்டும்.

உங்களவருக்குப் பிடித்ததை அவர் எதிர்பாராத நேரத்தில் நீங்கள் செய்து அசத்திவிட்டால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார். தினமும் மனைவி எழுந்துதான் தேநீர் போட்டுக்கொடுக்க வேண்டும் என்ற எழுதாத நியதியை வைத்துக்கொள்கிறோம். இதை மாற்றி நீங்கள் மனைவிக்குத் தேநீர் போட்டுக்கொடுக்கலாம். சமையல் வேலைகளில் உதவி செய்யலாம்.பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும் விடயங்களில் மனைவியோடு ஒத்துழைக்கலாம். ஏதாவது அவளுக்குப் பிடிக்காது என்பதை நீங்கள் தெரிந்துகொண்டால் மறுமுறை நீங்கள் அதைத் தவிர்த்துவிடலாம்.

இப்படிச் சின்னச்சின்ன விடயங்களில் கணவன்– மனைவியரிடையே நெருக்கம் வேண்டும்.இவ்வாறே கணவனுக்கு எது பிடிக்கும் என்பதைப் பார்த்துப்பார்த்துச் செய்யும்போது கணவன் அதில் திருப்தியடைவதோடு உங்களையும் திருப்திப்படுத்த முயல்வான்.

குற்றங்குறை இல்லாமல் முழுமையாக இருப்பவர்கள் யாருமில்லை என்பதை உணர்ந்து, ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, மீண்டும் மீண்டும் நேசிக்க ஆரம்பிக்கும்போது பிரச்சினைகள் மறைந்துபோகும். மனதுக்குள் ரொமான்டிக் ஆசைகள் ஊற்றெடுக்கும்.

## இவ்வார பொன்மொழி

எந்தவொரு செயலையும்
பிறர் விருப்பு
வெறுப்புக்காகச் செய்யாதே;
உனக்காகச் செய்.

## டிப்ஸ்

* சுத்தமான தேங்காய் எண்ணெயில் கறிவேப்பிலைத் துளிர் சேர்த்து கொதிக்க வைத்து கூந்தலில் தடவிக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு முறை எண்ணெய் தடவும்போதும் மண்டை ஓட்டுப் பகுதித் தோலை விரல் நுனியால் மசாஜ் செய்யத் தவறாதீர்கள்.

உணவில் கீரை, முளை கட்டிய பயறு வகைகள், திராட்சை, பேரீச்சை போன்றவைகளைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

இரவில் பால் குடிப்பதை மறக்க வேண்டாம்.

கூந்தலில் அழுக்கு, சிக்கு சேராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.


எப்போதும் சுத்தமான நீரிலேயே கூந்தலைக் கழுவவேண்டும். குளிர்ந்த அல்லது இளம் சூடான தண்ணீரையே பயன்படுத்துங்கள்.

பதற்றத்தைக் குறையுங்கள், மகிழ்வோடு இருங்கள். அகத்தின் அழகு முகத்தில் மட்டுமல்ல. முடியிலும் தெரியும்.

அடிக்கடி தலைவலியா? அலட்சியப்படுத்தாதீர்கள். வைத்தியரின் ஆலோசனை பெறுங்கள். தலைவலியால் முடி உதிர்வது நிச்சயம்.

பேன், பொடுகு, முடி நுனி வெடிப்பு போன்றவைகளுக்கு வைத்தியரின் ஆலோசனை பெறுங்கள்.

# அடம்பிடிக்கும் குழந்தையா? தப்பு உங்களிடம் தான்!



''சாப்பிடச் சொன்னால் சாப்பிட மாட்டேன் என்கிறான். படிக்கச் சொன்னால் படிக்க மாட்டேன் என்கிறான். இவனோடு எனக்குத் தினமும் பெரிய போராட்டம்தான்''

இது குழந்தைகள் இருக்கும் வீட்டில் தாய்மாரின் புலம்பலாக இருக்கும். ஆனால் தவறு பிள்ளைகள் மீது இல்லை. பெற்றோர் மீதுதான் என்கிறார் மனோதத்துவ பேராசிரியர் ஒருவர்.

காலையில் எழுந்ததும் பாலில் நனைத்து இரண்டு பிஸ்கட் கொடுத்துவிட்டால் குழந்தைகளின் வயிறு நிரம்பிவிடும். அதற்குப் பிறகு அவர்களால் காலை உணவு சாப்பிட முடியாது. நாள் முழுவதும் இப்படி நொறுக்குத் தீனி கொடுத்துக்கொண்டே இருந்தால் குழந்தைகள் நிச்சயம் சாப்பிடவே மாட்டார்கள்.

குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் வரை திரவ உணவுகளைக் கொடுக்கலாம். பல் முளைக்கும்போது எதையாவது கடிக்க வேண்டும் என்று குழந்தைகள் விரும்புவது இயற்கை. அதற்கேற்ப உணவு வகைகளைக் கொடுக்க வேண்டும்.

உடலில் எந்தச் சத்துக் குறைவாக உள்ளதோ அந்தச் சத்துள்ள உணவைத் தான் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். உடலில் அந்தச் சத்து தேவையான அளவுக்குப் பூர்த்தியாகிவிட்டால் அந்த வகை உணவைச் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு வேறு வகையான உணவை விரும்ப ஆரம்பிப்பார்கள். அந்த நேரத்தில் அதே வகை உணவைச் சாப்பிடச் சொல்லி கட்டாயப்படுத்தக்கூடாது.

சாப்பிடும்போது டிவி பார்ப்பது, பத்திரிகை படிப்பது, தொலைபேசியில் கதைப்பது, அரட்டை அடிப்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். அப்போதுதான் குழந்தைகளின் கவனம் சிதறாது. முழுமையாகச் சாப்பிடுவார்கள்.

குழந்தைகளிடம் சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா சாப்பிடுகிறாயா என்று அபிப்பிராயம் கேட்கக் கூடாது. நொறுக்குத் தீனி கொடுப்பதைத் தவிர்த்து அந்தந்த நேரத்துக்கு சாப்பாடு கொடுக்கத் தொடங்கிவிட்டால் அவர்களாகவே கேட்டு வாங்கிச் சாப்பிடத் தொடங்குவார்கள்.

மற்றவர்கள் முன்பாக என் குழந்தை படிப்பதில்லை. அவன் உருப்பட மாட்டான் என்று பேசுவதை முதலில் தவிர்க்க வேண்டும். இவ்வாறு பேசுவது குழந்தைகளின் மனநிலையையும், படிப்பையும் மறைமுகமாகப் பாதிக்கும். எமக்கு படிப்பு வராது என்று பெற்றோரே கூறிவிட்டனர் என்று குழந்தைகளின் மனநிலை மாறிவிடும்.



குழந்தைகள் படிக்கும்போது பெற்றோர்களும் அவர்களுடனே இருக்க வேண்டும். ஒரே அறையில் குழந்தை படிக்கும் போது பெற்றோர்கள் வேறு விடயத்தைப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

அதற்காக குழந்தைகளைப் படிக்கவைக்க அவர்களை தனி அறையில் பூட்டி வைக்கவும் கூடாது.

படிக்கும் குழந்தைகள் நன்றாகத் தூங்க வேண்டும். வீட்டிலே சந்தோஷமான சூழ்நிலையைப் பெற்றோர் ஏற்படுத்தவேண்டும்.

பாடசாலையிலிருந்து குழந்தைகள் வந்ததும் அவர்கள் பாடசாலையில் கற்ற பாடங்கள் பற்றி அவர்களிடமே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இதெல்லாம் செய்து பாருங்கள். உங்கள் பிள்ளைகள் எவ்வளவு புத்திசாலிகள் என்பது தெரிந்துவிடும்.

## கேள்வி-பதில்

*அன்புக்குரிய சகோதரிகளே!*

உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி- பதில் பகுதி ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் சமூகப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள் பற்றியதாக இருக்கலாம். சுருங்கச் சொல்வதானால் உங்களுடைய எந்தவிதமான கேள்விகளுக்கும் மீரா பதில் அளிப்பார்.

*உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:--*

கேள்வி - பதில்
பெண்
சுடரொளி வார இதழ்
85, ஜயந்தமல்லிமாராச்சி மாவத்தை
கொழும்பு-14.

# விந்தை உலகம்

தற்போதெல்லாம் உலகில் Riginal என்றால் மவுசு குறைவுதான். Dupljcate என்றால் மதிப்பு அதிகம் தான்.

இதற்கு உதாரணம் இந்த செய்தி... தற்போதெல்லாம், பெண்கள் சத்திரசிகிச்சை மூலம் தங்கள் மார்பகங்களை பெரிதாக்கிக் கொள்வது தானாம் உலகில் பிரபல்யம்.

Pay watch என்ற அமெரிக்க தொலைக்காட்சித் தொடரில் நடித்த பமீலா அன்டர்சன் என்ற நடிகைதான் முதலில் தனது மார்பகத்தை சத்திரசிகிச்சை மூலம் பெரிதாக்கி பார்வையாளர்களை மூச்சு முட்ட வைத்தவர்.


இந்த மார்பை பெரிதாக்கும் சத்திரசிகிச்சையானது புழக்கத்துக்கு வந்து 22 ஆண்டுகள் ஆகிவிட்டது.

ஆயினும் தற்போதுதான் இந்த பைத்தியம் பலரையும் பாடாய்ப்படுத்துகிறதாம்.

லண்டனில் உள்ள ஹார்லி ஆஸ்பத்திரி தான் இந்த அழகுச் சத்திர சிகிச்சைக்குப் (Cosmetic Surgery) பிரபல்யம். அவர்களும் இந்த காலத்தில் கொஞ்சம் பைசா பார்த்துவிடலாம் என்ற நோக்கத்தில் பிரிட்டனின் பல நகரங்களிலும் 10 கிளைகளை திறந்து பெரீய்ய மனசு பண்ணி பெரிதாக்கும் வேலையில் குதித்திருக்கிறார்களாம்.

அதுசரி பெண்களுக்கு இப்படி எல்லாம் வசதி இருக்கிறதே.... ஆண்களான எங்களுக்கு... என்று பலரும் ஆதங்கப்படுவது கேட்கிறது... Sorry அப்படி எதாவது தகவல் கைவசம் இல்லை கிடைத்தால் தருகிறோம்.

# ச் சீய்....



இங்கே தலையை விட்டு இவர் என்ன செய்கிறார்... ச் சீய்....

# ஐடியா



'றக்கை கட்டி பறக்குதைய்யா அண்ணாமலை சைக்கிள்' என்று சினிமாப்பாட்டு இருக்கிறது.... இது கார் கட்டி பறக்கும் கால். அவசரப் பயணங்களுக்கு இப்படி மினி கார்களை காலிலே பொருத்தினால் வேலை சுலபம்தானே.

# நெட் குறும்பு



ஆஹா மணமகனும் - மணமகளும் நன்றாகத்தான் போட்டோவுக்குப் போஸ் கொடுக்கிறார்கள். ஆனால் பிளீஸ் கொஞ்சம் கூட சிரித்து விடாதீர்கள்.... கதை கந்தலாகி விடும்...




## ஜோக்

அந்தப் பெண் அவரச அவசரமாக அந்த தனியார் மருத்துவ மனைக்குள் புகுந்தாள். டாக்டரைச் சந்தித்து..

''டாக்டர் அவசரமாக எனது வயிற்றிலே உள்ள கருவை கலைக்க வேண்டும்'' என்று கேட்டாள்.


டாக்டரோ ''ஒரு உயிரைக் கலைப்பது என்பது இலேசான காரியமல்ல.... எனவே இதற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் கருவைக் கலைப்பது என்பது கஷ்டமான காரியம்'' என்றார் கறாராக....

''டாக்டர் எனக்கு ஏற்கனவே மூன்று பிள்ளைகள். எல்லாம் முறையே 1, 2, 3 வயதுகளில் இருக்கின்றன. எனவே இன்னுமொன்றை பெற்று பராமரிக்க முடியாது'' என்றாள் அந்த பெண்.

''சரி பெண்ணே! நீ சொல்லும் காரணம் ஏற்றுக் கொள்ளக் கூடியது தான். உனது கருவைக் கலைக்க நான் சம்மதிக்கிறேன். ஆனால் உனது கருக் கலைப்புக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று உனது கணவர் கையெழுத்திட்டுத் தரவேண்டும்... தருவாரா?'' என்று கேட்டார் டாக்டர்.

''அது எப்படி டாக்டர் அவர்தான் வெளிநாடு சென்று 3 வருடங்கள் ஆகிவிட்டதே! அவரிடம் எப்படிக் கையெழுத்து வாங்குவது?'' என்று கேட்டாள் அந்தப் பெண்.

# கண்ணாமூச்சி



இந்தப் படத்தைப் பாருங்கள். இதேபோல் உங்கள் கை விரல்கள் இரண்டையும் உங்கள் கண்ணெதிரே நீட்டிப் பிடித்தபடி எதிரே உள்ள சுவரில் உங்கள் பார்வையைப் பதியுங்கள். அப்படியே சுவரைப் பார்த்தபடியே உங்கள் விரல்களின் இடையே கவனியுங்கள்... இருபக்கமும் நகங்கள் கொண்ட ஒரு விரல்துண்டு தெரியும். பார்த்து ரசியுங்கள்.

# கண்ணில் ஏற்படும் வெள்ளை வளையமும் கொலஸ்திரோல் அதிகரிப்பும்

*கேள்வி:- ஆண். வயது 60. எனது கண்களின் கருவளையத்தைச் சுற்றி மெல்லிய வெள்ளை வளையம் ஒன்றிருக்கின்றது. இது கடந்த 2 வருட காலமாக இருக்கின்றது. இது தவிர கீழ் கண்மடலின் கீழ் பகுதியில் தோலில் படையாக ஏதோ இருக்கின்றது. இவை ஏற்படக் காரணம் என்ன? பார்த்த மருத்துவர்கள் வயதினால் ஏற்பட்ட மாற்றம் என்கின்றார்கள். விவரமாக விளக்குங்கள்.*

பதில்:— அறுபது வயதுக்குப் பின்னர் கல்சியம், கொலஸ்திரோல் உப்புகளின் செயற்பாடுகளால் கருவளையத்தைச் சுற்றி இப்படி வெள்ளை வளையம் உருவாகும். இதனை ARCUS SENILIS என்பார்கள். இதனால் எதுவித பார்வைக் குறைபாடும் ஏற்படாது. அதேவேளையில் கீழ் கண் இமையின் கீழ் இருக்கும் படைகள், இரத்தத்தில் கொலஸ்திரோல் அதிகரிப்பதால் ஏற்படுவது. இதனை XANTHELASMA என்பார்கள். இது எவ்வித பாதிப்பையும் தராது. ஆனால் உங்கள் உடலில் கொலஸ்திரோல் அளவு அதிகமாகஇருக்கும் என நம்புகிறேன். எனவே ஒரு பொது வைத்தியரை அணுகி( GENERAL PHYSICIAN)ஒரு முழு மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது உசிதம்.



*கேள்வி:-வயது 30. ஆண். திருமணமாகவில்லை. சுய இன்பம் காணுவதற்கு முன்னர் துர்நாற்றம் வீசும் ஒரு திரவம் சுரக்கிறது. இது ஏதாவது நோயின் அறிகுறியா? எனது விதை ஒன்று சிறியதாகவும்- மற்றது பெரிதாகவும் உள்ளது. சிறிதாக உள்ள விதை சிலவேளைகளில் உள் நோக்கி இழுக்கப்பட்டு அரையினுள் இருக்கும். இது எதனால் விளக்கம் தரவும்.*

பதில்:—விந்தணுக்கள் விதையில் உருவானாலும் விந்தணுக்களை எடுத்துச் செல்லவும் விந்தணுக்களின் போஷாக்குக்காகவும் சிறுநீர்ப்பையின் கழுத்தருகில் புரஸ்டேட் சுரப்பியும்— விந்து சுரப்பியும் (PROSTATE GLAND & SEMINAL VESICLE) இருக்கின்றன.

விந்தின் அதிகளவான திரவங்கள் இந்த இரண்டு சுரப்பிகளாலும் தரப்படுகின்றன. இது தவிர ஆணுறுப்பின் முன் பகுதியிலுள்ள சுரப்புகளும் இந்த விந்துவின் திரவத்தில் சேர்கின்றன. பாலுணர்வு ஏற்படும்பொழுது இந்த சுரப்புகள் யாவும் இயங்கி ஓரளவு சுரப்புகளே வெளி வருகின்றன.

எனவே விந்து ஸ்கலிதம் ஆகும் முன்னரே ஆண் குறியில் திரவங்கள் வருவது சாதாரணமானதே. விந்துக்கு ஓரளவு மணம் உண்டு. எனவே கவலை வேண்டாம்.

உங்கள் அடுத்த கேள்விக்குரிய குறைபாடு கொஞ்சம் சிந்திக்க வேண்டியது.


விதை உருவாகுவது வயிற்றறையினுள்ளே. குழந்தை பிறக்கும்போது வயிற்றின்றி விதை கீழே இறங்கி விதைப்பையினுள் வந்துவிடும். குறைமாதப் பிரசவம், குடும்பத்தில் இப்படியான குறைபாடு உள்ளவர்களுக்கு விதை முழுமனே பையினுள் இறங்காது நடுவழியில் வழக்கமாக இடுப்பின் அரைப் பகுதியில் நின்றுவிடும். நூற்றுக்கு மூன்று வீதமான குழந்தைகளுக்கு பிறக்கும்போது விதை இறங்கி இருப்பதில்லை. ஆறு மாதத்தில் விதைப்பைக்குள் இவை வந்துவிடும். இப்படி இறங்காமல் இருக்கும் விதையை UNDESCENDED TESTIS என்பார்கள். இதனை சத்திர சிகிச்சை மூலம், ஆண் குழந்தை யௌவன அல்லது வளர் இளம் பராயத்தை (ADOLESCENT STAGE) அடைய முன்னர் விதைப்பைக்குள் இறக்கி வைத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் இந்த விதை தன் தொழிலான விந்தணுக்களை உருவாக்க முடியாது.

அதுமட்டுமல்ல காலகெதியில் புற்றுநோய்க்கு ஆளாகும் சாத்தியம் உண்டு. சிலருக்கு உங்களுக்கிருப்பது போல் விதைப் பைக்குள் இருக்கிற விதை முன்னர் உள்ள வயிற்றறை தொடர்பினால் சில வேளைகளில் மேலே இழுக்கப்பட்டு பின்னர் கீழே இறங்கும். இதனை RETRACTILE TESTISஎன்று அழைப்பார்கள். இது முன்னர் கூறிய விதை நிலைபோல் புற்றுநோய் தரக்கூடியதல்ல. ஆனால் வளர் இளம் பராயத்துக்கு முன்னர் ஏறுவதும், இறங்குவதும் நிற்காவிடில் சத்திர சிகிச்சை செய்தல் அவசியம்.

***கேள்வி:- ஆண். வயது 25. எனது நண்பர் ஒருவர் கடந்த மாதம் இரத்தப் புற்றுநோயால் சிறுவயதில் இறந்துவிட்டார். இப்பொழுது எனக்குப் புற்றுநோய் பற்றிய பயம் வந்துள்ளது. புற்றுநோய் ஏன் ஏற்படுகிறது? எப்படி புற்றுநோய் வராமல் தடுக்கலாம் என்பது பற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?***

**பதில்:**—முதலில் உங்களுக்கு ஏற்பட்டுள்ள பய உணர்வை விலக்கிவிட்டு நீங்கள் கேட்ட வினாக்களுக்கு பதிலளிக்க வருகின்றேன். புற்றுநோயாளர் ஒருவரோடு பழகுவதாலோ, இரத்த சம்பந்தம் வைப்பதாலோ, உடலுறவு கொள்வதாலோ புற்றுநோய் பரவுவதில்லை. சில புற்றுநோய்களுக்கு சில வைரஸ் தொற்றுகள்தான் காரணம் என அறியப்பட்டாலும்— வைரஸ் தொற்றின் பின் உடலின் கலங்களில் ஏற்படுகிற மாற்றமே புற்றுநோய் உண்டாகக் காரணமாக இருக்கின்றதே ஒழிய, அந்த வைரஸ் தொற்று ஏற்பட்ட எல்லோருக்கும் புற்றுநோய் நிச்சயம் வராது.

உடலின் கலங்களின் நிரந்தரமான தொழில் வளர்வதும், வளர்ந்து பெருகுவதுமே. இந்தக் கலங்களின் வளர்ச்சியும், பெருக்கமும் கட்டுக்கடங்காமல் ஏற்படும்போது அந்த உறுப்பில் கட்டிகள் (tumours)ஏற்படும். இதனையே புற்றுநோய்க்கட்டி அல்லது புற்று என்று அழைப்பார்கள். இப்படி ஏற்பட்ட புற்றுகளிலிருந்து, புற்றுநோய்க் கலங்கள் மற்றைய உறுப்புகளுக்கு— இரத்தோட்ட மூலமோ, நிணநீர்க் குழாய்கள் மூலமோ பரவுவதை METASTASIS என்று சொல்வார்கள். இந்த அபரிதமான— அசாதாரணமான வளர்ச்சி ஏன் ஏற்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள ஒவ்வொரு புற்றுநோய்க்கும் வித்தியாசமான காரணங்களை அறிந்துள்ளார்கள். உதாரணமாக வாயினுள் ஏற்படும் வாய்ப்புற்று நீண்டகாலமாக வெற்றிலை போடுபவர்களுக்கு ஏற்படலாம். வெற்றிலை போடுபவர்கள் உபயோகிக்கும் சுண்ணாம்பு, மற்றும் வெற்றிலையைக் குதப்பி கொடுப்புக்குள் வைத்துக் கொள்வது போன்ற பழக்கங்கள் வாயினுள் அழற்சியை (IRRITATION)ஏற்படுத்தி நீண்டகாலத்தில் புற்றுநோய்க்கு வாய்ப்பளிக்கலாம். முன்னர் கூறியதுபோல் சில வைரஸ் தாக்கங்கள் இரத்தப்புற்று, எலும்புப் புற்று காரணமாக இருக்கலாம். இதுதவிர RISK FACTORS அதாவது புற்று ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் என்று சில காரணங்களைக் கூறுவார்கள். சிலபுற்றுகள் பரம்பரை பரம்பரையாக வரக்கூடியவை. பரம்பரை அலகுகள் சில புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பைத் தருவதால் இந்தப் பரம்பரை அலகுகள் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு கொடுபடும்போது— அந்தத் தலைமுறையின் ஒருசிலருக்கு புற்றுநோய் தோன்றலாம். இது பற்றி இன்னும் சரி, பிழைஎன்ற விவாதங்கள் மருத்துவ உலகில் நடைபெறுகின்றன. புற்றுநோய்க்குரிய பரம்பரை அலகு இருந்தாலும் புற்றுநோய் ஏற்படுவது சூழல், வாழ்க்கை முறை, உணவு முறைகளிலும் தங்கியிருக்கின்றதென்று சிலர் வாதிடுகிறார்கள். அடுத்த சாத்தியக்கூறு வயது. சில புற்றுகள்WILMS TUMORஎன்கின்ற சிறுநீரகப்புற்று குழந்தைகளுக்கு மாத்திரமே வரும். மேலும் அநேகமான புற்றுநோய்கள் அறுபது வயதுக்குப் பின்னரே வருகின்றன. இது தவிர சூழலிலுள்ள அஸ்பெஸ்டோஸ் துகள்கள், சிகரெட் புகை போன்றவை நுரையீரல் புற்றுநோய்க்குக் காரணமாகின்றன. சில உணவு வகைகளும் புற்றுநோய்க்குக் காரணிகளாக கருதப்படுகின்றன. நிறையக் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை உண்போருக்கு பெருங்குடல், மார்பு, புரஸ்டேட் புற்றகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். நிறைய மது உபயோகிப்பவர்களுக்கு OESOPHAGEAL என்கின்ற உணவுக்குழாய் புற்று ஏற்படலாம். அச்சாறு, ஊறுகாய் உணவில் சேர்ப்பவர்களுக்கு இரப்பைப் புற்று ஏற்படும்.



எனவே அமெரிக்காவின் புற்றுநோய் சங்கம் பின்வரும் வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதால் புற்றுநோய் ஏற்படுவதை அதிகளவில் குறைக்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது.

1. புகைப்பதைத் தவிர்க்க. சிகரெட் புகைச் சூழலில் இருப்பதைத் தவிர்க்க.

2. புற்று ஏற்படும் சூழலில் வாழ்வதைத் தவிர்க்க. (உதாரணம் அஸ்பெஸ்ரோஸ், தொழிற்சாலைச் சூழல்)

3. அதிகளவும் வெயிலில் திறந்த மேனியோடு நிற்பதைத் தவிர்க்க(அது வெள்ளையருக்கு மட்டும்)

4. உணவில் நிறைய கொழுப்புச் சேர்ப்பதை— நிறைய இறைச்சி சேர்ப்பதைத் தவிர்க்க.

5. நிறையப் பழங்களையும், காய் கறிகளையும் உணவில் சேர்க்க.

6. உடலுழைப்புச் செய்க.

7. நிறை அதிகப்படாமல் கவனிக்க.

இந்த வாழ்க்கை முறையைப் பின்பற்றினால் புற்றுநோய் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ளலாம்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# சொர்க்கமும் நரகமும் ஏன்?

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு என்ற இயற்கையின் நியதியை சிறு வயது முதலே உணரத் தொடங்கிவிட்டால் போதும்; தெளிவான பொறுப்புணர்ச்சி என்பது எல்லோருக்கும் வந்துவிடும் என்கிறார் யோகி ராஜ் வேதாந்த மகரிஷி.

அவர் சொல்வதைக் கேட்போமா?

எம் முன்னோர்கள், நல்லது கெட்டது என்பதைத் தீர்மானித்து சிலவற்றைச் செய்யலாம், சிலவற்றைச் செய்யக்கூடாது என்னும் முறையிலே அனுமதி கொடுத்தும், தடை விதித்தும் வந்துள்ளார்கள். அவைகளெல்லாம் அந்தக்காலத்தை ஒட்டிய வாழ்க்கை முறைக்குப் பொருத்தமாக இருந்திருக்கும்.

நாம் இன்னும் அதிகமாக ஆழமாகப் போனால் அந்தக் காலத்தில் 'இதைச் செய், அதைச் செய்யாதே என்று சொல்வதற்கு அவர்கள் எடுத்துக்கொண்டது சொர்க்கம், நரகம் என்ற இரண்டு கற்பனைகளே. நல்லவை செய்தால் கடவுள் ஒருவனுக்கு நல்ல இடத்தைக் கொடுப்பான். தீயவை செய்தால் தண்டிப்பான் என்று ஆசை காட்டியும், அச்சுறுத்தியும் நல்லனவற்றைச் செய்யவும், தீயனவற்றைத் தடுக்கவும் வேண்டிய அளவுக்கு மக்களுக்குப் போதித்து வந்தார்கள். விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெருகி வரும் இந்தக் காலத்தில் அந்த முறை எவ்வளவு நாட்கள் தொடர்ந்து பயன்படும்?

இன்றைக்கு என்ன வேண்டும் என்றால் 'ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு' என்ற இயற்கையின் நியதியை மனிதன் உணர்ந்துகொள்ளக்கூடிய அளவுக்கு அந்த உணர்வு ஒவ்வொருவருக்கும் வந்துவிட வேண்டும். 'இதைச் செய்தால் அதன் விளைவு இதுவாகத்தான் இருக்கும். அந்த விளைவைத் தாங்கிக்கொள்வதற்கு நான் தயாரா?' என்ற அளவுக்கு ஒவ்வொருவரும் அவர்களுடைய செயலின் விளைவாகத் தொக்கி நிற்கக் கூடிய ஓர் உண்மையை இயற்கை அமைப்பை உணர்ந்து கொள்ளக்கூடிய முறையில் உள்ள கல்விதான் இன்றைக்கு அவசியம்.

செயலிலே விளைவு இருக்கிறது என்பதை தெளிவாகவும் உறுதியாகவும் உணர்ந்துகொண்டால் ஒரு ஆசை எழும்போது, அதனை நிறைவேற்றிக்கொள்ளச் செயலில் இறங்கும் நாம் நல்லது அடைவோம் என்று நன்மை செய்வான், தீமை செய்வான் என்று அஞ்சி அதைத் தடுத்துக்கொள்வான். இந்த முறையிலே தான் தற்காலத்துக்கு கல்வி முறை அவசியம். 'வினையும் பயனும்' என்ற முறையிலே ஒரு தெளிவான பொறுப்புணர்ச்சி ஏற்படுவது இன்று எல்லோருக்கும் அவசியம்' என்கிறார் வேதாந்திரி மகரிஷி.

மேலும் மனிதனின் வாழ்க்கைத் தத்துவத்தையும் பின்வருமாறு விவரிக்கிறார்.

''மனித இனம் வாழ்வதற்கு ஒரே உலகம் தான் இருக்கிறது. மனிதனுக்குத் தேவையான நீரை வழங்குவதற்கு கடல் ஒன்றுதான் உள்ளது. எல்லோரும் மூச்சு விடுவதற்குரிய காற்றும் ஒன்றுதானுண்டு. உயிர்களுக்கு எல்லா வகையிலும் ஆதாரமாக இருக்கக் கூடிய சூரியனும் ஒன்றுதான். இந்த நான்கில் ஒன்றையுமே மனிதன் செய்தது இல்லை.

மேலும் விரிவான மனித சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் அறிவின் திறமையாலும், உடல் உறுப்புகளின் செயல் திறமையாலும் உற்பத்தி செய்து கொடுக்கப்படும் பொருட்களின் மூலமும் இந்த மனித குலம் மொத்தமும் வாழ்ந்து வருகிறது. இவ்வாறே ஒவ்வொருவருடைய தினசரி வாழ்க்கையும் அமைந்து உள்ளது'' என்கிறார் அருள் தந்தை.

# ஒரு ரோஜாப்பூ கண்ணீர் சிந்துகிறது

செல்வி—கூட்டமில்லாத ரயிலில் ஏறினாள். யன்னல் பக்கமாக இருக்கையில் அமர்ந்தாள். தூரத்திலிருந்த அந்த பெரிய ஆலமரத்திலிருந்து சில குருவிகள் கீச் கீச் என சத்தமிட்டுக் கொண்டிருந்தன.

யாரோ ஒரு பிச்சைக்காரக் கிழவன் அலுமினியத் தட்டுடன் தட்டுத்தடுமாறி நடந்து வந்தான். செல்வி அவனை யன்னல் பக்கமாக அழைத்து இருபது ரூபாய் நோட்டொன்றை தட்டிலே போட அவன் ஆச்சரியத்துடன் வாய் பிளந்தவாறு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது விசில் சத்தம் கேட்கவே ரயில் மெதுவாக நகரத் தொடங்கியது. அவள் நீண்டதொரு பெருமூச்சை விட்டவாறு ரயில் இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.

''செல்வி... நான் கட்டிக் காத்த இந்தக் கலை என்னுடனேயே போயிடப் போகுதா... என் சுவாசத்தோட கலந்துவிட்ட இந்த கலை என் சாவுக்கப்புறம் என்னுடனேயே மண்ணோட மண்ணாகப் போயிடப் போகுதா? எனக்கு பேரு வச்ச எங்கப்பாவை விட எனக்கு பேரும் புகழும் தேடித்தந்த இந்த கலை என்னோட தொலைந்து போயிடப் போகுதா. ஐயோ வாரிசு இல்லாம போறேனே. என் கட்டை வேகுமா....?''

செல்வி. சட்டென பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். கைப்பையிலிருந்த அந்த மங்கிப் போன பழைய புகைப்படத்தை எடுத்தாள். அதில் முறுக்கி விடப்பட்ட மீசையுடன் கம்பீரமாக இருந்தார் செல்வியின் தாத்தா வீரபாண்டியன். தன் கடைசி மூச்சு வரை தான் கற்ற கலைக்காகவே வாழ்ந்தவர்.

''செல்வி நல்லா யோசிச்சுப்பாரு... நான் உன்மேலே வச்சிருக்கிறது புனிதமான அன்பு. நம்மோட இந்தப் புனித உறவு பார்த்தேன், சிரித்தேன் என்று வந்ததில்லை. படிப்படியா பலமான அஸ்திவாரத்தோட உருவானதுதான் இந்தக் காதல் கோட்டை.

என்னை கைவிட மாட்டீங்கள்தானே என்று நீ அடிக்கடி கேட்பாய். ஆனால் இப்போ நம்ம காதலே கைநழுவி போய் விடுமோ என்று எனக்கு கவலையா இருக்கு. தோட்டத்துச் செம்மண்ணிலே விழுந்த மழை நீரைப் போல இறுக்கமா இருந்த நம்ம காதலை இன்றோட முடிவுக்கு கொண்டுவருவோம் என்று சுருக்கமா சொல்லிட்டியே, இது கடவுளுக்கே அடுக்குமா....''




பாலா சங்குப்பிள்ளை

ரயில் குலுக்கலுடன் ஏதோவொரு ரயில் நிலையத்தில் நிற்கவே சட்டென அவள் சுயநினைவுக்கு வந்தாள். கைப்பையிலிருந்த அந்த சிறிய தண்ணீர் போத்தலை எடுத்தாள். தண்ணீரை மெதுவாக பருகினாள். ரயில் மறுபடியும் புறப்படத் தொடங்கியது.

''இங்க பாரு செல்வி — உன்னை கஷ்டப்பட்டு படிக்க வச்சது நான். நான் சொல்லுற படிதான் நீ கேட்கவேணும். உன் தாத்தா பேச்சைக் கேட்டுக்கிட்டு கரகாட்டம் அதுஇது என்று அலைஞ்சியோ எனக்கு கெட்ட கோபம் வரும். எங்கப்பன் அந்த காலத்தில் தோட்டத்து வேலை வெட்டி என்று பார்க்காம வேசம் கட்டிக்கிட்டு ஊர் ஊராக ஆடப் போனாரு. வெறும் பேரும் புகழும் கிடைச்சதேயொழிய பெரிசா காசுபணம் கிடைக்கல்ல. அன்றைக்கு கஷ்டப்பட்டு வேலை செஞ்சிருந்தா இன்றைக்கி பிராவிடன் பண்ட் அது இது என்று கை நிறைய வந்திருக்கும். வயசான காலத்துல வயித்துப் பசி இல்லாம இருந்திருக்கலாம். ஆனா தான் கெட்டதுமில்லாமல் டீச்சர் தொழில் செய்யிற உனக்கும் கரகாட்டம் அது இது என்று சொல்லிக் கொடுத்து உன்னையும் கூத்தாட வைத்து எனது மானத்தை வாங்கிக்கொண்டிருக்காரு. வலை வீசி மீன்பிடிக்கிறமாதிரி உனக்கு வீண் ஆசைகாட்டி உன்னோட எதிர்காலத்தையே சூன்யமாக்கப் பாக்கிறாரு. நான் தோட்டத்தில வேலை செய்யிற சாதாரண தொழிலாளிதான். ஆனா, அதுக்காக என் கௌரவத்தை இழக்க முடியாது. என் பேச்சைக் கேட்காமல் உன் தாத்தாவோட பேச்சை கேட்டு ஆடுறதா இருந்தா அப்புறம் உன் அப்பன் கண்ணுசாமி சும்மா இருக்க மாட்டான்....''

''டிக்கெட்.... டிக்கெட்.....''

செல்வி ரயில் பிரயாணச் சீட்டை எடுத்து பரிசோதகரிடம் கொடுத்தாள். அவர் அதைப் பார்த்துவிட்டு அவளிடமே கொடுக்க, செல்வி மறுபடியும் கண்களை மெதுவாக மூடினாள்.

''செல்வி... உன் அப்பன் உன்னை அதிகமா திட்டிவிட்டானாம். அவன் அப்படித்தான் எதுக்கெடுத்தாலும் கத்துவான். ஆனால் ரொம்ப நல்லவன். அவனுக்கு இந்த கூத்தாடுற விஷயமெல்லாம் புடிக்காது. செல்வி, உனக்குத் தெரியுமா இந்த கரகாட்டம், காவடியைக் கத்துக்கிறதுக்காக சின்ன வயசுல எவ்வளவு கஷ்டப்பட்டேன். என்னோட வயசு பசங்க கொய்யாப்பழம் பறிக்கிறதுக்காக ஓடுவாங்க. ஆனா நான் வெறுங்காலோட கல்லுப்பாறையில் காவடி ஆடுவேன். பதினாறு வயசில மத்தவனுக்கெல்லாம் மீசை முளைச்சிச்சு. ஆனா, எனக்குமட்டும் கரகாட்டம் மேலத்தான் ஆசை அதிகமாயிடுச்சி. திருவிழான்னு வந்துட்டா எனக்கு மரியாதை செஞ்சி தோட்டம் தோட்டமா என்னை அழைச்சி கூட்டம் கூட்டமா நின்று என் ஆட்டத்தை ரசிப்பாங்க. என் பேரு எல்லா தோட்டத்துலயும் பிரபல்யமாயிடுச்சி. டவுன் திருவிழா என்றால் கூட என்னைத்தான் கூப்பிடுவாங்க. நிறையப் பணம் கிடைக்கும். சந்தோஷத்தில மனம் துள்ளும். கரகாட்டக்கும்பம் தலைக்கு ஏறிவிட்டா எனக்கு பசி, தாகம் எதுவுமே இருக்காது. என்னோட இந்த கலையை நான் உயிரா நினைச்சேன். என்னோட ஆட்டத்தைப் பார்த்து மயங்கித்தான் உன் பாட்டி பார்வதி என்னைக் கட்டிக்கிட்டா. உன் அப்பனை அருமை பெருமையா வளர்த்தேன். அஞ்சாம் வகுப்போட அவனுக்கு படிப்பு ஏறலை. கரகாட்டக்காரன் மகன் என்று பெருமையா சொல்றதும் அவனுக்குப் பிடிக்கலை. ஆனா, ஆடாம என்னால இருக்க முடியலை. என்னைச் சாடாம இருக்க அவனாலும் இருக்க முடியலை. வயசு போகப் போக என்னால சரியா ஆடமுடியலை. எனக்கப்புறம் இந்த கலை அழியாமல் இருக்க ஒரு வாரிசு தேவையா இருந்திச்சு.

எந்நேரமும் தாத்தா தாத்தா என்று என்னையே நீ சுத்திச் சுத்தி வந்தே. உன் அப்பனுக்கு தெரியாம சின்ன வயசிலேயே என் வித்தையை உனக்குச் சொல்லிக் குடுத்தேன். ரொம்ப ஆர்வமா நீ ரொம்ப ரொம்ப சீக்கிரமா இந்த கலையை கத்துக்கிட்டே. படிக்கிற காலத்துல பாடசாலை கலை நிகழ்ச்சிகளில் நான் கத்துக்கொடுத்த வித்தையை சரியா செஞ்சி பரிசுகளை குவிச்சே. எனக்கு எவ்வளவு பெருமையா சந்தோஷமா இருந்திச்சு தெரியுமா? என் வித்தைக்கு சரியான வாரிசு கிடைச்சாச்சுன்னு மகிழ்ச்சி அடைஞ்சேன்.... ஆனா.... உனக்குன்னு கல்யாணம் காட்சின்னு வந்துட்டா அப்புறம் இந்த வித்தையோட நிலைமை என்ன என்று யோசிக்கிறப்போதான் எனக்கு கவலையா இருக்கு...''

ரயில் மறுபடியும் ஏதோ ஒரு இடத்தில் நின்றது. இன்னமும் அவள் இறங்க வேண்டிய இடம் வரவில்லை. எவ்வளவு காலத்துக்குப் பின் அவள் தன் பிறந்த மண்ணில் காலடி வைக்கப் போகிறாள். ரயில் மறுபடியும் புறப்படத் தொடங்கியது.

''செல்வி உங்களால எங்க பாடசாலைக்கே பெருமை கிடைச்சிருக்கு. பின் தங்கிய இந்தப் பாடசாலை இப்போ எல்லோருக்குமே தெரிய வந்திருக்கு. நான் மூணு வருஷமா இந்தப் பாடாசலையில் அதிபரா இருக்கேன். என்னால செய்ய முடியாததை நீங்க செஞ்சி முடிச்சிட்டீங்க டீச்சர்....''

''ஐயையோ பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க சேர். இதுல நான் பெரிசா எதுவும் செஞ்சிடலை. நீங்க ஊக்கப்படுத்தினீங்க. எனக்கு தெரிஞ்சதை சொல்லிக் கொடுத்து பிள்ளைகளை உற்சாகப்படுத்தினேன்... அவ்வளவு தான்....''

''அப்படியில்லை டீச்சர்... தமிழ்த்தினப் போட்டியில நம்ம பாடசாலை அகில இலங்கை ரீதியில கரகாட்டத்துல முதலிடத்துக்கு வந்திருக்கு. வித்தை சரியா தெரிஞ்சதால தான் நமக்கு முதலிடம் கிடைச்சிருக்குது. கரகாட்டத்தைப்பத்தி நீங்க ரொம்ப நல்லா தெரிஞ்சி வச்சிருக்கீங்க. எந்தக் காரணம் கொண்டும் இதை நிறுத்திடாதீங்க. தொடர்ந்து நீங்க மற்ற மாணவர்களுக்கும் இதை சொல்லிக் குடுக்கணும். உங்களால அழிவு நிலையிலிருக்கிற இந்தக் கலை வளரணும். இதுதான் என்னோட ஆசை....''

செல்வி சட்டென்று கண் திறந்தாள். தோல்பையிலிருந்த அந்த புகைப்படத்தை வெளியே எடுத்தாள். அதில் செல்வியின் பக்கத்தில் அரும்பு மீசையும் குறும்பு பார்வையுமாக செழியன் நின்றிருந்தான். செல்வி அந்த புகைப்படத்தையே சற்று நேரம் உற்றுப் பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீர் ஆறாக பெருகியது. செழியன் செழியன் என அவள் வாய் முணுமுணுத்தது....

''செழியன் என்னை மன்னிச்சிடுங்க... நீங்க என் மேலே உயிரையே வச்சிருக்கிறது உண்மைதான். ஆனா, என்ன செய்யிறது. எனக்கு காதலும் வேணும். என் தாத்தாவோட கலையும் வளரணும். ரெண்டு கண்ணுல எந்த கண்ணு வேணும்னு கேட்டா நான் என்ன சொல்லுவேன். நீங்க உண்டு, உங்க ஆசிரியர் தொழிலுண்டு என்று இருந்தீங்க. நான் தான் உங்கள் கவனத்தை திசைதிருப்பினேன். சுத்தமாயிருந்த உங்க மனசுல அழுத்தமா காதலைப் பதிய வச்சேன். ஆனா, வேற வழியில்லை. நீங்க வேறொரு நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் செய்யுங்கோ. என் தாத்தாவோட கலை வாழணும்னா என் வாழ்க்கையே தியாகம் செய்யிறதை விட எனக்கு வேற வழி தெரியலை....''

''செல்வி பேசி முடிச்சிட்டியா? இனி நான் பேசலாமா. மத்தவங்களை மாதிரி என்னையும் நீ ரொம்ப சாதாரணமாக எடை போட்டுட்டே இல்லையா...! என் மனசு சுத்தமா இருந்தது உண்மைதான். ஆனா எப்போ முதன் முதலா உன்னைப் பார்த்தேனோ அப்பவே உன் உருவம் என் மனசில பதிஞ்சிடுச்சு. என் மனசில வளர்ந்திருக்கிற காதல் பயிருக்கு தண்ணீர் ஊற்றி வந்த நீயே இப்போ அதுக்கு வெந்நீரை ஊற்றி என்னைக் கண்ணீர்க் கடலில் தள்ளிவிட நினைக்கிறியே இது நியாயமா? எனக்கென்று ஒரு கடமையிருக்கு என்கிறதை நான் மறுக்கவில்லை. ஆனா, அதுக்காக காதலை அடகு வைக்கலாமா?

பூவிழுந்த கண்ணில் கோளும் குத்தின மாதிரி நாளும் உன் நினைவிலேயே சுகம் காணும் என் மனசில உன் வார்த்தைகளால் நெருப்பால சுட்டு பொசுக்கிறியே. உன்னை மறந்து நான் எப்படி இன்னொருத்தியை கைப்பிடிக்க முடியும்...''

''செழியன், என்னை வார்த்தைகளால கொல்லாதீங்க. நான் ஏற்கனவே நொந்து போயிருக்கிறேன். மரணப் படுக்கையிலிருக்கும் என் தாத்தாவின் கடைசி ஆசையை நிறைவேற்ற வேண்டியது என் கடமை தானே...''

''உன்னோட கடமைக்காக நம்ம காதலை பலிக்கடாவாக்கப் போறியா?''

''ஐயோ... செழியன்... எனக்கு மட்டும் உங்களை விட்டு பிரியிறது வேதனையில்லையா... ஆனா எனக்கு வேற வழி தெரியவில்லையே....''

''ஏன் இல்லை. நம்மளோட காதல் எந்த வகையில உன் கடமைக்கு தடையா இருக்குது...?''

''இது கடமை மட்டுமல்ல தவம். தாத்தாவோட உயிர் மூச்சில இருக்குது. அவரோட கலை. அந்தக் கலையை வாழ வைக்கணும் என்றால் அதுக்கு நம்ம காதலை விலை கொடுக்கிறதைவிட வேற வழியில்லை. தாத்தா கிட்ட நான் கற்ற இந்தக் கலையை வாழ வைக்கணும் என்றால் என் கவனம் முழுவதும் அதிலேயே இருக்கணும். கவனம் தப்பினா வித்தை வீணாயிடும். காதல், கல்யாணம் எல்லாம் இந்த வித்தையை சொத்தையாக்கிவிடும். உங்களை மறுபடியும் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். என்னால உங்க வாழ்க்கை வீணாயிடக்கூடாது. நீங்க வேறொரு நல்ல பொண்ணா பார்த்து மணம் முடிச்சிக்கங்க. என்னை மறந்துடுங்க. இதுதான் என் இறுதி முடிவு.''

''அப்படின்னா இதையும் கேட்டுக்க. உன்னைத் தவிர இனி வேற எவருக்கும் என் மனசில இடம் கிடையாது. உன் மனம் மாறி என்னைத் தேடி வரும் வரை நான் உனக்காக காத்திருப்பேன். எத்தனை வருஷம் ஆனாலும் பரவாயில்லை. நீ வரும் வரை என்னோட வாழ்நாளை இந்த ஏழை மாணவர்களின் அறிவுக்கண்களை திறப்பதற்காகப் பயன்படுத்துவேன். உன்னோட பழகிய அந்த அற்புதமான ஆனந்தமான நாட்களை நிச்சயமாக என்னால் மறக்கமுடியாது. அந்த நினைவுகளை நீ என்னைத் தேடிவரும் வரை திரும்பத் திரும்ப மீட்டிப் பார்ப்பேன். அந்த சுகம் போதும் எனக்கு....''

செல்வி, அந்தப் புகைப்படத்தை பத்திரமாக தோல்பையில் வைத்தாள். எவ்வளவு காலத்திற்குப் பின் தன் சொந்த இடத்துக்குப் போகிறாள். தன் தாத்தாவின் ஆசையை நிறைவேற்றிவிட்டாள். அவள் பயின்ற கலையைதான் சென்ற இடமெல்லாம் பரப்பினாள். ஒவ்வொரு இடத்திலும் அந்தக் கலை வளர நிரந்தரமாக அதற்கென ஒரு அமைப்பை உருவாக்கினாள்.

''செல்வி கலைஎன்கிற பெயரால காசு பணம் சம்பாதிக்கிற இந்த காலத்தில நீ உன் எதிர்காலத்தையே அதுக்காக தியாகம் பண்ணிட்டியேம்மா... வெளிநாட்டுல இருக்கிற என்னோட பையன் போனவாரம் தான் எனக்குக் கடிதம் போட்டான். அங்கே நம்ம பாரம்பரிய கலைகளை சொல்லிக் கொடுக்க ஒரு திறமையான கலைஞர் வேணுமாம். ஐந்து வருட ஒப்பந்தம் கை நிறைய சம்பளம், சாப்பாடு, தங்குமிட வசதி எல்லாம் இலவசமாம். நான் உன் பெயரைத் தான் எழுதினேன். உனக்கொன்னும் ஆட்சேபனை இல்லையே....''

''வெளிநாட்டுலயும் நம்ம கலையை வளர வைக்கிறதுக்கு இப்படிஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கும் போது நான் எப்படி அதை வேணாம் என்று சொல்லுவேன். ஆனாலும், ரொம்ப நாளுக்குப் பிறகு என் சொந்த இடத்தைப் பார்க்க ஆசையா இருக்குது. அங்கே எனக்காக ஒருத்தர் காத்துக் கொண்டிருக்கிறார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

# ராசி பலன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 12இல் இருப்பது சிறப்பு இல்லை. மேலும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். வீண் அலைச்சல் இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். (3,6) உரிய புதன் நாலில் நன்மை செய்யமாட்டார். எதிரிகளால் தொல்லை இருக்கும். வங்கிகளில் கடன் இருக்கும். இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. நாலாம் வீட்டில் இரு சுபக்கிரகமும் ஒரு பாபக்கிரகமும் இருப்பதால் தாய்நலம். வாகன சுகம் உண்டு. (9,12) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. பிதாவுக்கு கூடாத காலம். சயன சுகம் இருக்காது. (10,11) உரிய சனி 4இல் இருப்பது தொழில்துறையை பாதிக்கலாம்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது விசேஷம். மேலும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். (2,5) உரிய புதன் மூன்றில் நல்ல பலனைத்தருவார். கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலுக்குரிய சூரியன் இரண்டில் இருப்பது நல்லதல்ல. தாய்க்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (7,12) உரிய செவ்வாய் 11இல் இருப்பது விசேஷம். திருமணபலன் உண்டு. சயன சுகம் உண்டு. (9,10) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். பிதா நலம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. ராசியையும் ராசநாதனான செவ்வாயையும் குரு பார்ப்பது விசேஷம். பிரயாண வாய்ப்பு உண்டு. ஏதேனும் தோசம் இருப்பினும் விலகும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் இரண்டில் இருப்பது நல்லது. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதில் பறவாயில்லை. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். வாகன சுகம் உண்டு. தாய் நலம். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டாம் வீட்டில் இரு சுபக்கிரகங்கள் இருப்பதால் கையில் பணம்இருக்கும். (5,12) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. (6,11) உரிய செவ்வாய் 10இல் மத்திம பலனைக் கொடுக்கும். பகைவிலகும். உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. மூத்த சகோதரத்துக்கு மத்திமபலன். (7,10) உரிய குரு 4இல் கேதுவுடன் இருப்பது தோசம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (8,9) உரிய சனி இரண்டில் இருப்பது பிதாவுக்கு கூடாது. பூர்வீக சொத்து கைமாறாக்கூடும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை சஞ்சரிப்பதால் வாரமத்தியில் நல்ல பலன் உண்டு. ராசியில் இரு சுபக்கிரகமும் ஒரு பாபக்கிரகமும் இருப்பதால் தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். பிரயாண வாய்ப்புண்டு. இரண்டுக்குரிய சூரியன் 12இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (3,12) உரிய புதன் ராசியில் நல்ல பலனைக் கொடாது. சயன சுகம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (4,11) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. தாய் நலம். வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் இருக்கும். (5,10) உரிய செவ்வாய் 9இல் நல்ல பலனைச் செய்யும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (7,8) உரிய சனி ராசியில் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 11 இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். மன அமைதி இருக்கும். பிரயாணவாய்ப்பு உண்டு. (2,11) உரிய புதன் 12இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கு கூடாது. (3,10) உரிய சுக்கிரன் 12இல் நல்ல பலனைச் செய்வார். தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 8இல் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 12இல் இருப்பது நல்ல பலன் இல்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவிலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். 71/2 சனி ஆரம்பமாவதால் சனீஸ்வர வழிபாடு செய்ய தீயபலன் குறையலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 11இல் இருப்பது விசேஷம். மேலும்சனியின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பிரயாண வாய்ப்புண்டு. (2,9) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. (4,7) உரிய குரு ராசியில் கேதுவோடு இருப்பது தோசம். தாய்க்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (5,6) உரிய சனி 11இல் இருப்பதுவிசேஷம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். பகைவர் நண்பராவர். உடல் ஆரோக்கியம் உண்டு. 12க்குரிய சூரியன் 10இல் இருப்பது விசேஷம். சயன சுகம் உண்டு. ராகு, கேதுகளுக்கு இடையில் எல்லாக்கிரகமும் அடங்குவது கூடாது. குரு வழிபாடு ஆறுதல் தரும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலனைச் செய்யாது. இருப்பினும், புதனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். மன அமைதி இருக்காது. பிரயாணவாய்ப்பு உண்டு. (2,7) உரிய செவ்வாய் 6இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. (3,6) உரிய குரு 12இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகை விலகும். இளைய சகோதரத்துக்கு கூடாது. (4,5) உரிய சனி 10இல் மத்திம பலனைச் செய்யும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு கூடாது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 10ஆம் வீட்டில் மூன்று கிரகங்கள் இருப்பது தொழில்துறை முன்னேறும். (9,12) உரிய புதன் 10இல் நல்ல பலனைச் செய்யாது. பிதாவுக்கு கூடாது. சயன சுகம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 5இல் நல்ல பலனைச் செய்யாது. மேலும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பதில் பயன் இல்லை. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 9இல் இருப்பது 8ஐவிட நல்லது. 10ஐ விட பலன் குறைவு. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. இளைய சகோதரத்துக்கு மத்திமமான பலன். (7,12) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. 10க்குரிய சூரியன் 8இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசிநாதன் செவ்வாயை குருபார்ப்பது நல்லது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுவுடன் இருப்பது தோசம். இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (2,3) உரிய சனி 8இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (5,12) உரிய செவ்வாய் 4இல் ராகுவுடன் இருப்பது தோசமானது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். சயன சுகம் இருக்காது. (6,11) உரிய சுக்கிரன் 8இல் நல்ல பலனைச் செய்வார். உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். நண்பர்களுக்கு நல்லது. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (7,10)உரிய புதன் 8இல் நல்ல பலனைச் செய்யாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. 9க்குரிய சூரியன் 7இல் இருப்பது பிதாவுக்கு கூடாது.

**மகரம்: உத்தராடம்2,3,4,.திருவோணம்,.அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. பிரயாணவாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. சயன சுகம் உண்டு. (4,11) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விசேஷம். தாய் நலம். வாகன சுகம் உண்டு. நண்பர்கள் உதவி செய்வர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய சுக்கிரன் 7இல் நல்ல பலனைச் செய்யாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 7ஆம் வீட்டில் இரு சுபக்கிரகங்கள் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. உயரிய புதன் 7இல் நல்ல பலனைச் செய்யார். பிதாவுக்கு கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு.

**இவ்வார 'ராசிபலன்' 11-07-2005 முதல் 17-07-2005வரை**

**பொ. சந்திரன்**

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி. 1,2,3.**

(1,12) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பு. தொடங்கும் காரியங்கள் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பு. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (2,11) உரிய குரு 8இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கு கூடாது. (3,10) உரிய செவ்வாய் இரண்டில் ராகுவோடு இருப்பது தோசமானது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (4,9) உரிய சுக்கிரன் 6இல் நல்ல பலனைச் செய்யாது. பெற்றோருக்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. 7க்குரிய சூரியன் 5இல் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பை பாதிக்கலாம். குரு வழிபாடு செய்வது ஆறுதல் தரும்.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| செவ் ராகு | | | சூரியன் |
| | செவ்வாய் ரேவதி புதன்<br>சுக்கிரன் பூசம் சனி<br>புதன் பூசம் சனி | | சுக் புதன் சனி |
| | சூரியன் புனர்பூசம் குரு<br>குரு அத்தம் சந்திரன்<br>சனி புனர்பூசம் குரு | | |
| | | | குரு கேது |

ஆனி 27 முதல் ஆடி 4 வரை

சந்திரன் இடபம் முதல் கடகம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதே. ராகு, கேதுக்களின் தொடர்பு கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது தோசமானது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு கூடாது. (4,7) உரிய புதன் 5இல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய் நலம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. 6க்குரிய சூரியன் 4இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. (11,12) உரிய சனி 5இல் இருப்பதில் பயன் இல்லை. சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை.

# ஒரு ரோஜாப்பூ கண்ணீர் சிந்துகிறது!....

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''நான் அவரைச் சந்திக்க வேணும். அவர் தோளில் சாஞ்சு ஓ என்று அழவேணும். தனிமை என்னை வதைக்கத் தொடங்கியது. இனியும் கொளுகொம்பில்லாமல் என்னால் இருக்கமுடியாது. முதல்ல அவரை சந்திச்சிட்டுத்தான் மற்றதைப் பற்றிச் சிந்திக்கணும்....''

ரயில் மெதுவாக வேகத்தைக் குறைத்தது. அந்த ரயில் நிலையத்தில் நின்றது. மலையகத்துக்கே உரிய அந்த சுகமான குளிர் அவள் மனதில் பரவசத்தை ஏற்படுத்தியது.

அவள் ரயில் நிலையத்தைவிட்டு வெளியே வந்தாள். பஸ் நிலையத்தை அடைந்தாள். குறிப்பிட்ட பஸ்ஸில் ஏறினாள். பஸ் மலைப் பாதையில் வளைந்து வளைந்து சென்றது. அவள் இறங்க வேண்டிய இடம் வந்தது. அவள் தாய் தந்தை இப்போது உயிரோடில்லை. அங்கே போய் பயனில்லை. என்வே அவள் கால்கள் செழியன் இருக்கும் லயனை நோக்கி நடத்தன. சுமார் பத்து நிமிட நடையின் பின் அவள் பணியக் கணக்கு லயனை அடைந்தாள். அப்போது அவளெதிரே செழியனின் தங்கை தெய்வானை எதிர்ப்பட்டாள்.

''அட.. நீங்க செல்வி தானே.....''

;''ஆமா... நீ.....''

''என்னை அடையாளம் தெரியலையா. இவ்வளவு நாளைக்கப்புறமும் உங்களை சரியா அடையாளம் தெரிஞ்சுக்கிட்டேன்... நான் தான் தெய்வானை.. செழியனோட தங்கை...''

''தெய்வானையா நீ ஆளே மாறிப் போயிட்டியே.. ஆமா அண்ணன் எங்கே....''

''..........''

''என்ன பதிலையே காணோம்.....''

''என்னத்தை சொல்லுறது எந்நேரமும் உங்களைப் பற்றியேதான் பேசுவாரு... நீங்க வேற ஊருக்கு மாற்றலாகி போனதுக்கப்புறம் ரொம்ப சோகமாக இருந்தாரு, அப்புறம் ஒருமாதிரி மனசைத் தேற்றிக்கிட்டு சேவை அது இது என்று ஓய்வு ஒழிச்சலில்லாமல் உழைச்சாரு. தப்பித்தவறி ஓய்வு கிடைச்சா படுக்கையில சாய்ஞ்சிக்கிட்டு விட்டத்தையே பார்த்துக்கிட்டிருப்பாரு. அவரை அறியாமலேயே கண்களில் கண்ணீர் வடியிறதைப் பார்த்து நானே எனக்குள்ளே அழுது இருக்கேன். நீங்க அவரைவிட்டு போயிருக்கக் கூடாது. அவரு உங்க மேலே உயிரையே வச்சிருந்தாரு...''

''தெய்வானை வளவளஎன்று பேசிக்கிட்டிருக்காதே. எனக்கு அவரை உடனடியாக பார்க்கணும். இப்போ அவரு எங்கேயிருக்காரு....''

''நீங்க அவரைப் பார்க்கணுமா... அப்போ என்னோட வாங்க....''

''ஐயோ தெய்வானை அவரைக் காட்டுறேன் என்று சொல்லிவிட்டு இப்போ என்னை சுடுகாட்டுக்குக் கூட்டிட்டு வந்திருக்கியே... எனக்கு தலை சுத்துது'... மயக்கம் வரும் போல இருக்கு....''

''மனசை திடப்படுத்துங்க. இனி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி எதுவும் நடக்கப் போறதில்லை. போன வருஷம் இதே நாளில் மின்னாமல் முழங்காமல் மாரடைப்பால எங்கண்ணன் இறந்து போயிட்டாரு....''

''ஐயோ தெய்வானை என்னடி சொல்லுறே....''

''ஒரு வருஷமா? ரெண்டு வருஷமா? உங்களுக்காக முப்பது வருஷம் காத்திருந்தாரு.. நீங்க வருவீங்க என்ற நம்பிக்கையில உங்களோட வருகைக்காக வழிமேல் விழி வைத்து காத்திருந்தாரு. அவர் தேடின போது நீங்க வரலை. ஆனா அவர் உயிர் உடலை விட்டு ஓடினப்புறமா வந்திருக்கீங்க. உங்களோட கடமைக்காக உங்க மேலே உயிரையே வச்சிருந்தவரின் காதல் பயிரை அழிச்சிட்டீங்களே. நான் அவருக்கு ஒரே சகோதரி. என்னோட கல்யாணத்தை நல்லபடியா அமைச்சி குடுத்துட்டு அவர் மட்டும் கடைசி வரை தனிமரமாகவே இருந்துட்டாரு. அவர் சாவுறதுக்கு முதல்நாள் கூட நான் அவரோடதான் இருந்தேன். அப்போ கூட அவர் என்ன சொன்னார் தெரியுமா. 'பாவம் செல்வி, ரொம்ப நல்லவ. அவள் நிலைமையில் நானிருந்தாக் கூட இப்படியான முடிவத்தான் எடுத்திருப்பேன், ஆனாலும் அவள் நிச்சயமா என்னைத் தேடி வருவாள்'ன்னு சொன்னாரு. ஆனா அப்போவெல்லாம் வாராத நீங்க அவர் மறைஞ்ச நாளில வந்திருக்கீங்களே. நான் என்ன செய்வேன். கடைசிவரை தனியாகவே வாழ்ந்து எந்த உறவுமே இல்லாமல் இந்த உலகத்தை விட்டே போயிட்டாரே..''

சொல்லிவிட்டு அழுதாள். கைகளினால் தலையை அடித்துக் கொண்டு அழுதாள். பெற்றோர் மறைந்தபோது கூட இப்படி அவள் அழுததில்லை. இந்த ஐம்பத்தைந்து வயதிலும் தளராமலிருந்த அவள் மனம் இப்போது தவித்தது. வேதனையால் தத்தளித்தது.

இத்தனை வருடங்கள் அவள் செழியனைப் பற்றி சிறிதும் யோசிக்காமல் கடமை, கடமை என இருந்துவிட்டாள். கடமை காதலின் சக்தியை மறைத்து மழுங்கடித்துவிட்டது. செழியன் அவளையே நினைத்திருந்தான். ஆனால் அவள் காலம் கடந்துதான் அவனை நினைத்தாள்.

இனி அழுது என்ன நடக்கப் போகிறது. மலர்களின் ராஜாக்களான ரோஜாக்கள் அழுவதில்லை. ஆனால் இதோ இங்கே ஒரு ரோஜா இடைவெளியில்லாமல் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (கணா)
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND
Telephone:- 0041 - 043. 3179137 - 9

# வீதி அபிவிருத்திக்கு என வீதிக்கு வந்த புசல்லாவ

தமிழர்கள் என்றாலே அரசியல்வாதிகளுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் வேண்டாத ஒரு பொருளாகவே தெரிகின்றனர். அதிலும் மலையகத் தமிழர்கள் என்றால் இந்த அதிகாரிகளுக்கு எட்டிக்காயைப்போல் கசக்கிறது.

மலையகத்தின் பொருளாதாரத்தை அழிக்க வேண்டும் என்ற சதித்திட்டம் ஒன்று மறைமுகமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றதோ என்ற சந்தேகம் இப்போது படிப்படியாக [illegible]ர்ஜிதப்படுத்தப்பட்டு வருகின்றது.

## மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

மலையகத்தோர் என்றால் எல்லோருமே தோட்டத் தொழிலாளர்களாகவும், கூலித் தொழிலாளர்களாகவும் மட்டுமே இருக்க வேண்டும் என இந்த அதிகாரிகள் கருதுகின்றனர்.

வர்த்தகர்களாகவோ, தொழில் அதிகாரிகளாகவோ வளர்ந்துவிடக்கூடாது என்பதே இந்த அரச அதிகாரிகளின் நோக்கம்.

இதனை எப்படியாவது திட்டம் போட்டுத் தட்டிவிட வேண்டும், அவர்களை மீண்டும் தலை எடுக்கவே விடக்கூடாது எனத் தருணம் பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இதற்கு மலையகத்தில் நடந்த சம்பவங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

கந்தப்பளை தமிழ் வர்த்தகர்கள் செறிந்த நகரம். அங்கே தூண்டிவிடப்பட்ட இனக்கலவரம் அங்குள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்களை தீக்கிரையாக்கியது. இன்றும் கூட அவர்களுக்கு உரிய நட்ட ஈடுகள் இதுவரை கிடைக்காமல் இருப்பதாக அப்பிரதேச வர்த்தகர்கள் புலம்புகின்றனர்.

அதேபோன்று மற்றும் ஒரு நகரமான பொகவந்தலாவையில் 53 கடைத் தொகுதிகள் சாம்பலாகிவிட்டன. அவர்களுடைய நிலையும் அதோ கதியாகிவிட்டது.

இப்பொழுது வீதி அபிவிருத்தி என்ற பெயரில் கண்டி மாவட்டத்தில் உள்ள பிரதான தமிழ் நகரங்களில் ஒன்றான புசல்லாவை நகரில் அரசாங்க அதிகாரிகள் கை வைத்துள்ளனர்.

நுவரெலியா– கம்பளை வீதி விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்காக புசல்லாவையில் அமைந்துள்ள தமிழர்களுக்குச் சொந்தமான கட்டடங்களை இடித்துத் தள்ளும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முனைகின்றனர்.

வீதி விஸ்தரிக்கப்படுவதையோ, அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையோ புசல்லாவை தமிழ் வர்த்தகர்கள் எப்போதும் எதிர்க்கவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு தமது முழு ஆதரவையும் வழங்கி வருகின்றனர்.

நியாயமான வீதி விஸ்தரிப்புக்காக காலம் காலமாக தாம் வர்த்தகம் புரிந்துவரும் கடைக் கட்டடங்களில் ஒருசிறு பகுதியை விட்டுக்கொடுக்கவும் உடன்பட்டனர்.

உடைக்கப்படும் கட்டடங்களுக்கு நியாயமான நட்ட ஈடுகள் வழங்கப்படும் என உடபலாத்த பிரிவு அரசாங்க அதிபர் உத்தரவாதம் அளித்து அதற்கான ஆவணங்களிலும் கை ஒப்பம் வழங்கி உள்ளார்.

ஆனால் இவை எல்லாம் ஒரு மோசடி என்பது இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

உண்மையாகவே அளந்து அடையாளமிடப்பட்டவை இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டுள்ளனவாம்.

புசல்லாவை நகரில் உள்ள தனி வர்த்தகர் ஒருவர் தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி புசல்லாவை தமிழ் வர்த்தகர்களின் தலை எழுத்தையே மாற்றி அமைத்துவிட்டாராம்.

ஏற்கனவே இடப்பட்ட அடையாளங்கள் எல்லாம் மாற்றி அமைக்கப்பட்டு விட்டனவாம். கடமையைச் செய்ய வேண்டிய அதிகாரிகள் இந்த வர்த்தகரின் கைப் பொம்மைகளாகச் செயற்படுகின்றனராம்.

இந்த வர்த்தகரின் கடைகள் புசல்லாவை நகரில் இரண்டு பக்கங்களிலும் அமைந்துள்ளன. ஆனால் இவருக்கு நன்மை அளிக்கும் வகையில் அந்த இடங்களின் பாதைகள் குறுகலாக அமைக்கப்பட்டுள்ளனவாம்.

அதேவேளை, வழமையாகவே பாதைகள் அமைக்கப்படும் போது பாதையின் கீழ்ப் பகுதியில்(பள்ளத்தில) இருக்கும் கடைகளோ கட்டடங்களோ இடிக்கப்படுவதில்லை.

வீதியின்(வங்கியான) மேல் பகுதியில் உள்ள உறுதியான பகுதிகள்தான் இடித்து விஸ்தரிக்கப்படுவது வழமை மட்டுமல்ல பொறியியலாளர்களின் சிபார்சும் கூட. ஆனால் இந்த வர்த்தகரின் ஆலோசனையின் பேரில் வீதியின் கீழ்ப்பக்கம் உள்ள கடைகள் இடிக்கப்படுவதற்கு அடையாளம் இடப்பட்டுள்ளனவாம்.

இந்த அநீதிகள் தொடர்பாக அரசாங்க அதிபருக்கு பலமுறை முறைப்பாடுகள் செய்தும் ஏதும் பயன் அளிக்கவில்லை.

பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் ஏக்க நாயக்க, மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை இயக்குனர் எம்.துரைசாமி ஆகியோரை சந்தித்த புசல்லாவை வர்த்தகர்கள் தமது குறைகளை எடுத்துக் கூறியுள்ளனர்.

இயக்குனர் துரைசாமி நேரடியாக புசல்லாவைக்கு வந்து பார்வையிட்டுள்ளார்.

அங்கு இடம்பெற்றுள்ள தில்லுமுல்லுகளைக் கண்டறிந்து, வர்த்தகர்களின் புகார்கள் நியாயமானவை என ஊர்ஜிதப்படுத்தி உள்ளார்.

முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதை ஏற்றுக்கொண்ட இயக்குனர் துரைசாமி ஆரம்பத்தில் அடையாளம் இட்டபடியே வீதி அபிவிருத்திப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும், பாதிப்புகளுக்கு ஏற்ப நியாயமான நஷ்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதாகவும் உறுதி அளித்துவிட்டுச் சென்றுவிட்டார்.

'வர்த்தகர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்ததுதான் மிச்சம். ஆனால் அந்த அரசியல் செல்வாக்கு பெற்ற வர்த்தகரின் கட்டடம் பெயருக்கு மட்டும் முற்பகுதி சிறிது இடிக்கப்பட்டு பெருமளவில் நஷ்டஈடு வழங்கப்பட்டது என்னவோ உண்மையாகிவிட்டது.

இப்போது பழைய குருடி கதவைத்திறவடி என்ற மாதிரி இந்த அதிகாரிகள் புதிதாக அடையாளம் இட்டபடியே கடைகளை உடைக்கப்போவதாக பயமுறுத்தல் விடுகின்றனராம்.

அபிவிருத்தி என்ற பெயரில் பச்சை அநியாயம் ஒன்று இடம்பெறுகிறது. பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் கூட இந்த வர்த்தகர்கள் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் எல்லாமே பிரயோசனமற்றதாகிவிட்டன.

தனிப்பட்ட ஒரு மனிதனுக்காக முழு புசல்லாவை நகரமுமே அலங்கோலப்படுத்தப்பட்டுள்ளது. இடித்தும், இடிக்காமலும் இருக்கும் கட்டடங்களில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் உயிராபத்துக்களை எதிர்நோக்கி பீதியுடன் இருக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி என்ற பெயரில் வர்த்தகர்கள் நடுவீதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுப்பது யார்?

# ஆளாக்கியவரையே ஆழம்பார்க்கின்றனர்

## டேஸ்ட்கடை தணிகாசலம்



'வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்கின்றன என்பது நம்ம தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்குத்தான் சரியா இருக்கு' என்று கூறிக்கொண்டே அப்பாவு தலைவர் தணிகாசலம் அண்ணனின் வீட்டுக்குள் நுழைந்தார்.

"என்ன தல்லவரே! பெரிய தலைவரைப் பத்திப்பேசிக்கிட்டு வந்தமாதிரி இருக்கு" என்று கேட்டுக்கொண்டே அப்பாவு தலைவரை வரவேற்றார் தணி அண்ணன்.

"வேறு என்னாங்க அண்ணே! போன வாரம் பதுளைக்குப் போனப்போ அங்கே நடைபெற்ற மகளிர் மாநாட்டைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது"

"அப்படியா சங்கதி! அதுசரி. நம்ப மலையக இளம் பெண்களுக்குப் பல்வேறு துறைகளில் பயிற்சி அளிப்பதாக இந்தியாவில் இருந்து பல பெண்கள் வந்து இருந்தாங்களாமே"

"ஆமாங்க, நம்ப தலைவர் ஆறுமுகமா சொக்கா! எங்கள் பிள்ளைகளையும் சமுதாயத்தில் ஒரு உயர்ந்த இடத்துக்குக் கொண்டு வர வேண்டும் என படாதபாடுபடுகின்றார். ஹைதராபாத்தில் இருந்து பல லட்சம் செலவிட்டு அல்லவா கொண்டுவந்துள்ளார் அதை நம்ப பிள்ளைகள் பயன்படுத்திக்கொண்டால் சரி"

"வேறு என்னமோ சொல்ல வந்தீங்களே"

"அடடா நம்ப கவிதை வேறு பக்கம் திரும்பிவிட்டது [illegible] மாநாட்டில் தம்பி [illegible] சொன்னார்."

"அப்படி என்ன விஷேசமா சொல்லிப்புட்டாரு?"

"அதாவது இ.தொ.கா.வை விட்டு ஐந்து உப தலைவர்கள் ஒட்டுமொத்தமாகப் போனார்கள். அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை. ஆயிரம் பேர் போனாலும் இ.தொ.கா.வை அசைக்க முடியாது என்றார்"



"என்ன தலைவரே தம்பி இப்படிப்பேசிய வேகம் குறையும் முன் இந்த பைசல் முஸ்தபா குட்டையைக் குழப்பிவிட்டாரே"

"அதைச் சொல்லத்தானே வந்தேன். இந்த பைசல் முஸ்தபா யார் என்று கூட யாருக்கும் தெரியாது. [illegible] முஸ்தபாவின் லேபலை வைத்துக்கொண்டு இ.தொ.கா.வுக்குள் நுழைந்தார். இந்தத் தம்பி அவரை அந்த சபைக்கும், இந்த சபைக்கும் உப தலைவராக்கி கடைசியில் இ.தொ.கா.வுக்கே உப தலைவராக்கிவிட்டார்.

இவ்வளவும் செஞ்சது பத்தாது என்று ஜனாதிபதியிடம் சண்டைபிடித்து பிரதி அமைச்சர் பதவியையும் வாங்கிக்கொடுத்துவிட்டார்.

இவர் வந்தபோது என்ன சொன்னார் [illegible] இ.தொ.கா.வுக்கு [illegible] தம்பிக்கு என்று அல்லவா [illegible]."

ஆனால் இப்ப என்ன சொல்கிறார் பார்த்தீங்களா? 'தலைவர் ஆறுமுகன்... பாகுபாடாகச் செயற்படுகிறார். மலையகத்தில் முஸ்லிம்கள் இல்லையா? சிங்களவர்கள் இல்லையா? தனிப்பட்ட முறையில் மலையகப் பாடசாலைகளில் இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மட்டும் எப்படி ஆசிரியர் நியமனம் வழங்க முடியும்' என்று கேள்வியும் அல்லவா கேட்கின்றார்.

கேள்வி கேட்டதோடு நின்றுவிடவில்லை. பாத்த அளவில் போராட்டம் நடத்தப்போவதாகவும் ஜனாதிபதியிடம் பேசப்போவதாகவும் அல்லவா சவால் விட்டுள்ளார்

பாவம் தம்பியிடம் சவால் விட்டவர்கள் எல்லாம் எட்ரஸ் இல்லாமல் போய்விட்டனர். இந்த பைசல் எம்மாத்திரம்?"

"அதுசரிங்க தலைவரே! கல்வி அபிவிருத்தியில் மலையகம் மிகவும் பின்தங்கியுள்ளது. தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெரும் சீரழிவை ஏற்படுத்தி உள்ளது. ஆசிரிய நியமனங்களும் வேறு அரச நியமனங்களும் மலையக இளைஞர், யுவதிகளுக்கு கிடைப்பதே இல்லை. நம்ம தம்பி படாதபாடுபட்டு நம்ம தோட்டத்து பிள்ளைகளுக்கு தொழில் பெற வழி செய்துள்ளார். அதுவும் கெஸட் பண்ணப்பட்டுவிட்டது. இப்ப என்னடா என்றால் இந்த முஸ்தபா குட்டையைக் குழப்பி இதையும் நாசமாக்கப்போறார் போல இருக்கு"


"அண்ணே அதைப்பத்தி கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. எவராலும் குழப்பியடிக்க முடியாது என்று தம்பி .. அடித்துக்கூறிவிட்டார்."

"என்னமோ தலைவரே. நம்ப தலைவர் எல்லாவற்றையும் வளர்த்துவிடுவார். கடைசியில் அவருக்கே [illegible] ஆரம்பித்துவிடுகின்றனர். [illegible] இவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும்" என்று கூறி தணி அண்ணன் விடை பெற்றார்.

# ஜூனியர் கென்னடி – டயானா இரகசிய சந்திப்பு

## ஒருநாள் இரவு உல்லாச உறவு







காதல் சாம்ராஜ்யம் ஒன்றைத் தனக்கெனக் கட்டி எழுப்பி அதில் உல்லாசமாக உலாவந்தவர் இளவரசி டயானா. மறைந்தும் மறையாத இந்த காதல் இளவரசி லட்சோப லட்சம் அன்பு உள்ளங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அவரது காதல் கதைகள் தொடர்ந்தும் சர்வதேசத்தை பரபரப்புக்குள்ளாக்கி வருகின்றன. காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எப். கென்னடியின் மகன் ஜூனியர் கென்னடி. அவருடன் ஒருநாள் டயானா உல்லாசமாக உறவு கொண்டார் என்றொரு செய்தி அண்மையில் வெளியாகி சர்வதேசத்தை மீண்டும் ஒரு முறை வியப்பில் ஆழ்த்தி இருக்கிறது.

பல்வேறு ஆண்களுடன் காலத்துக்குக் காலம் டயானா அனுபவித்த உல்லாச வாழ்க்கை பற்றி அவரது நெருங்கிய தோழியான சிமோன் சைமன்ஸ் செய்திகள் வெளியிடுவது வழக்கம். அவர்தான் இப்போதும் டயானா – ஜூனியர் கென்னடி உடலுறவு பற்றிய செய்தியையும் அவிழ்த்துவிட்டு அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளார்.

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எப்.கென்னடியையும் 'காதல் மன்னன்' என்றே உலகம் அழைத்தது. மார்லின் மன்றோ என்ற ஹொலிவுட் நடிகையுடன் அவர் கொண்டிருந்த இரகசியக் காதல் பற்றி அவ்வப்போது கிளுகிளுப்பான செய்திகள் பல வெளியாகின. தனது தந்தையார் மார்லின் மன்றோவுடன் கட்டில் சுகத்தைப் பகிர்ந்து கொண்ட அதே ஹோட்டலில் தான் ஜூனியர் கென்னடியும் டயனாவுடன் உல்லாசமாக ஒரு இரவைக் கழித்து இருக்கிறார்.

பாரிஸில் கார்விபத்தொன்றில் டயானா 1997இல் பலியானார். அவர் மறைந்து இருவருடங்களின் பின்னர் ஜூனியர் கென்னடியும் விமானவிபத்தொன்றில் உயிரிழந்தார்.

பஞ்சணை சுகத்தை பகிர்ந்து கொள்வதில் ஜூனியர் கென்னடி நிகரற்ற ஒருவர் என்று புகழாரம் சூட்டி இருக்கிறார் டயானா. அத்துடன் அவரது காதல் லீலைகளுக்கு நூற்றுக்கு நூறு புள்ளிகளும் கொடுத்திருக்கிறார். இது மட்டுமா? தாம் இருவரும் அந்த மறக்க முடியாத இரவில் காம வெறியில் மயங்கிக் கிடந்ததாகவும் தனது தோழியிடம் தெரிவித்து இருக்கிறார் அவர்.

டயானா – சாள்ஸ் பிரிந்து இருந்த காலத்தில் 1995ஆம் ஆண்டு இந்த ஜோடியின் சந்திப்பு இடம்பெற்றது. அமெரிக்காவில் மான் ஹட்டனில் உள்ள உல்லாச ஹோட்டலேயே இவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டனர். ஜூனியர் கென்னடி அப்போது 'ஜோர்ஜ்' என்றொரு சஞ்சிகையை நடத்திக் கொண்டு இருந்தார். அந்த சஞ்சிகைக்கு ''பேட்டி'' ஒன்றை டயானாவிடமிருந்து பெறுவதற்கு அவர் முயற்சித்தார். இதற்கான வேண்டுகோளை நிராகரித்த டயானா கென்னடியை சந்திப்பதற்கு மட்டும் ஒப்புக்கொண்டார்.

கென்னடி ஜூனியர் டயானாவைச் சந்திக்க அவரது அறையில் நுழைந்தபோது அவர்களது கண்கள் சந்தித்தன. ஆண்மை துள்ளி விளையாடும் அந்தக் கம்பீரமான தோற்றத்தில் டயானா தன்னையே இழந்துவிட்டார்.

''நாங்கள் கதைக்கத் தொடங்கினோம். ஒரு விடயத்தில் இருந்து இன்னொரு விடயத்துக்கு எங்கள் கதை நகர்ந்தது. பல்வேறு விடயங்கள் அலசப்பட்டன. இறுதியில் நாங்கள் இருவரும் கட்டிலில் காதல் இன்பத்தை பகிர்ந்து கொண்டோம்.'' – இப்படி டயானா தனது தோழி சைமன்ஸிடம் கூறியிருக்கிறார்.

லண்டனுக்குத்திரும்பிய டயானா ஜோதிடர் ஒருவரிடம் ஜூனியர் கென்னடியின் சாதகத்தைத் தயாரிக்கும்படி கேட்டு தங்களுக்கிடையே உள்ள பொருத்தம் எப்படி என்று கேட்டிருக்கிறார். அவர் கூறியவற்றில் இருந்து தங்கள் உறவு நீடிக்கக் கூடியதல்ல என்ற முடிவுக்கு வந்தாராம் டயானா.

''ஜூனியர் கென்னடியுடன் நான் அனுபவித்த அந்த இரவு என் மீது என்னையே விருப்பம் கொள்ள வைத்த, நானும் ஒரு பெண் என்று என்னை நினைக்க வைத்த ஒரு இரவாக அமைந்தது'' – என்று சொல்லியிருக்கிறார் டயானா.

''டயானாவுக்கும் ஜூனியர் கென்னடிக்கும் இடையில் உருவான இந்த உறவு பற்றி டயானா என்னிடம் விபரித்துக் கொண்டு இருந்தபோது நான் பெரும் ஆச்சரியத்துக்குள்ளானேன். திறந்தவாய் மூடாது அவர் சொல்லியதைக் கேட்டுக்கொண்டு இருந்தேன்.

''எனது உணர்ச்சிகளை அடக்கமுடியவில்லை. 'நீ நகைச்சுவைக்காக எனக்கு இப்படி எல்லாம் சொல்கிறாய்? இல்லையா?'–என்று டயானாவிடம் கேட்டேன். ''இல்லை இல்லை உண்மையைத்தான் சொல்கிறேன். அவர் ஒரு காதல் மன்னன். அவருக்கு 'நூற்றுக்கு நூறு புள்ளிகள்.'– இப்படி டயானா பதிலளித்தார்'' என்று சொல்கிறார் அந்த தோழி.

இவர்கள் இருவரும் சந்தித்து தமது காதலைப் பரிமாறியபோது ஜூனியர் கென்னடிக்கு வயது 34. டயானாவுக்கு 33. டரில் ஹன்னா என்றொரு நடிகையுடனும் அப்போது ஜூனியர் கென்னடிக்குத் தொடர்பு இருந்தது. அத்துடன் ஒரு வாழ்க்கைத் துணையையும் தேடிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் இரவு மட்டும் இருவரும் காதலின் அணைப்பில் அகமகிழ்ந்திருந்த போதும் தமது தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ள வில்லை. ஜூனியர் கென்னடியின் கனவிலேயே டயானா மிதந்து கொண்டு இருந்தார். ஆனால் காலப்போக்கில் இருவரும் திருமணம் செய்துகொள்வது சாத்தியமாகாது என்பதை டயானா உணர்ந்து கொண்டார். ஜூனியர் கென்னடியும் கரோலின் என்றொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார்.

தனது திருமணத்தின் பின்பும் ஜூனியர் கென்னடி பல அழகிய பெண்களுடன் உறவு வைத்துக்கொண்டார். தன்னுடைய பெண் தோழிகளைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி ஜோன்.எப்.கென்னடி அந்த ஹோட்டலில் ஆடம்பர வீடொன்றை வைத்திருந்தார். அதே ஹோட்டலில் மகன் ஜூனியர் கென்னடி டயானாவைச் சந்திப்பார் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார். எதிர்பாராத விதமாகவே அந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

டயானாவுக்கும் பல காதல் தொடர்புகள் இருந்தன. அவரைப்பற்றி வெளிவந்த காதல் கிசுகிசுக்கள் ஏராளம். இளவரசர் சாள்ஸ் – டயானா விவகாரத்தின் பின்னர் டயானாவுக்கும் டொடிபாயிட் என்ற கோடீஸ்வரருக்கும் இடையில் நிலவிய உறவு உலகப்பிரசித்திபெற்றது. 1997ஆம் ஆண்டு தனது 36 ஆவது வயதில் டயானா பாரிஸில் பாயிட்டுடன் பயணம் செய்து கொண்டிருந்த 'கார்' விபத்தில் சிக்கியது. டயானா மரணமானார். அவரது மரணச்செய்தி உலகத்தின் கண்களையே கண்ணீரால் நனைத்தது.

## பல்சுவைப் பக்கம்

# காளை வயசு கட்டான ஆசை

தன்னுடைய மாணவர்களில் ஒருவனுக்கு ஆசிரியை ஒருவர் வகுப்பறையில் வைத்து ஏனைய மாணவர்கள் முன்னிலையில் முத்தம் கொடுத்தார்.

இந்த சுவாரஸ்ய சம்பவம் இங்கிலாந்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்றுள்ளது.

முத்தம் கொடுத்த ஆசிரியையின் வயது 24. மாணவனுக்கு வயது 15.

அந்த மாணவனின் எடுப்பான தோற்றம், கம்பீரமான நடை, வெட்கப்படாமல் தைரியமாகப் பேசும் சுபாவம் ஆகியவை அவன் மீது அந்தப் புவியியல் ஆசிரியையை மையல்கொள்ள வைத்தன.

குறிப்பிட்ட மாணவனுக்குத் தண்டனை கொடுப்பதுபோல் பாடசாலை முடிந்தபின்னர் அவனை வகுப்பில் இருந்து பாடங்களைப் படிக்கச் சொல்வாராம் இந்த ஆசிரியை. அந்த நேரம் பார்த்து வகுப்பில் நுழைந்து கொள்வார் அவர். இந்தப் போலித் தண்டனை இருவரும் தனிமையில் பொழுதைக் கழிப்பதற்கு போதுமான சந்தர்ப்பத்தைக் கொடுத்தது.

ஒருநாள் புவியியல் பாடம் நடந்து கொண்டுஇருந்தபோது அவனை சிறிய அலுமாரி ஒன்றில் இருந்த புத்தகம் ஒன்றை எடுக்குமாறு பணித்த ஆசிரியை பின்னர் தானும் சென்று அவனுடன் சேர்ந்து கொண்டார். இரண்டு நிமிடங்களுக்கு மேல் இருவரும் இதழ்களில் முத்தங்கள் பரிமாறிக் கொண்டனர்.

தனது மாணவனுடன் தகாத முறையில் நடந்துகொண்டதாகக் கூறி இந்த ஆசிரியை மீது வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கில் தன் மீது இவ்விடயத்தில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆசிரியை நிராகரித்தார். வீடியோ தொடர் பொன்றின் ஊடாக சாட்சியம் அளித்த அந்த மாணவன், ஆசிரியைக்கும் தனக்கும் இடையில் நெருங்கிய காதல் உறவு இருந்ததை ஏற்றுக்கொண்டான்.

''உனக்கு வயது 15 மட்டுமே'' என்று எனது ஆசிரியை எனக்குச் சொல்ல ''நான் விரைவில் 16 வயதுடையவன் ஆகிவிடுவேன்'' என்று பதில் அளித்தேன்.

''உன்னை நான் விரும்புகிறேன்'' என்று சொல்லி அவர் எனக்கு முத்தம் தந்தார்.

''ஒருநாள் அவர் பள்ளிக்கூடத்துக்கான பொருட்கள் இருக்கும் அறையில் இருந்து வகுப்புக்குத் தேவையான பொருட்கள் சிலவற்றை எடுத்து வருமாறு திறப்பையும் தந்து என்னை அனுப்பினார். நான் பொருட்களை எடுத்துக் கொண்டு நின்றபோது அவரும் வந்து சேர்ந்தார். இருவரும் சில நிமிடங்கள் முத்தங்கள் பரிமாறிக் கொண்டோம்''– இப்படி அவன் தொடர்ந்து கூறினான்.

அந்த ஆசிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் அவருக்கு 12வருட சிறைத்தண்டனை அளித்துத் தீர்ப்பளித்தது.

# அழகு ராணி



சாபோலோ நாட்டில் அண்மையில் நடைபெற்ற மாடல் அழகு ராணிப் போட்டியில் பங்குபற்றிய அழகு ராணி ஒருவரையே படத்தில் காண்கிறீர்கள்.

# கவிதைப் பூங்கா

### புதுமைப் பெண்

நான் சிலநேரம்
நீயாகலாம்
என்று நினைப்பது
உன் தவறு.
நீ நீயாகவே
இருந்துகொள்.
நானும் நானாகவே
இருக்க விரும்புகிறேன்.
உனக்குள் நானும்
எனக்குள் நீயும்
வாழலாம்.
எனக்குள் நீ
எஜமானனாகவும்
உனக்குள் நான்
அடிமையாகவும்
வேண்டாம்.
எனக்குள்ளும்
உணர்வுகள் பொதிந்து
கிடக்கின்றன.
எனது உணர்வுகளை
உரிமைகளை
அநப்பங்கரையினுள்
தீய்க்க
என்னால் முடியாது!.
நீ நீயாகவே
வாழ்ந்துகொள்.
நான் நானாகவே
வாழவிரும்புகிறேன்.
முகத்தில்
முடி முளைப்பதால்
ஆணவச் செருக்கு
உனக்கு.
இருபத்தோராம்
நூற்றாண்டின்
புதுமைப்பெண் என்ற
புதுத் தெளிவு
எனக்கு.
இனியும்
அடிமைச் சங்கிலியுடன்
ஆடவனது
அடிமையாய்
நான் வாழ
விரும்பவில்லை.
ஆதலால்
நான் நானாகவே
வாழ விரும்புகிறேன்.
நீ
நீயாகவே
வாழ்ந்துகொள்.

***கல்லடி றொபேட்,***
***களுத்துறைச்சிறை***

### காதல் கனவுகள்

ஆயிரம் கனவுகள்
ஆனந்தம் தந்திட
ஆனந்த இரவுகள்
ஆராரோ சொல்லிட
என்னவளின்
நினைவினிலே
என்றென்றும்
நானிருந்தேன்
காலங்கள் ஓடியது
காதலோ வளர்ந்தது
என் கவி பாடும்
இதயமதில்
பண்பானவள்
என்றிருந்தேன்.
பரிதவிக்க
வைத்துவிட்டாள்
பாவை என
நானிருந்தேன்.
பாதியிலே
பிரிந்துவிட்டாள்.
காதல் கனவுகள்
என்று நான்
தேற்றிக்கொண்டேன்.

***எஸ்.விஜயன்,***
***யாழ்.பல்கலைக்கழகம்.***

### தொலைத்துவிட்டேன்

*பெண்ணே!*
*உன்னை*
*பிடித்துப்போனதால்*
*படிப்பே*
*வெறுத்துப்போனது.*
*காதல் மோகத்தால்*
*கல்வி கல்லானது.*
*இப்போது*
*கல்வியைக் கலைத்து*
*காதலியைத்*
*தொலைத்து*
*நடைபிணமாய்*
*நடைபாதையிலே...!*
*வெற்றி வாழ்க்கை*
*இன்று வெற்று*
*வாழ்க்கையானதால்*
*இன்றோ நாளையோ*
*எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்*
*உன்னையல்ல*
*யமனை...!*

அ.ரவி.
மட்டக்களப்பு.

### பதில் சொல்

நீ ஒன்றும்
பெரிய அழகென்று
நானொன்றும்
பெரிய பொய்
சொல்ல மாட்டேன்.
ஆனாலும்
உன்னோடு
வாழ்ந்தால்தான்
நானொரு
அழகியாவேன்.
நீ
ஒன்றும்
ஏகபத்தினி
விரதனில்லைதான்.
ஆனாலும்
உன்னோடு
ஒரு சீதையாய்
உறவாட
உள் மனதில்
ஓர் ஏக்கம்.
இரும்புகளையே
ஸ்பரிசம் செய்த
நீ
ரோஜாவை வருட
நியாயமில்லைதான்.
ஆனாலும்
உன்
வன் கரங்களை
என்
மெல்லுதடுகளால்
மீட்டிப்பார்க்க முடியும்.
ரத்தத்தோடு பேசிய
உனக்கு
காதல் யுத்தம்
பற்றி அறிய
காரணம்
இருக்காதுதான்.
ஆனாலும்
கணப்பொழுதில்
உன்னை
ஒரு காவியத்
தலைவனாக்க
என்
கண்களால் முடியும்
நீ
சம்மதம் தந்தால்!

***கு.மகாலக்ஷ்மி***
***மிருசுவில்.***

### முற்றுப்புள்ளி

பிரியமானவனே...!
நீ
அருகில்
இருந்தபோது
இல்லாத
பாசம்
நீ
பிரிந்தபோது
ஏற்பட்டதுதான்
மாயமான
விந்தை!
எம்
உடம்பில்
ஓடும்
ஊமையான
எம்
காதலுக்கு
முற்றுப்புள்ளி
வைப்பது
நீயா...?
நானா...?

ஜி.கலா,
யாழ்.பல்கலைக்கழகம்.

### நீயே சொல்

கொஞ்சம்
கொஞ்சமாய்
உன்னை
வெறுக்கத் துடிக்கும்
என் மனசுக்குள்
மீண்டும்
மீண்டும் நீ
அனுமதியின்றி
நுழையும்போது
என் இதயக்கதவை
எந்தப் பூட்டால்
நான் பூட்டுவது?
நீயே
சொல்லிவிடு!

***எஸ்.நிலா,***
***கொழும்பு.***

### கலைஞன்

உன் கால்களை படைத்ததில்
பிரமன் ஒரு சாரதி.
உன் இடையைப் படைத்ததில்
பிரமன் ஒரு கஞ்சன்.
உன் மார்பை படைத்ததில்
பிரமன் ஒரு வள்ளல்.
உன் இதழைப் படைத்ததில்
பிரமன் ஒரு ஓவியன்.
உன் கண்களைப் படைத்ததில்
பிரமன் ஒரு கவிஞன்.
மொத்தத்தில் உன்னைப் படைத்த
இறைவன் ஒரு கலைஞன்.

வெ.செல்வநாதன்,
தெப்பட்டான்.

### பெண்மை

காவியத்தில்
மட்டுமா பெண்
பற்றிப் பேச்சு?
அன்று பாரதியார்
கண்ட
புதுமைப் பெண்
இன்று
விளம்பரத்தில்
காட்சிப்பொருளா?
பெண்
விடுதலைக்கு
மேடையில் வேஷம்
வீட்டிலே
துவம்சமா?
அடுத்தவருக்காக
தன்னையே
அர்ப்பணிக்கும்
பெண்ணுக்கு
இந்த உலகம்
கொடுக்கும்
சன்மானம்
இதுதானா?
என்று மாறும்
பெண்ணின்
இந்த
இழிவு நிலை?

***எஸ்.வதனி,***
***வத்தளை.***

## சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

*படத்தில் காணப்படும் பெண்ணின் பெயர் தய்யுசய்க்ன். அவரது தலைமுடியைப் பார்த்து வாயைப் பிளக்கிறீர்களா? அதன் நீளம் 4.2 மீட்டர். அதாவது 14 அடிகள். கிழக்கு சீனாவின் ஷிஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த டாங்கியாங் நகரில் தனது தலை முடியை பார்வையாளருக்குக் காட்டி மகிழ்கிறார் தய்யுசய்க்ன்.



* கணவர் கிளின்டனின் காதல் வாழ்க்கையை வைத்து ஹிலாரி புத்தகம் எழுதிவெளியிட, அது பல கோடி டொலர்களை அவருக்கு வாரிக் குவித்ததுடன் உலக நாடுகள் மத்தியில் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்திவிட்டது.

மனைவி ஹிலாரி வழியில் கிளின்டனும் 'சுயசரிதை' எழுத தொடங்கியுள்ளார். இப்போதே இந்த புத்தகத்திற்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டுள்ளது. 'என் வாழ்க்கை' என்ற தலைப்பில் இந்த சுயசரிதை நூலை அவர் எழுதியுள்ளார். 900 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் முதல் பதிப்பில் 15லட்சம் பிரதிகள் வெளியிடப்படுகின்றன. இதற்காக இதுவரை 60கோடி ரூபா வரை முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவிக்குப் பிறகும் கோடிகளை குவிக்கும் ஒரே உலகத் தலைவர் பில்கிளின்டனாகத்தான் இருக்க முடியும்.

*தன்னுடைய 82 வயதிலும் நடித்துக் கொண்டும், இயக்கிக் கொண்டும் இருக்கிறார் ஹொலிவுட் ஹீரோ 'கிளின்ட் ஈஸ்ட்வுட்'. இவரது சமீபத்திய படமான 'மில்லியன் டொலர் பேபி' திரைப்படம் இந்த வருடத்துக்கான ஒஸ்கார் பரிசு பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இத் திரைப்படத்தின் கதாநாயகி 'ஹிலரி ஸ்வாங்'கிற்கு சிறந்த நடிகைக்கான விருது கிடைக்கவுள்ளது. இந்த வயதிலும் இயக்கம், நடிப்பு, தயாரிப்பு என அவரது கதை தொடர்கிறது.



* இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் எடையைக் குறையுங்கள். புகைப் பழக்கத்தை உடனே நிறுத்துங்கள். உப்பு, ஊறுகாய், கருவாடு, அப்பளம், சிப்ஸ் போன்ற எண்ணெய்ப் பண்டங்களை தவிர்த்து விடுங்கள். வெண்ணெய், நெய், சொக்லேட், இறைச்சி, முட்டை போன்ற கொழுப்புச் சத்து மிகுந்த பொருட்களையும் தவிர்த்து விடுங்கள். இவை ரத்தக் குழாய்களை அடைத்துக் கொண்டு இருதய வியாதிகளை உண்டு பண்ணக்கூடும். தொடர்ச்சியாக உடற்பயிற்சி செய்வது மிகவும் நல்லது.


சிவப்பு விளக்கு
மெல்ல
நிறம் இழக்கிறது!
கறுத்த இரவுகள்
தொலைந்து போகின்றன!
முதன் முதலாய்
மனிதன் உயிரை உணர்கின்றான்!
முதன் முதலாய்
மனிதன்
காமத்திற்காக
வருந்துகிறான்!
இப்படி காமத்திற்கும்
ஒரு வேகத் தடையாய் வந்திருப்பது
எய்ட்ஸ்!



*67 வயதுடைய மூதாட்டி ஒருவர் கர்ப்பமுற்று இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார். இவர் ருமேனிய நாட்டைச் சேர்ந்தவர்.

இவரது பெயர் அத்ரியானா லியெஸ். சத்திர சிகிச்சையின் மூலமே இந்த இரட்டைக் குழந்தைகள் பிரசவிக்கப்பட்டன.

இந்தக் குழந்தைகள் ஒவ்வொன்றும் 1 கிலோ 450 கிராம் நிறை உடையவை. பிரசவம் நடந்து சில மணி நேரங்களில் இரண்டு குழந்தைகளில் ஒன்று மரணமடைந்துவிட்டது. மற்றைய குழந்தைக்கு எலிஸா மரியா எனப் பெயரிடப்பட்டுள்ளது.



ஏண்டா, எங்களையெல்லாம் லொறியிலேயே பிச்சிக் கூட்டிப்போய் வந்துட்டீங்களே?!
முதல் தடவை என்று விட்டுட்டேன். அடுத்த தடவை ஏ.ஸி. பஸ்ஸில கூட்டிக்கொண்டு போக வேணும்.
இப்பிடிச் சொல்லாமே நடக்கிறதே வேறு!




தன்னுடைய இயற்கைச் சூழலை விட்டு வெளிவந்து தன் இனத்தவர்களைக் காணாது கவலையோடு இருக்கும் இந்த யானைக்கு பொழுது போக்குக்காக தன்னைப் பார்க்க வந்தவர்களைச் சிரிக்க வைக்க வேண்டிய நிர்ப்பந்தம். மிருகக்காட்சிச் சாலைக்கு வந்தோரை வணக்கம் சொல்லி அது வரவேற்கும் காட்சியே இது.


**HOTEL WESTEERN (PVT) LTD**




Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**

T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com



**திருகோணமலையில்...**

**சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை**

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
85, ... கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



மீண்டும் புதுப் பொலிவுடன்......

உங்களின் இக்காலத் தெரிவுக்கு....



# குமரகுரு





**புடவை அழகுப்பொருள் வாணிபம்**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

**KUMARAKURU TEXTILE & FANCY HOUSE**

**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்**

Yarl Road, Kilinochchi. Tel: 021 228 5971 யாழ் சாலை, கிளிநொச்சி



யாழ். நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்!

அழகிய புடவைத் தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

நாளைய நாகரிகத்தை நாம் இன்றே அறிமுகப்படுத்துகின்றோம்

ஒரு முறை விஜயம் செய்துபாருங்கள் உண்மை புரியும்.



**GREEN PALACE EMPORIUM**

# கிறீன் பலஸ் எம்போறியம்



பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.



**EXPOAIR** *your friend in the skies...*

**எக்ஸ்போ எயார்** வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் - கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3. வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com





இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, ... 2005, ஜூலை 10 ஆம் திகதி வெளியிடப்பட்டது.